# 11th Advanced Tamil Unit 1 Questions

## 1] கவிதையியல்

1) கூற்று: ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.

காரணம்: கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.**

2) தவறான கூற்றை தெரிவு செய்க

A) அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

B) பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறியது – புறநானூறு

C) தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவது – குறுந்தொகை

**D) சங்ககாலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை**

**விளக்கம்: சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாவிய அறிஞர்களால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள், கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.**

3) "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா" என்ற வரிகள் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?

A) சீவகசிந்தாமணி

**B) மணிமேகலை**

C) சிலப்பதிகாரம்

D) கம்பராமாயணம்

**விளக்கம்: "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை ஆவது" – மணிமேகலை**

**மாந்தருக்கு அறமே நிலையானது என்பது மேற்காணும் செய்யுள் மூலம் உணர்த்தப்படுகிறது.**

**மனிதருக்கு இளமை, உடல், செல்வம், புதல்வர் இவையெல்லாம் நிலையில்லை. ஆனால் அறம் நிலையானது என்று மேற்காணும் மணிமேகலை காப்பியத்தில் சிறைசெய்காதையின் வரிகள் உணர்த்துகிறது.**

4) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

**A) பள்ளு**

B) கோவை

C) உலா

D) அந்தாதி

**விளக்கம்: பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதிய வடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின.**

**1. கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன.**

**2. பள்ளி, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பின.**

5) கூற்றுகளை ஆராய்க.

1. உரையோடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை காப்பியக் கவிதைகள்.

2. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும் பாடிச் செல்கின்றன. உரையோடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, பசியின்றி வாழ்தல், வாழ்வின் நிலையாமை எனக் காப்பியக் கவிதையின் தளம் பரந்துபட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் காப்பியம் மணிமேகலை ஆகும்.**

6) தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், கீழ்க்காணும் எதன் வழியாகவே கிளை விரிக்கின்றன?

A) கதை

**B) கவிதை**

C) நாட்டுப்புறப்பாடல்

D) இலக்கியம்

**விளக்கம்: கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிக்கின்றன.**

7) புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் திகழ்ந்தது எது?

A) நாட்டுப்புறப்பாடல்கள்

B) பக்திப்பாடல்கள்

**C) தனிப்பாடல்கள்**

D) மரபுக்கவிதைகள்

**விளக்கம்: புவலர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. சிலேடை, விடுகதை, சொற்புதிர் போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டுகளாக நமக்குக் கிடைக்கின்றன.**

8) கூற்றுகளை ஆராய்க.

1. தமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம்.

2. பாரதியார்தாம் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம்.**

**2. பாரதியார்தாம் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார்.**

9) காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம். தமிழ்மொழிவளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று கருதியவர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) கண்ணதாசன்

**D) தொல்காப்பியர்**

**விளக்கம்: காலத்திற்கு காலம் செய்யுள் வடிவில் மாறறங்கள் நேரலாம். தமிழ்மொழிவளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதிய தொல்காப்பியர்,**

**"விருந்தே தானும் புதுவது புனைந்த**

**யாப்பின் மேற்றே"**

**என்று 'விருந்து' என்பதைப் 'புதுமை' என்னும் பொருளில் கூறியுள்ளார்.**

10) மக்களாட்சித் தத்துவங்களை தமது பாடல்களில் வலியுறுத்தியவர் யார்?

A) பாரதியார்

B) ந.பிச்சமூர்த்தி

**C) பாரதிதாசன்**

D) கவிமணி

**விளக்கம்: எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். புவியை நடத்து, பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர் பாரதிதாசன் ஆவார்.**

11) தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் 'புதுக்குரல்கள்' என்னும் நூல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடகத்திலும் கீழ்க்காணும் யாரைப் பின்பற்றியது?

A) பாரதிதாசன்

**B) பாரதியார்**

C) ந.பிச்சமூர்த்தி

D) வாணிதாசன்

**விளக்கம்: தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் 'புதுக்குரல்கள்' என்னும் நூல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடகத்திலும் பாரதியைப் பின்பற்றியது. 24 கவிஞர்களால் எழுதப்பட்ட 63 கவிதைகளைக் கொண்டது.**

12)"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குறுந்தொகை

**B) புறநானூறு**

C) நற்றிணை

D) அகநானூறு

**விளக்கம்: எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,**

**"……………………………………….**

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" – புறநானூறு.**

13) பொருந்தாதவரை தேர்வு செய்க.

A) வல்லிக்கண்ணன்

B) வேணுகோபாலன்

C) சி.மணி

**D) புதுமைப்பித்தன்**

**விளக்கம்: மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே.துரைசாமி(நகுலன்), தருமுசிவராமு(பிரமிள்), சி.மணி, சுந்தரராமசாமி(பசுவய்யா), எஸ்.வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.**

**ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராசகோபலன், க.நா.சுப்பிரமணின், புதுமைப்பித்தன் – மணிக்கொடி இதழ்**

14) கூற்றுகளை ஆராய்க.

1. தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும்.

2. உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும்.**

**2. உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.**

15) கூற்று: ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.

காரணம்: மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.**

16) கூற்றுகளை ஆராய்க.

1. உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது.

2. பொருள் உணர்த்தும் முறைகளில் படிமம் முதலிடம் பெறுகிறது.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது.**

**2. பொருள் உணர்த்தும் முறைகளில் உவமை முதலிடம் பெறுகிறது.**

17) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற கவிதைக்காக எப்போது சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது?

A) 1976

**B) 1978**

C) 1988

D) 1986

**விளக்கம்: புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – வல்லிக்கண்ணன் – 1978.**

18) கூற்றுகளை ஆராய்க.

1. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல் என்கிறோம்.

2. சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியே நாட்டுப்புறப் பாடல்கள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) **இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல் என்கிறோம்.**

**2. சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியே நாட்டுப்புறப் பாடல்கள்.**

19) ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட கவிஞர் யார்?

A) புதுமைப்பித்தன்

**B) மீரா**

C) ஞானக்கூத்தன்

D) அப்துல்ரகுமான்

**விளக்கம்: ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட கவிஞர் மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்ட அக்கவிதைகள், 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.**

20) "மதில்மேல் பூனை

இரண்டு பக்கமும்

நாய்கள்" என்ற கவிதையை எழுதியவர் யார்?

A) தமிழன்பன்

B) மீரா

C) ஞானக்கூத்தன்

**D) அமுதபாரதி**

**விளக்கம்: "மதில்மேல் பூனை**

**இரண்டு பக்கமும்**

**நாய்கள்" – அமுதபாரதி**

21) கூற்றுகளை ஆராய்க.

1. கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற வடிவங்கள் மரபுக்கவிதையுடன் தொடர்புடையது.

2. பதினெண் மேல்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை ஆகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற வடிவங்கள் மரபுக்கவிதையுடன் தொடர்புடையது.**

**2. பதினெண் மேல்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை ஆகும்.**

22) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) டி.கே.துரைஸ்வாமி– நகுலன்

B) தருமுசிவராமு– பிரமிள்

C) சுந்தரராமசாமி– பசுவய்யா

**D) மேற்காணும் யாருமில்லை**

**விளக்கம்: டி.கே.துரைஸ்வாமி – நகுலன்**

**தருமுசிவராமு– பிரமிள்**

**சுந்தரராமசாமி– பசுவய்யா**

23) வானம்பாடி இதழ் எப்போது எங்கிருந்து வெளிவந்தது?

A) 1970, சென்னை

B) 1970, கோவை

C) 1971, சென்னை

**D) 1971, கோவை**

**விளக்கம்: 1971–இல் கோவையிலிருந்து 'வானம்பாடி' இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா.காமராசன், மு.மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைகொண்டான், அக்னிபுத்திரன், சக்திகனல், சிதம்பரநாதன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க கவிஞர்களாவர்.**

24) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு

B) மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை.

C) ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.

**D) தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்க வேர்கள் தமிழ் இலக்கியங்களின் வழியாகவே கிளை விரிக்கின்றன.**

**விளக்கம்: கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு**

**மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை.**

**ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.**

**தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்க வேர்கள் தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிக்கின்றன.**

25) எந்த காலகட்டத்தில் அப்துல்ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதினர்?

A) எழுத்து

B) மணிக்கொடி

**C) வானம்பாடி**

D) கசடதபற

**விளக்கம்: வானம்பாடி காலகட்டத்தில் அப்துல்ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதினர்**

26) "பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்

அழகென்னும் கிளியை அழைத்தேன்

ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்

அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்" – என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) அப்துல் ரகுமான்

B) பாரதியார்

**C) ந.பிச்சமூர்த்தி**

D) பாரதிதாசன்

**விளக்கம்: "வாழ்க்கையும் காவிரி**

**அதிலெங்கும் கிளிக்கூண்டு**

**வார்த்தையே மணல்**

**ஓசையே ஜலம்**

**என் தீராத வேட்கையே**

**குவிக்கும் விரல்கள்**

**பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்**

**அழகென்னும் கிளியை அழைத்தேன்**

**ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்**

**அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்" – ந.பிச்சமூர்த்தி**

27) கூற்றுகளை ஆராய்க.

1. 'கசடதபற' இதழ் வெளிவந்த காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.

2. மணிக்கொடி இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 'கசடதபற' இதழ் வெளிவந்த காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவரக்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.**

**2. எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது.**

28) கீழ்க்கண்டவர்களில் பொருந்தாதவர் யார்?

A) முடியரசன்

B) வாணிதாசன்

C) சுரதா

**D) பாரதிதாசன்**

**விளக்கம்: பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.**

29) பொருந்தாதவரை தேர்வு செய்க.

**A) வல்லிக்கண்ணன்**

B) நா.பிச்சமூர்த்தி

C) கு.ப.ராசகோபலன்

D) புதுமைப்பித்தன்

**விளக்கம்: மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே.துரைசாமி(நகுலன்), தருமுசிவராமு(பிரமிள்), சி.மணி, சுந்தரராமசாமி(பசுவய்யா), எஸ்.வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.**

**ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராசகோபலன், க.நா.சுப்பிரமணின், புதுமைப்பித்தன் – மணிக்கொடி இதழ்**

30) "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா

வளவிய வான்பெரும் செல்வமும் நிலலா" என்ற வரியில் யாக்கை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) மனம்

B) பொருள்

**C) உடல்**

D) உயிர்

**விளக்கம்: "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**

**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**

**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**

**மிக்க அறமே விழுத்துணை ஆவது"– மணிமேகலை**

**மாந்தருக்கு அறமே நிலையானது என்பது மேற்காணும் செய்யுள் மூலம் உணர்த்தப்படுகிறது.**

**மனிதருக்கு இளமை, உடல், செல்வம், புதல்வர் இவையெல்லாம் நிலையில்லை. ஆனால் அறம் நிலையானது என்று மேற்காணும் மணிமேகலை காப்பியத்தில் சிறைசெய்காதையின் வரிகள் உணர்த்துகிறது.**

**இவ்வரியில் யாக்கை என்ற சொல்லின் பொருள் உடல்.**

31) எட்டுத்தொகையின் எந்த நூலில் தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப் பாடல் உள்ளது?

A) நற்றிணை

**B) குறுந்தொகை**

C) பதிற்றுப்பத்து

D) பரிபாடல்

**விளக்கம்: எட்டுத்தொகையின் குறுந்தொகை நூலில் தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப் பாடல் உள்ளது.**

32) "உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே" – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள் நூல் எது?

A) குறுந்தொகை

**B) புறநானூறு**

C) நற்றிணை

D) அகநானூறு

**விளக்கம்: எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,**

" ………………………………….

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரோ" – புறநானூறு.**

33) கூற்று: தமிழ் மொழியானது உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து போற்றப்படுகிறது.

காரணம்: தமிழ் மொழியின் கவிதை இலக்கியம்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை.**

34) பாரதிதாசன் பற்றிய கூற்றுகளில் பொருந்தாதது எது?

A) சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்று தனது பாடல் மூலம் வலியுறுத்தியவர்

**B) பழைய யாப்பு வடிவில் வெண்பாவை பாடியவர்**

C) மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர்.

D) சந்த அமைப்புகளிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர்.

**விளக்கம்: சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்று தனது பாடல் மூலம் வலியுறுத்தியவர்**

**பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரிய விருத்தங்களையும் பாடியவர்**

**மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர்.**

**சந்த அமைப்புகளிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர்.**

35) கூற்று: பாரதிதாசன் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார்.

காரணம்: தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் என்று பாடினார்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார்.**

36) "புவியை நடத்து, பொதுவில் நடத்து" என்று கூறியவர் யார்?

A) பாரதியார்

B) ந.பிச்சமூர்த்தி

**C) பாரதிதாசன்**

D) கவிமணி

**விளக்கம்: எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். புவியை நடத்து, பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர் பாரதிதாசன் ஆவார்.**

37) கூற்றுகளை ஆராய்க.

1. அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2. சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள், கலைகள், கல்வி, அரசியல், பொருளாதாரம், வணிகம், வேளாண்மை குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.**

**2. சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள், கலைகள், கல்வி, அரசியல், பொருளாதாரம், வணிகம், வேளாண்மை குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.**

38) சரியான வரிசையை தேர்வு செய்க.

**A) பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள்.**

B) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண்மேற்க்கணக்கு நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள்

C) பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள்

D) பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

**விளக்கம்: 1.பதினெண்மேற்கணக்கு நூல்கள்**

**2.பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

**3.பக்தி இலக்கியங்கள்,**

**4.சிற்றிலக்கியங்கள்.**

39) உலகின் பிறமொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளில் பொருந்தாதது எது?

A) தொன்மை

B) மரபு

**C) பிறமொழிச்சார்பு**

D) இடையறாத தொடர்ச்சி

**விளக்கம்: தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. உலகின் பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை.**

40) மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் காப்பியம் எது?

A) சிலப்பதிகாரம்

**B) மணிமேகலை**

C) இரட்டைக்காப்பியங்கள்

D) சீவகசிந்தாமணி

**விளக்கம்: மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் காப்பியம் மணிமேகலை ஆகும்.**

41) கூற்றுகளை ஆராய்க.

1. யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது.

2. புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் மணிக்கொடி இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது. இவை உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், சிலேடை, முரண், இருண்மை முதலான பல்வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டு, கவிஞனின் விரிசிந்தனைக்கேற்பப் புதுப்புது வடிவமெடுக்கிறது.**

**2. புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.**

42) பாரதிதாசன் கீழ்க்காணும் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை?

A) **சமுதாய விடுதலை**

B) சாதி ஒழிப்பு

winmeen.com

C) பெண் விடுதலை

D) தமிழ் வளர்ச்சி

**விளக்கம்: பாரதிதாசன், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.**

43) "ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ" – என்ற வரியில் உணர்த்தப்படும் கருத்து என்ன?

A) செல்வம் ஈட்டுதல் வேண்டும்

**B) ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது**

C) ஏழையாயினும் அறம் செய்தல் வேண்டும்

D) சமூகத்தில் ஆண், பெண் ஏற்றத்தாழ்வு கூடாது

**விளக்கம்: மேற்காணும் பாடல்வரிகள் பாரதிதாசன் எழுதிய வரிகள் ஆகும். இவ்வரியில் சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்று பாரதிதாசன் தமது பாடல் மூலம் வலியுறுத்தி கூறுகிறார்.**

44) கூற்றுகளை ஆராய்க.

1. 'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன் ஆவார்.

2. எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தது. புதுக்கவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன் ஆவார்.**

**2. எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தது. புதுக்கவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின.**

45) கூற்றுகளை ஆராய்க.

1. கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன.

2. பள்ளி, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பின.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதிய வடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின.**

**1. கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன.**

**2. பள்ளி, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பின.**

46) கூற்றுகளை ஆராய்க

1. இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள் தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.

2. ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) **இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள் தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.**

**2. ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.**

47) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் எந்த பா வகைமைகளில் அமையவில்லை?

A) வஞ்சிப்பா

B) கலிப்பா

C) ஆசிரியப்பா

**D) வெண்பா**

**விளக்கம்: அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும், ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை.**

48) "நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரோ" – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குறுந்தொகை

**B) புறநானூறு**

C) நற்றிணை

D) அகநானூறு

**விளக்கம்: எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,**

**"**
…………………………………….

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரோ" – புறநானூறு**

49) கூற்றுகளை ஆராய்க.

1. காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது.

2. நீரின்றி அமையாது உடல் – இளங்கோவடிகள்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக்கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன்மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்திமை மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.**

**2. உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர். இந்த உடலானது, உணவினாலானது, உணவு என்பது யாது? நிலத்தொடு நீர் சேர்வதுதான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல்குறித்துக் கூறி நீர்வளம் பெருக்க பாண்டியன் தலையங்கானத்துச் செறுவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறியதாக புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.**

50) "புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்

மிக்க அறமே விழுத்துணை ஆவது" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

A) சிலப்பதிகாரம்

**B) மணிமேகலை**

C) சீவகசிந்தாமணி

D) வளையாபதி

**விளக்கம்: "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**

**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**

**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**

**மிக்க அறமே விழுத்துணை ஆவது" – மணிமேகலை**

**மாந்தருக்கு அறமே நிலையானது என்பது மேற்காணும் செய்யுள் மூலம் உணர்த்தப்படுகிறது.**

**மனிதருக்கு இளமை, உடல், செல்வம், புதல்வர் இவையெல்லாம் நிலையில்லை. ஆனால் அறம் நிலையானது என்று மேற்காணும் மணிமேகலை காப்பியத்தில் சிறைசெய்காதையின் வரிகள் உணர்த்துகிறது.**

51) கூற்று: 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்கவிதையின் வடிவத்தில் மாற்றம் ஏற்பட்டது

காரணம்: 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சி

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகக் கவிதையின் வடிவத்திலும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது. தனிமனித வாழ்வியல், சமூக வாழ்வியல் போன்றவை நவீனக் கவிதைகளின் பாடுபொருள்களாயின. புதுக்கவிதை. ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ, குக்கூ என நவீன வடிவங்களிலும் தமிழ்க்கவிதைகள் பயணிக்கத் தொடங்கின.**

52) பாரதிக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.

B) மக்களோடு நேரடியாக பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார்

C) இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என மாற்றிக்கொண்டார்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.**

**மக்களோடு நேரடியாக பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார்**

**இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என மாற்றிக்கொண்டார்.**

53) கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில்நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல்கடற்கரையிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது – என்ற வரி கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

**A) தலைவிக்காக தலைவன் காத்திருத்தல்**

B) தலைவனுக்காக தலைவி காத்திருத்தல்

C) அமைச்சருக்காக மன்னன் காத்திருத்தல்

D) மன்னனுக்காக அமைச்சர் காத்திருத்தல்

**விளக்கம்: கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில்நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல்கடற்கரையிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது. அதுபோல, பெறற்கரியவளாகிய தலைவியைப் பெறும்பொருட்டுத் தலைவனின் நெஞ்சமும் வருந்தியிருந்ததாம்.**

54) பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரியவிருத்தங்களையும் பாடியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) புதுமைப்பித்தன்

D) கு.ப.ராசகோபாலன்

**விளக்கம்: மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களில் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரியவிருத்தங்களையும் பாடியவர் பாரதிதாசன் ஆவார்.**

55) 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்ற தொடருக்கு தொடர்பில்லாதவர் யார்?

A) அக்னிபுத்திரன்

**B) புதுமைப்பித்தன்**

C) மீரா

D) நா.காமராசன்

**விளக்கம்: 1971–இல் கோவையிலிருந்து 'வானம்பாடி' இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா.காமராசன், மு.மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைகொண்டான், அக்னிபுத்திரன், சக்திகனல், சிதம்பரநாதன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க கவிஞர்களாவர்.**

56) "வார்த்தையே மணல்
ஓசையே ஜலம்
என் தீராத வேட்கையே
குவிக்கும் விரல்கள்" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) அப்துல் ரகுமான்

**D) ந.பிச்சமூர்த்தி**

**விளக்கம்: "வாழ்க்கையும் காவிரி
அதிலெங்கும் கிளிக்கூண்டு
வார்த்தையே மணல்
ஓசையே ஜலம்
என் தீராத வேட்கையே
குவிக்கும் விரல்கள்
பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்
அழகென்னும் கிளியை அழைத்தேன்
ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்
அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்" – ந.பிச்சமூர்த்தி**

57) பொருந்தாதவர்களை தேர்வு செய்க

A) ஞானக்கூத்தன்

B) கலாப்பிரியா

C) கல்யாண்ஜி

**D) புதுமைப்பித்தன்**

**விளக்கம்: 1970இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.**

58) கூற்று: பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன.

காரணம்: பாரதி மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தினார்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: பாரதி வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர் ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடிய காலம். பாரதி அச்சூழலில் மொழியை மக்களுக்கான குரலாப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன.**

59) "விடிவு

பூமித்தோலில்

அழகுத்தேமல்" என்று விடியலைப் பற்றி படிமக் கவிதை எழுதியவர் யார்?

A) ந.பிச்சமூர்த்தி

B) அப்துல் ரகுமான்

C) பாரதிதாசன்

**D) பிரமிள்**

**விளக்கம்: "விடிவு**

**பூமித் தோலில்**

**அழகுத் தேமல்**

**கதிர்கள் கமழ்ந்து**

**விரியும், பூ**

**இருளின் சிறகைத்**

**தின்னும் கிருமி**

**வெளிச்சச் சிறகில்**

**மிதக்கும் குருவி" – பிரமிள்**

60) "நான் ஒரு உடும்பு

ஒரு கொக்கு

ஒரு ஒன்றுமேயில்லை" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) அப்துல்ரகுமான்

B) மு.மேத்தா

C) மீரா

**D) நகுலன்**

**விளக்கம்: "நான் ஒரு உடும்பு**

**ஒரு கொக்கு**

**ஒரு ஒன்றுமேயில்லை" – நகுலன்**

61) "அடடே

இந்தப்பழம் இனிக்கும்

ஏணியுடன் அதே நரி" என்ற கவிதையை எழுதியவர் யார்?

**A) தமிழன்பன்**

B) அமுதபாரதி

C) மீரா

D) சுரதா

**விளக்கம்: "அடடே**

**இந்தப்பழம் இனிக்கும்**

**ஏணியுடன் அதே நரி" – தமிழன்பன்**

62) லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதைகள் 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன. இதனை எழுதியவர் யார்?

A) மகாகவி

**B) மீரா**

C) தமிழன்பன்

D) அமுதபாரதி

**விளக்கம்: ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதியாகக் கொண்டு எழுதப்பட்ட அக்கவிதைகள், 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.**

63) வெற்றிக்கு அடித்தளமாக அமைவது தன்னம்பிக்கையே. ஒவ்வோர் இலையுதிர்கால வீழ்ச்சிக்குப் பிறகும் புதியதளிர்களோடு வரும் வசந்தகாலம் போல ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் வெற்றியின் தளிர்கள் தழைக்கும் என்ற நம்பிக்கையைப் பேசும் கவிதையை எழுதியவர் யார்?

A) சல்மா

B) இளம்பிறை

C) கல்யாண்ஜி

D) **இன்குலாப்**

**விளக்கம்: "புதுத் தளிர்களால்**

**கொண்டாடக் காத்திருக்கிறது தரு**

**ஒரு பாடலுடன் வரவிருக்கிறது குயில்**

**உடன் தளர்ந்து விழும் சருகுகளைத் தொடர்ந்து**

**ஒரு பழுப்பாடை தரித்து**

**என் பயணமும்**

**இலையுதிர் காலம் எனினும்**

**சருகாவதில்லை வேர்கள்" – இன்குலாப்.**

**வெற்றிக்கு அடித்தளமாக அமைவது தன்னம்பிக்கையே. ஒவ்வோர் இலையுதிர்கால வீழ்ச்சிக்குப் பிறகும் புதியதளிர்களோடு வரும் வசந்தகாலம் போல ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் வெற்றியின் தளிர்கள் தழைக்கும் என்ற நம்பிக்கையை மேற்காணும் செய்யுள் உணர்த்துகிறது.**

64) 'விருந்தே தானும் புதுவது புனைந்த

யாப்பின மேற்றே' என்ற வரியில் உணர்த்தப்படும் கருத்து என்ன?

**A) மொழி வளர்ச்சிக்காக மாற்றங்களை ஏற்றுக்கொள்ளலாம்**

B) விருந்தின் சுவைக்கு மாற்றங்களை ஏற்றுக்கொள்ளலாம்

C) விருந்து அளித்தல் என்பது அறத்தின் நோக்கம்

D) A மற்றும் B

**விளக்கம்: காலத்திற்கு காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம். தமிழ்மொழிவளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதிய தொல்காப்பியர்,**

**"விருந்தே தானும் புதுவது புனைந்த**

**யாப்பின் மேற்றே"**

**என்று 'விருந்து' என்பதைப் 'புதுமை' என்னும் பொருளில் கூறியுள்ளார்.**

65) பாரதியாருக்கு பொருந்தாத கூற்றை தெரிவு செய்க

A) மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர்.

B) இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின.

**C) பாரதியார் கவிதையை சமுதாய மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார்.**

D) பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன.

**விளக்கம்: மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர்.**

**இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின.**

**பாரதியார் கவிதையை சமூக மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார்.**

**பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன.**

66) "நாளும் கிழமையும்

நலிந்தோர்க்கு இல்லை

ஞாயிற்றுக்கிழமையும்

பெண்களுக்கில்லை" என்ற வரிகளை எழுதியவர் யார்?

**A) கந்தவர்வன்**

B) மாலதி மைத்ரி

C) சல்மா

D) அப்துல் ரகுமான்

**விளக்கம்: "நாளும் கிழமையும்**

**நலிந்தோர்க்கு இல்லை**

**ஞாயிற்றுக்கிழமையும்**

**பெண்களுக்கில்லை" – கந்தர்வன்**

67) எப்போது 'கசடதபற' என்னும் இதழ் வெளிவந்தது?

**A) 1970**

B) 1980

C) 1990

D) 1960

**விளக்கம்: 1970இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.**

68) "சித்து" என்ற சொல்லின் பொருள் என்ன?

A) சிறந்த

**B) அறிவு**

C) அறிவுடையோர்

D) மருத்துவத்தில் தேர்ந்தோர்

**விளக்கம்: "சித்து" என்ற சொல் அறிவு என்னும் பொருளைக் குறிக்கும். சித்தர் என்னும் சொல் அறிவுடையோர் என்ற பொருளைத் தரும்.**

69) "என்னை

எவரெஸ்டாகப் பார்க்கும்

எந்த ஊரின் பார்வையில்

என் வீழ்ச்சி

மிகப்பெரிய வீழ்ச்சியே

எனினும் இது இயல்பானது

தடுக்க முடியாதது

....என் வீழ்ச்சி

நீர்வீழ்ச்சியே" என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

A) மு.மேத்தா

**B) மீரா**

C) சுரதா

D) அப்துல் ரகுமான்

**விளக்கம்: "என்னை**

**எவரெஸ்டாகப் பார்க்கும்**

**எந்த ஊரின் பார்வையில்**

**என் வீழ்ச்சி**

**மிகப்பெரிய வீழ்ச்சியே**

**எனினும் இது இயல்பானது**

**தடுக்க முடியாதது**



winmeen.com

**....என் வீழ்ச்சி**

**நீர்வீழ்ச்சியே" – மீரா**

70) "……………………………….

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" – என்ற வரிகள் யார் யாரிடம் கூறியது?

A) ஔவையார், அதியமான்

**B) குடபுலியனார், பாண்டியன் நெடுஞ்செழியன்**

C) கோவூர்கிழார், நலங்கிள்ளி

D) நப்பசலையார், நெடுங்கிள்ளி

**விளக்கம்: எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,**

**"……………………………….**

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" – புறநானூறு**

71) கூற்றுகளை ஆராய்க.

1. பொதுவாகப் புதுக்கவிதை சொல்லலங்காரத்தை விரும்புவதில்லை.

2. மாறுபட்ட இருபொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும், நினைவிலும் நிற்கும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பொதுவாகப் புதுக்கவிதை சொல்லலங்காரத்தை விரும்புவதில்லை.**

**2. மாறுபட்ட இருபொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும், நினைவிலும் நிற்கும்.**

72) "என் கவிதை

கை குலுக்கும்

காலில் விழாது

உடுத்திக்கொள்ளும்

போர்த்திக்கொள்ளாது" – என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) நகுலன்

**B) மு.மேத்தா**

C) ஞானக்கூத்தன்

D) பிரமிள்

**விளக்கம்: "என் கவிதை**

**கை குலுக்கும்**

**காலில் விழாது**

**உடுத்திக்கொள்ளும்**

**போர்த்திக்கொள்ளாது" – மு.மேத்தா**

73) கூற்று: பாரதியார் தன் பெயரை 'ஷெல்லிதாசன்' என்று மாற்றிக்கொண்டார்.

காரணம்: ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: பாரதியார் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என்று மாற்றிக் கொண்டார்.**

74) பாரதியாரின் கவிதைகளில் கீழ்க்காணும் எது பாடுபொருளாக இல்லை?

A) தேசவிடுதலை

**B) மொழிவிடுதலை**

C) சமுதாய விடுதலை

D) பெண் விடுதலை

**விளக்கம்: பாரதியார் வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர் ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடிய காலம். பாரதி அச்சூழலில் மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன. இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாய விடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின.**

75) நகைப்புடன் கூடிய எள்ளல் – என்ற தொடருக்கு பொருத்தமானது எது?

**A) அங்கதம்**

B) குறியீடு

C) படிமம்

D) முரண்

**விளக்கம்: அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.**

76) ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை _________ஆகும்?

A) உவமை

B) உருவகம்

C) படிமம்

**D) குறியீடு**

**விளக்கம்: ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை குறியீடு ஆகும்.**

77) கூற்றுகளை ஆராய்க.

1. பதினென்மேல்கணக்கு நூல்கள் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பா வகையினால் அமைந்தவை.

2. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வெண்பா என்னும் யாப்பு வகைமையினால் அமைந்தவை.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பதினெண்மேல்கணக்கு நூல்கள் (அறம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு) ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பா வகையினால் அமைந்தவை.**

**2. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வெண்பா என்னும் யாப்பு வகைமையினால் அமைந்தவை.**

78) "தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது
ஞாயிறு நன்று, திங்களும் நன்று" என்ற வரிகளை எழுதியவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) நா.பிச்சமூர்த்தி

D) கவிமணி

**விளக்கம்: "தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,**
**ஞாயிறு நன்று, திங்களும் நன்று**
**வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.**
**மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது**
**கடல் இனிது, மலை இனிது, காடு நன்று" பாரதியார் – காட்சி என்னும் தலைப்பில் எழுதிய கவிதை.**

79) "வாழ்க்கையும் காவிரி

அதிலெங்கும் கிளிக்கூண்டு" என்ற வரியை எழுதியவர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) அப்துல் ரகுமான்

**D) ந.பிச்சமூர்த்தி**

**விளக்கம்: "வாழ்க்கையும் காவிரி**

**அதிலெங்கும் கிளிக்கூண்டு**

**வார்த்தையே மணல்**

**ஓசையே ஜலம்**

**என் தீராத வேட்கையே**

**குவிக்கும் விரல்கள்**

**பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்**

**அழகென்னும் கிளியை அழைத்தேன்**

**ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்**

**அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்" – ந.பிச்சமூர்த்தி**

80) கூற்று: பாரதியார் 'சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.

காரணம்: பாரதியார் சிந்து என்னும் கவிதை தொகுப்பை இயற்றினார்

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: பாரதியார் நாட்டுப்புறச் சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டார்.**

81) தமிழின் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதை எது?

A) சிந்து

**B) காட்சி**

C) விஞ்ஞானி

D) பெட்டிக்கடை நாரணன்

**விளக்கம்: பாரதியார்தாம் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளின் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது. இவர் 'காட்சி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை, தமிழில் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதையாகும்.**

82) "கதிர்கள் கமழ்ந்து

விரியும், பூ

இருளின் சிறகைத்

தின்னும் கிருமி

வெளிச்சச் சிறகில்

மிதக்கும் குருவி" என்ற வரியை எழுதியவர் யார்?

A) ந.பிச்சமூர்த்தி

B) அப்துல் ரகுமான்

C) பாரதிதாசன்

**D) பிரமிள்**

**விளக்கம்: "விடிவு**

**பூமித் தோலில்**

**அழகுத் தேமல்**

**கதிர்கள் கமழ்ந்து**

**விரியும், பூ**

**இருளின் சிறகைத்**

**தின்னும் கிருமி**

**வெளிச்சச் சிறகில்**

**மிதக்கும் குருவி" – பிரமிள்**

83) சொல்லுக்கும் அஃது உணர்த்தும் பொருளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றிருக்கும். படிப்பவர்தம் அறிவுக்கும் உணர்வுக்கும் அனுபத்திற்கும் ஏற்ப அது வெவ்வேறு பொருளைத் தரும் – என்ற தொடருக்குப் பொருத்தமான ஒன்றை தெரிவு செய்க.

A) சிலேடை

**B) இருண்மை**

C) அங்கதம்

D) படிமம்

**விளக்கம்: சொல்லுக்கும் அஃது உணர்த்தும் பொருளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றிருக்கும். படிப்பவர்தம் அறிவுக்கும் உணர்வுக்கும் அனுபத்திற்கும் ஏற்ப அது வெவ்வேறு பொருளைத் தரும் – இருண்மை.**

84) கீழ்க்காணும் எந்த இதழ் வெளிவந்த காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின?

A) எழுத்து

B) மணிக்கொடி

C) காலமேகினி

**D) கசடதபற**

**விளக்கம்: 1970இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.**

85) ஒன்றுக்கு ஒன்று எதிரானவந்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். மரபுக் கவிதைகளில் இது____________________என்று கூறப்படும்?

A) கூழை முரண்

B) எதுகை முரண்

C) மோனை முரண்

**D) தொடை முரண்**

**விளக்கம்: ஒன்றுக்கு ஒன்று எதிரானவற்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். இது மரபுக் கவிதைகளில் முரண்தொடை எனக் கூறப்படும். மாறுப்பட்ட இருபொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும். நினைவிலும் நிற்கும்.**

86) கூற்றுகளை ஆராய்க.

1. பாரதியார் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக்கொண்டு, உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைகக்கும் பாலமாகத் திகழ்ந்தார்.

2. 'பெட்டிக்கடை நாரணன்', 'விஞ்ஞானி' போன்ற கவிதைகளை ந.பிச்சமூர்த்தி எழுதினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாரதியார் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக்கொண்டு, உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைகக்கும் பாலமாகத் திகழ்ந்தார்.**

**2. 'பெட்டிக்கடை நாரணன்', 'விஞ்ஞானி' போன்ற கவிதைகளை ந.பிச்சமூர்த்தி எழுதினார்.**

87) "திண்ணை இருட்டில்

எவரோ கேட்டார்

தலையை

எங்கே வைப்பதாம்

என்று

எவனோ ஒருவன்

சொன்னான்

களவு போகாமல்

கையருகே வை" என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

**A) ஞானக்கூத்தன்**

B) மு.மேத்தா

C) நகுலன்

D) அப்துல்ரகுமான்

**விளக்கம்: "திண்ணை இருட்டில்**

**எவரோ கேட்டார்**

**தலையை**

**எங்கே வைப்பதாம்**

**என்று**

**எவனோ ஒருவன்**

**சொன்னான்**

**களவு போகாமல்**

**கையருகே வை" – ஞானக்கூத்தன்**

88) "சமரச வேசமிட்ட குரங்கினிடம்

அப்பத்தைப் பறிகொடுத்த

பூனைகள் நாம்" என்ற வரிகளை எழுதியவர் யார்?

**A) அப்துல் ரகுமான்**

B) பிரமிள்

C) ந.பிச்சமூர்த்தி

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "சமரச வேசமிட்ட குரங்கினிடம்**

**அப்பத்தைப் பறிகொடுத்த**

**பூனைகள் நாம்" – அப்துல் ரகுமான்**

89) முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையது எது?

A) உவமை

B) உருவகம்

**C) படிமம்**

D) குறியீடு

**விளக்கம்: உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது. முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகின்றது.**

90) மணிக்கொடி இதழ் வெளிவந்த காலகட்டத்தில் கீழ்க்காணும் எந்த இதழ் வசன கவிதைகளை வெளியிட்டன?

A) எழுத்து

**B) கிராம ஊழியன்**

C) குயில்

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: மணிக்கொடி இதழ் வெளிவந்த காலகட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.**

91) கூற்றுகளை ஆராய்க.

1. பாரதியாரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது.

2. சி.சு.செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாரதியாரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது.**

**2. சி.சு.செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது.**

92) ஒரு நதியை கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் உருவகப்படுத்தி பாடியவர் யார்?

A) மு.மேத்தா

B) இளம்பிறை

C) சல்மா

**D) கவிஞர் சிற்பி**

**விளக்கம்: "இது**

**நான் தவழ்ந்த கோரைப்பாய்**

**முகம் பார்த்த கண்ணாடி**

**என் காதலின் வீணை**

**நினைவுகளைப் பொதிந்து வைத்த**

**வெள்ளித்தாள்" – கவிஞர் சிற்பி.**

**ஒரு நதியை கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் உருவகப்படுத்தி கவிஞர் சிற்பி பாடியுள்ளார்.**

93) குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது எது?

**A) அங்கதம்**

B) குறியீடு

C) படிமம்

D) முரண்

**விளக்கம்: அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.**

94) லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். மீரா யார் எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்டார்?

A) **மகாகவி**

B) ஷெல்லிதாசன்

C) தமிழன்பன்

D) இரசூல் கம்சதோவ்

**விளக்கம்: ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதியாகக் கொண்டு எழுதப்பட்டஅக்கவிதைகள், 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.**

95) பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதைகளின் முன்னோடிகள் என்று குறிப்பிடப்படுபவர்களில் பொருந்தாதவர் யார்?

A) புதுமைப்பித்தன்

B) க.நா.சுப்பிரமணியன்

C) கு.ப.ராசகோபாலன்

**D) வல்லிக்கண்ணன்**

**விளக்கம்: பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி இதழில் புதுக்கவிதைகளை எழுதினர்.**

96) கீழ்க்காணும் எதில் கவிஞர் எவ்விதக் கட்டுபாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத் முடிகிறது?

A) மரபுக்கவிதை

**B) புதுக்கவிதை**

C) நாட்டுப்புறப்பாடல்

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: புதுக்கவிதையில் கவிஞன் எவ்விதக் கட்டுபாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத்த முடிகிறது. இதில் சமூக அவலங்கள், சமகால நிகழ்வுகள், எதிர்ப்பார்ப்புகள், இலக்குகள் என அனைத்தும் பாடுபொருள்களாகின்றன.**

97) லிமெரைக்கூ என்பது கீழ்க்காணும் எந்த பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?

**A) ஹைக்கூ கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது**

B) லிமெரிக் கவிதையின் மூவடி எல்லையையும், ஹைக்கூ கவிதையின் இயைபையும் கொண்டது

C) ஹைக்கூ கவிதையின் ஐந்தடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது

D) லிமெரிக் கவிதையின் ஐந்தடி எல்லையையும், ஹைக்கூ கவிதையின் இயைபையும் கொண்டது

**விளக்கம்: 'ஹைக்கூ' கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது லிமெரைக்கூ. இது வாழ்வியலை நகைச்சுவையோடு வெளிப்படுத்துவது. தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் ஈரோடு தமிழன்பன்.**

98) பாரதிதாசன் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

2. தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார்.

3.சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை

4. சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்று வலியுறுத்தியவர்.

A) 1, 4 சரி

B) 2, 3 சரி

**C) 1, 2, 4 சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.**

**2. தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார்.**

**3.சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.**

**4. சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்று வலியுறுத்தியவர்.**

99) ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் தரத்தினை மதிப்பிட கீழ்க்காணும் எது அடிப்படையாகும்?

A) நம்பிக்கைத் தளிர்கள்

B) இயற்கை மரபு

C) மனிதநேயம்

**D) அழகியல்**

**விளக்கம்: கவிதையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை. ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் தரத்தினை மதிப்பிட அதன் அழகியல் பதிவுகளே அடிப்படையாகும்.**

100) "வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது

கடல் இனிது, மலை இனிது, காடு நன்று" என்ற வரிகளை எழுதியவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) நா.பிச்சமூர்த்தி

D) கவிமணி

**விளக்கம்: "தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,**

**ஞாயிறு நன்று, திங்களும் நன்று**

**வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.**

**மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது**

**கடல் இனிது, மலை இனிது, காடு நன்று" பாரதியார் – காட்சி என்னும் தலைப்பில் எழுதிய கவிதை**

101) "கண்கள் பூக்கள் மீதிருக்க

மனம் தேடிப் போகிறது

வரைபட வீட்டின் தனிமையை" என்ற கவிதை வரியை எழுதியவர் யார்?

**A) சல்மா**

B) இளம்பிறை

C) கல்யாண்ஜி

D) இன்குலாம்

**விளக்கம்: "கண்கள் பூக்கள் மீதிருக்க**

**மனம் தேடிப் போகிறது**

**வரைபட வீட்டின் தனிமையை" – சல்மா**

102) "ஏடுகளில்

முன்பக்கத்தில்

அட்டையில்

பின்பக்கத்தில்

அடுப்பங்கரையில்" என்ற கவிதையை எழுதியவர் யார்?

A) கந்தர்வன்

**B) காசி ஆனந்தன்**

C) சுகிர்தராணி

D) சல்மா

**விளக்கம்: "ஏடுகளில்**

**முன்பக்கத்தில்**

**அட்டையில்**

**பின்பக்கத்தில்**

**அடுப்பங்கரையில்"– காசி ஆனந்தன்**

103) "எட்டாத தொலைவில் நின்று

பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்

உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி" என்ற கவிதை வரியை எழுதியவர் யார்?

A) கந்தர்வன்

B) காசி ஆனந்தன்

**C) சுகிர்தராணி**

D) சல்மா

**விளக்கம்: "எட்டாத தொலைவில் நின்று**

**பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்**

**உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி**

**காலணிகளற்ற பாதங்களை நனைக்க**

**என் கிராமத்தின் ஓவியம்**

**தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது**

**ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்" – சுகிர்தராணி**

104) 'புதுக்கவிதையின் தந்தை' என அறியப்படுபவர் யார்?

A) புதுமைப்பித்தன்

B) க.நா.சுப்பிரமணியன்

**C) ந.பிச்சமூர்த்தி**

D) வல்லிக்கண்ணன்

**விளக்கம்: ந.பிச்சமூர்த்தி 'புதுக்கவிதையின் தந்தை' என் அறியப்படுகிறார். மணிக்கொடி இதழ் வெளிவந்த காலகட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.**

105) "இது

நான் தவழ்ந்த கோரைப்பாய்

முகம் பார்த்த கண்ணாடி

என் காதலின் வீணை

நினைவுகளைப் பொதிந்து வைத்த

வெள்ளித்தாள்" என்ற வரியை எழுதியவர் யார்?

A) மு.மேத்தா

B) இளம்பிறை

C) சல்மா

D) **கவிஞர் சிற்பி**

**விளக்கம்: "இது**

**நான் தவழ்ந்த கோரைப்பாய்**

**முகம் பார்த்த கண்ணாடி**

**என் காதலின் வீணை**

**நினைவுகளைப் பொதிந்து வைத்த**

**வெள்ளித்தாள்" – கவிஞர் சிற்பி.**

**ஒரு நதியை கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் உருவகப்படுத்தி கவிஞர் சிற்பி பாடியுள்ளார்.**

106) 18–ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சுந்தரகவிராயரை ஆதரித்தவர் யார்?

**A) அருணாச்சலத்துரை**

B) முத்துசாமி

C) அழகிய சொக்கநாதர்

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: 18–ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் சுந்தரகவிராயர். உழவுத்தொழிலின் உயர்வை நன்குணர்ந்தவர். எட்டையபுரம் அருணாசலத்துரை, தையூர் முத்து முதலானோர் இப்புலவரை ஆதரித்துள்ளனர்.**

107) கீழ்க்காணும் எது பனிமலர் என்னும் கவிதை தொகுப்பில் இடம்பெறாத கவிதை?

A) "ஆயிரம் முட்கள் இருந்தும்

ஒரு தூண்டில் முள்ளிடம்

தோற்றுவிடுகிறது மீன்"

**B) "மிதித்து விடாதே**

**அழகாயிருக்கிறது**

**குழந்தையின் நிழல்"**

C) "குட்டிமீன்

கடித்துச் சென்றது

தூண்டில்காரன் காலை"

D) "நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்

விழித்ததும் வெட்ட வேண்டும்

இதே மரத்தை"

**விளக்கம்: "ஆயிரம் முட்கள் இருந்தும்**

**ஒரு தூண்டில் முள்ளிடம்**

**தோற்றுவிடுகிறது மீன்"**

**"குட்டிமீன்**

**கடித்துச் சென்றது**

**தூண்டில்காரன் காலை"**

**"நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்**

**விழித்ததும் வெட்ட வேண்டும்**

**இதே மரத்தை" – பனிமலர் என்னும் கவிதை தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள்**

**"மிதித்து விடாதே**

**அழகாயிருக்கிறது**

**குழந்தையின் நிழல்" – வைகறை**

108) அழகிய சொக்கநாதர் பற்றிய தவறான கூற்றை தெரிவு செய்க.

A) திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர்

B) இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை.

**C) இவர் 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.**

D) முத்துசாமி என்பவரால் ஆதரிக்கப்பட்ட இவர், காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியுள்ளார்.

**விளக்கம்: திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பவர் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியல் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியுள்ளார்.**

109) "சந்திப்பிழை போன்ற

சந்ததிப்பிழை நாங்கள்

காலத்தின் பேரேட்டைக்

கடவுள் திருத்தட்டும்" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) சல்மா

**B) நா.காமராரான்**

C) அறிவுமதி

D) மித்ரா

**விளக்கம்: "காலமழைத் தூறலிலே**

**களையாய்ப் பிறப்பெடுத்தோம்**

**தாயப்பாலின் சரித்திரத்தில்**

**சதிராடும் புதிரானோம்**

**விதை வளர்த்த முள்ளானோம்**

**விளக்கின் இருளானோம்**

**சந்திப்பிழை போன்ற**

**சந்ததிப்பிழை நாங்கள்**

**காலத்தின் பேரேட்டைக்**

**கடவுள் திருத்தட்டும்" – நா.காமராசன்**

110) தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமைவது எது?

**A) அங்கதம்**

B) குறியீடு

C) படிமம்

D) முரண்

**விளக்கம்: அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.**

111) "இளமைப் பருவத்தில் என்னால்வருந் துன்பம்

எல்லாம் பொறுத்தீரே

தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந் துன்பம்

சகிப்பது பெருஞ்சீரே" – என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) அப்துல் ரகுமான்

B) தமிழன்பன்

C) ஞானக்கூத்தன்

**D) மாயூரம் வேதநாயகர்**

**விளக்கம்: "இளமைப் பருவத்தில் என்னால்வருந் துன்பம்**

**எல்லாம் பொறுத்தீரே**

**தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந் துன்பம்**

**சகிப்பது பெருஞ்சீரே" – மாயூரம் வேதநாயகர்.**

112) "கோடை மரம்

கொஞ்சம் இலை

நிறைய வானம்" என்ற ஹைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

A) அறிவுமதி

B) மித்ரா

**C) வைகறை**

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "கோடை மரம்**

**கொஞ்சம் இலை**

**நிறைய வானம்" – வைகறை**

113) "ஒரு உலோபி

பஞ்சத்தில் காக்கும்

பணப்பையைப் போல்

கோடை மேகம்" என்ற வரியை எழுதியவர் யார்?

A) பிரமிள்

**B) வைரமுத்து**

C) அப்துல் ரகுமான்

D) ந.பிச்சமூர்த்தி

**விளக்கம்: "ஒரு உலோபி**

**பஞ்சத்தில் காக்கும்**

**பணப்பையைப் போல்**

**கோடை மேகம்" – வைரமுத்து.**

**கோடையின் வறட்சியில் வானமெங்கும் கருத்காத மேகங்கள் இருந்து பயனில்லை. கருணை இல்லாத கருமியின் பணப்பை போல என்று அழகாய்ப் பேசுகிறது மேற்காணும் பாடல்.**

114) "ஆட்டுக்குட்டியை

மடியில் போட்டு

ஈத்திக் கொண்டிருக்கும்

அம்மாவும்

பசுவிற்கு

உண்ணி பிடுங்கி நிற்கும்

அப்பாவும்

படித்ததில்லை………

உயிர்களிடத்தில் அன்பு வேணும்" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) மு.மேத்தா

B) **இளம்பிறை**

C) சல்மா

D) கவிஞர் சிற்பி

**விளக்கம்: "ஆட்டுக்குட்டியை**

**மடியில் போட்டு**

**ஈத்திக் கொண்டிருக்கும்**

**அம்மாவும்**

**பசுவிற்கு**

**உண்ணி பிடுங்கி நிற்கும்**

**அப்பாவும்**

**படித்ததில்லை………**



winmeen.com

**உயிர்களிடத்தில் அன்பு வேணும்" – இளம்பிறை**

115) கூற்றுகளை ஆராய்க.

1. கவிதையின் உள்ளடக்கதைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை.

2. எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழில் விளிம்புநிலை மாந்தருக்கான கவிதைகள் எழுதப்பட்டன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கவிதையின் உள்ளடக்கதைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை.**

**2. எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழில் விளிம்புநிலை மாந்தருக்கான கவிதைகள் எழுதப்பட்டன.**

116) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) வெள்ளைப் பறவை – 1968

B) காந்தள் நாட்கள் – 2017

C) ஆகாயத்துக்கு அடுத்த வீடு – 2006

**D) ஆலாபனை – 2002**

**விளக்கம்: வெள்ளைப் பறவை– 1968**

**காந்தள் நாட்கள்– 2017**

**ஆகாயத்துக்கு அடுத்த வீடு–2006**

**ஆலாபனை– 1999**

117) பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை விகற்பம் செறிய, உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையுடன் அமுதமுறப் பாடுவோர்_____________கவி?

A) ஆசுகவி

**B) மதுரகவி**

C) சித்திரகவி

D) வித்தாரகவி

**விளக்கம்: கவிபாடும் புலவர்களை கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி. சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை விகற்பம் செறிய, உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையுடன் அமுதமுறப் பாடுவோர் மதுரகவி**

118) கூற்று: இடைக்காட்டுச் சித்தர் 'போகர்'என்ற சித்தரின் சீடர்.

காரணம்: இடைக்காடு என்னும் ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்தர் என்று அழைக்கப்பட்டார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: இடைக்காடு என்ற ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். இவர் போகர் என்ற சித்தரின் சீடர். 'இடைக்காடர் ஞான சூத்திரம் எழுபது' என்பது இவருடைய நூல். மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் இவர் பாடியுள்ளார்.**

119) கூற்றுகளை ஆராய்க.

1. "பிராணாயாமம்" என்னும் மூச்சுப்பயிற்சி சித்தர்களின் கொடையாகும்.

2. சித்து என்றால் அறிவு. சித்தர் என்றால் அறிவுடையோர் என்று பொருள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. "பிராணாயாமம்" என்னும் மூச்சுப்பயிற்சி சித்தர்களின் கொடையாகும்.**

**2. சித்து என்றால் அறிவு. சித்தர் என்றால் அறிவுடையோர் என்று பொருள்**

120) கையொப்பம் என்னும் கவிதை நூலுக்கு எப்போது சாகித்திய அகாதெமி பரிசு கிடைத்தது?

A) 2002

B) 2004

**C) 2009**

D) 2017

**விளக்கம்: கையொப்பம் என்னும் கவிதை நூல் புவியரசு என்பவரால் எழுதப்பட்டது. இக்கவிதை நூலுக்கு 2009-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.**

121) மாலைமாற்று, சுழிகுளம், நாகபந்தம், சக்கரம், எழுகூற்றிருக்கை முதலியன மிளிர கவிபாடுவோன்____________________என்பர்?

A) ஆசுகவி

B) மதுரகவி

**C) சித்திரகவி**

D) வித்தாரகவி

**விளக்கம்: கவிபாடும் புலவர்களை கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி. சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். மாலைமாற்று, சுழிகுளம், நாகபந்தம், சக்கரம், எழுகூற்றிருக்கை முதலியன மிளிர கவிபாடுவோன் சித்திரகவி என்பர்.**

122) "குட்டிமீன்

கடித்துச் சென்றது

தூண்டில்காரன் காலை" – என்ற ஹைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

A) அறிவுமதி

B) மித்ரா

**C) வைகறை**

D) ஞானக்கூத்தன்

winmeen.com

**விளக்கம்: "குட்டிமீன்**

**கடித்துச் சென்றது**

**தூண்டில்காரன் காலை" – வைகறை**

123) "சுவரில் தொங்கும்

வரைபட மர நிழலும்

ஒற்றைக் குடிசையும்

கொஞ்சும் பூக்களும்

ஒரு வானமும்" என்ற வரியை எழுதியவர் யார்?

**A) சல்மா**

B) இளம்பிறை

C) கல்யாண்ஜி

D) இன்குலாப்

**விளக்கம்: "சுவரில் தொங்கும்**

**வரைபட மர நிழலும்**

**ஒற்றைக் குடிசையும்**

**கொஞ்சும் பூக்களும்**

**ஒரு வானமும்" – சல்மா**

124) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – 1978

**B) மணிக்கொடி காலம் – 1984**

C) ஒரு கிராமத்து நதி– 2002

D) வணக்கம் வள்ளுவ– 2004

**விளக்கம்: புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – 1978**

**மணிக்கொடி காலம்– 1982**

**ஒரு கிராமத்து நதி– 2002**

**வணக்கம் வள்ளுவ– 2004**

125) "லிமெரிக்" பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) **லிமெரிக் கவிதை மூன்று அடிகளைக் கொண்டிருக்கும்**

B) முதல், இரண்டாம் மற்றும் கடைசி அடிகளில் உள்ள கடைசிச் சொற்கள் தம்முள் ஒலி ஒற்றுமை கொண்டு, மழலையர் பாடல்கள் போல் இருக்கும்

C) நகைச்சுவை, எள்ளல் ஆகிய கூறுகளைக் கொண்டமைபவை.

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: லிமெரிக் கவிதை ஐந்து அடிகளைக் கொண்டிருக்கும்**

**முதல், இரண்டாம் மற்றும் கடைசி அடிகளில் உள்ள கடைசிச் சொற்கள் தம்முள் ஒலி ஒற்றுமை கொண்டு, மழலையர் பாடல்கள் போல் இருக்கும்**

**நகைச்சுவை, எள்ளல் ஆகிய கூறுகளைக் கொண்டமைபவை.**

126) "சென்ரியூ" கவிதை என்பது கீழ்க்காணும் எதன் பரிணாமமாகும்?

A) லிமரைக்கூ

**B) ஹைக்கூ**

C) லிமெரிக்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: 'சென்ரியூ' கவிதை என்பது ஹைக்கூ கவிதையின் பரிணாமமாகும். ஹைக்கூவின் கட்டுப்பாடுகளை உதறிவிட்டு, அது சுதந்திரமாக இயங்குகிறது. ஹைக்கூவின் தத்துவமும் கருத்தாழமும் அதில் குறைவு. அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் குறும்புத்தனமும் நகைச்சுவையும் கலந்து சென்ரியூ எழுதப்படுகிறது.**

127) "அடிவிழ அடிவிழ

அதிரும் பறை

தலைமுறைக் கோபம்" என்ற ஹைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

A) அறிவுமதி

B)**மித்ரா**

C) வைகறை

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "அடிவிழ அடிவிழ**

**அதிரும் பறை**

**தலைமுறைக் கோபம்" – மித்ரா**

128) "காலமழைத் தூறலிலே

களையாய்ப் பிறப்பெடுத்தோம்

தாயப்பாலின் சரித்திரத்தில்

சதிராடும் புதிரானோம்" என்ற வரியை எழுதியவர் யார்?

A) சல்மா

**B) நா.காமராசன்**

C) அறிவுமதி

D) மித்ரா

**விளக்கம்: "காலமழைத் தூறலிலே**

**களையாய்ப் பிறப்பெடுத்தோம்**

**தாயப்பாலின் சரித்திரத்தில்**

**சதிராடும் புதிரானோம்**

**விதை வளர்த்த முள்ளானோம்**

**விளக்கின் இருளானோம்**

**சந்திப்பிழை போன்ற**

**சந்ததிப்பிழை நாங்கள்**

**காலத்தின் பேரேட்டைக்**

**கடவுள் திருத்தட்டும்" – நா.காமராசன்**

129) "யார் எவர் என்று தெரியாமல்

தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்

நானும் இருண்ட என் எதிர்காலமும்" என்றவ வரியில் குறிப்பிடப்படுபவர்கள் யார்?

A) பெண்கள்

B) கண்பார்வையற்றவர்கள்

C) உடல்ஊனமுற்றவர்கள்

**D) திருநங்கைகள்**

**விளக்கம்: "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை**

**சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை**

**சில சமயங்களில் நீ உணர்வதில்லை**

**பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை**

**தெரிந்தும் உணர்ந்தும்**

**கடந்து போகிறாய்**

**என் அந்தரங்கத்தை மிதித்தபடி....**

**யார் எவர் என்று தெரியாமல்**

**தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்**

**நானும் இருண்ட என் எதிர்காலமும்" – லிவிங் ஸ்மைல் வித்யா**

**திருநங்கையரின் கோணத்திலிருந்து பேசும் இக்கவிதைகள் அழகான படிமங்களோடு வெளிப்படுகின்றன. அவர்களை ஏற்றுக்கொண்டு, அரவணைத்துச் செல்லவேண்டுமென்கிற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகின்றன.**

130) 16ஆம் நூற்றாண்டில் எந்த நாட்டில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது?

A) ரஷ்யா

**B) ஜப்பான்**

C) இத்தாலி

D) இங்கிலாந்து

**விளக்கம்: உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழ்ச்சூழலுக்கேற்ற உள்ளடக்கங்களுடன் ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ ஆகிய வடிவங்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன. 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார்.**

131) "காலணிகளற்ற பாதங்களை நனைக்க

என் கிராமத்தின் ஓவியம்

தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது

ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்" – என்ற வரியை எழுதியவர் யார்?

A) கந்தர்வன்

B) காசி ஆனந்தன்

**C) சுகிர்தராணி**

D) சல்மா

**விளக்கம்: "எட்டாத தொலைவில் நின்று**

**பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்**

**உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி**

**காலணிகளற்ற பாதங்களை நனைக்க**

**என் கிராமத்தின் ஓவியம்**

**தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது**

**ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்" – சுகிர்தராணி**

132) மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் பாடிய சித்தர் யார்?

A) குதம்பைச் சித்தர்

**B) இடைக்காட்டுச் சித்தர்**

C) கடுவெளிச்சித்தர்

D) அகத்தியர்

**விளக்கம்: இடைக்காடு என்ற ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். இவர் போகர் என்ற சித்தரின் சீடர். 'இடைக்காடர் ஞான சூத்திரம் எழுபது' என்பது இவருடைய நூல். மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் இவர் பாடியுள்ளார்.**

133) சிற்றிலக்கியங்களின் காலத்தை தேர்வு செய்க.

A) கி.பி3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரை

B) கி.பி12ஆம் நூற்றாண்டு முதல் கி.பி17ஆம் நூற்றாண்டு வரை

C) கி.பி7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை

**D) வரையறை செய்ய இயலாது**

விளக்கம்: சிற்றிலங்கியங்களின் காலத்தைக் குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கிவிட இயலாது. சங்கம் முதல் இன்றுவரை பெரிதும் சிறிதுமாக இவ்வகை இலக்கியம் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது.

134) யமகம், மாலை, கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியன விரித்துப் பாடுவோன்_________________கவி?

A) ஆசுகவி

B) மதுரகவி

C) சித்திரகவி

**D) வித்தாரகவி**

**விளக்கம்: கவிபாடும் புலவர்களை கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி. சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். யமகம், மாலை, கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியன விரித்துப் பாடுவோர் வித்தாரகவி. இத்தகைய கவிகளைப் பாடுவோர் பனுவர் எனப்பட்டனர்.**

135) "பள்ளிக்குப் போகாத சிறுமி

winmeen.com

செல்லமாய்க் குட்டும்

ஆலங்கட்டி மழை" என்ற வரியை எழுதியவர் யார்?

**A) அறிவுமதி**

B) மித்ரா

C) வைகறை

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "பள்ளிக்குப் போகாத சிறுமி**

**செல்லமாயக் குட்டும்**

**ஆலங்கட்டி மழை" – அறிவுமதி.**

136) பொருளடி, பாவணி முதலியன தந்து, மற்றொருவன் பாடுக என்ற உடனே பாடுவோன் யார்?

A) **ஆசுகவி**

B) மதுரகவி

C) சித்திரகவி

D) வித்தாரகவி

**விளக்கம்: கவிபாடும் புலவர்களை கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி. சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். பொருளடி, பாவணி முதலியன தந்து, மற்றொருவன் பாடுக என்ற உடனே பாடுவோர் ஆசுகவி.**

137) திருமங்கையாழ்வாரை தொடர்ந்து சித்திரக்கவியைப் பாடியவர் யார்?

**A) அருணகிரிநாதர்**

B) பாம்பன் சுவாமிகள்

C) தொண்டரடிப்பொடியாழ்வார்

D) திருபாணாழ்வார்

**விளக்கம்: திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட 'திருவெழுக்கூற்றிருக்கை' ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரக்கவி. இவரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சித்திரக்கவிகளைப் பாடியுள்ளார். இவர்களின் வரிசையில் பாம்பன் சுவாமிகளும் சித்திரகவிகள் படைத்துள்ளார்.**

138) இரட்டை நாகபந்தம் என்பது கீழ்க்காணும் எதற்கு பொருத்தமானது?

**A) பாம்பின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி வால்பகுதி வரைசென்று பொருள்காண வேண்டும்**

B) பாம்பின் வால்பகுதி தொடங்கி தலைப்பகுதிவரை சென்று பொருள்காண வேண்டும்

C) பாம்பின் தலை அல்லது வால்பகுதி தொடங்கி அதன் மறுபகுதிவரை சென்று பொருள்காண வேண்டும்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்புணர்ந்து விளையாடுவன போலச் சித்திரம் வரைந்து, அப்பாம்பின் உருவங்களில் கணக்கிட்ட அறைகள் வகுத்துச் சந்திகளில் நின்ற அறைகளில் பொதுவான எழுத்துகளமையப் பாடப்படுவது இரட்டை நாகபந்தம் ஆகும். இப்பாடலைப் பாம்பின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி வால்பகுதி வரைசென்று பொருள் காண வேண்டும்.**

139) கீழ்க்காணும் எதனை 'ஓவியப்பா' என்றும் கூறுவர்?

A) ஆசுகவி

B) மதுரகவி

**C) சித்திரகவி**

D) வித்தாரகவி

**விளக்கம்: சித்திரகவியை 'ஓவியப்பா' என்றும் கூறுவர். சித்திரகவி என்பது தமிழில் காணப்படும் இலக்கிய வகைமைகளுள் ஒன்று.**

140) பல்லவர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் செழித்தோங்கியதைப் போல, யாருடைய காலத்தில் சிற்றிலக்கியங்கள் செழித்தோங்கின?

A) சோழர்கள்

B) சேரர்கள்

C) பாண்டியர்கள்

**D) நாயக்கர்கள்**

**விளக்கம்: சிற்றிலக்கியங்கள் வட்டார சார்புடையவை. பல்லவர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் செழித்தோங்கியதைப் போல, நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் செழித்தன.**

141) அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை உணர்த்தும் இலக்கியங்கள் எது?

A) பேரிலக்கியங்கள்

**B) சிற்றிலக்கியங்கள்**

C) நாட்டுப்புற பாடல்கள்

D) சித்தர் பாடல்கள்

**விளக்கம்: பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் உணர்த்துவதற்காக எழுந்தன. இவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்து வரும் தன்மையில் அமைந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் ஆகும்.**

142) கூற்றுகளை ஆராய்க. (குதம்பைச் சித்தர்)

1. பாடல்களில் 'குதம்பாய்' என்று மகடூஉ முன்னிலை வருவதால், குதம்பைச் சித்தர் என்று பெயர் பெற்றார்.

2. இவர் பாடல்களில் சித்தர்களின் இயல்புகள் பேசப்படுகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாடல்களில் 'குதம்பாய்' என்று மகடூஉ முன்னிலை வருவதால், குதம்பைச் சித்தர் என்று பெயர் பெற்றார்.**

**2. இவர் பாடல்களில் சித்தர்களின் இயல்புகள் பேசப்படுகின்றன.**

143) காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியவர் யார்?

A) சுந்தர கவிராயர்

B) அருணாச்சலத்துரை

C) தையூர் முத்து

**D) அழகிய சொக்கநாதர்**

**விளக்கம்: திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பவர் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியுள்ளார்.**

144) "அகதி முகாம்

மழையில் வருகிறது

மண்வாசனை" என்ற ஹைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

**A) அறிவுமதி**

B) மித்ரா

C) வைகறை

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "அகதி முகாம்**

**மழையில் வருகிறது**

**மண்வாசனை" – அறிவுமதி**

145) "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை

சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை" – என்ற வரியை எழுதியவர் யார்?

A) மித்ரா

B) வைகறை

**C) லிவிங் ஸ்மைல் வித்யா**

D) பனிமலர்

**விளக்கம்: "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை**

**சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை**

**சில சமயங்களில் நீ உணர்வதில்லை**

**பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை**

**தெரிந்தும் உணர்ந்தும்**

**கடந்து போகிறாய்**

**என் அந்தரங்கத்தை மிதித்தபடி.....**

**யார் எவர் என்று தெரியாமல்**

**தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்**

**நானும் இருண்ட என் எதிர்காலமும்" – லிவிங் ஸ்மைல் வித்யா**

146) 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) ந.பிச்சமூர்த்தி

D) பாரதிதாசன்

**விளக்கம்: உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழ்ச்சூழலுக்கேற்ற உள்ளடங்களுடன் ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ ஆகிய வடிவங்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன. 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார்.**

147) கூற்றுகளை ஆராய்க.

1. சிற்றிலக்கியங்கள் அகத்தியம் கூறும் 'விருந்து' என்னும் வனப்பினுள் அடங்கும்.

2. சிற்றிலக்கியங்கள் வட்டாரச் சார்பற்றவை

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சிற்றிலக்கியங்கள் தொல்காப்பியர் கூறும் 'விருந்து' என்னும் வனப்பினுள் அடங்கும்.**

**2. சிற்றிலக்கியங்கள் வட்டாரச் சார்புடையவை**

148) கவிபாடும் புலவர்களை அவர்கள் கவிபாடும் திறனுக்கேற்ப எத்தனை வகையாக பிரிப்பர்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: கவிபாடும் புலர்வகளை, அவர்களின் கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர்.**

149) 'திருவெழுக்கூற்றிருக்கை' என்பது ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரகவி. இதனை எழுதியவர் யார்?

A) திருமழிசையாழ்வார்

**B) திருமங்கையாழ்வார்**

C) திருப்பாணாழ்வார்

D) தொண்டரடிப்பொடியாழ்வார்

**விளக்கம்: திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட 'திருவெழுக்கூற்றிருக்கை' ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரக்கவி. இவரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சித்திரக்கவிகளைப் பாடியுள்ளார். இவர்களின் வரிசையில் பாம்பன் சுவாமிகளும் சித்திரகவிகள் படைத்துள்ளார்**

150) "தந்தை தந்த

தாய்ப்பால்

முப்பால்" என்ற ஹைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

**A) அறிவுமதி**

B) மித்ரா

C) வைகறை

D) ஞானக்கூத்தன்

**விளக்கம்: "தந்தை தந்த**

**தாய்ப்பால்**

**முப்பால்" – அறிவுமதி**

151) இரட்டை நாகபந்தம் என்பது இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்புணர்ந்து விளையாடுவன. இதில் எழுத்துகள் அமைக்கும் முறையில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) வால்பகுதி– மூன்று எழுத்து

B) தலைப்பகுதி– இரண்டு எழுத்து

C) மூலைப் பகுதி– ஐந்து எழுத்து

**D) வயிற்றுப் பகுதி – நான்கு எழுத்து**

**விளக்கம்: வால்பகுதி – மூன்று எழுத்து**

**தலைப்பகுதி– இரண்டு எழுத்து**

**மூலைப் பகுதி– ஐந்து எழுத்து**

**வயிற்றுப் பகுதி– ஐந்து எழுத்து**

152) "சந்திப்பிழை போன்ற

சந்ததிப்பிழை நாங்கள்

காலத்தின் பேரேட்டைக்

கடவுள் திருத்தட்டும்" என்ற வரிகளில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) பெண்கள்

B) உடல் ஊனமுற்றவர்கள்

C) கண்பார்வையற்றவர்கள்

**D) திருநங்கைகள்**

**விளக்கம்: "காலமழைத் தூறலிலே**

**களையாய்ப் பிறப்பெடுத்தோம்**

**தாயப்பாலின் சரித்திரத்தில்**

**சதிராடும் புதிரானோம்**

**விதை வளர்த்த முள்ளானோம்**

**விளக்கின் இருளானோம்**

**சந்திப்பிழை போன்ற**

**சந்ததிப்பிழை நாங்கள்**

**காலத்தின் பேரேட்டைக்**

**கடவுள் திருத்தட்டும்" – நா.காமராசன்**

**திருநங்கையரின் கோணத்திலிருந்து பேசும் இக்கவிதைகள் அழகான படிமங்களோடு வெளிப்படுகின்றன. அவர்களை ஏற்றுக்கொண்டு, அரவணைத்துச் செல்லவேண்டுமென்கிற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகின்றன.**

153) கூற்றுகளை ஆராய்க

1. ஓவியப்பாவின் வகைகளுள் 'நாகபந்தம்' என்பதும் ஒன்று.

2. இரண்டு, நான்கு, எட்டு என நாகப்பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பது போலப்படம் வரையப்படும்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஓவியப்பாவின் வகைகளுள் 'நாகபந்தம்' என்பதும் ஒன்று.**

**2. இரண்டு, நான்கு, எட்டு என நாகப்பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பது போலப்படம் வரையப்படும்**

154) "முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்" என்ற கவிதை வரியை எழுதியவர் யார்?

A) அறிவுமதி

B) வைகறை

**C) மகாகவி**

D) அமுதபாரதி

**விளக்கம்: "முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்**
**முன்னாலே வந்து நின்றான் காலன்**
**சத்தமின்றி, வந்தவனின்**
**கைத் தலத்திற் பத்து முத்தைப்**
**பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்" – மகாகவி**

155) கூற்று: கீர்த்தனை என்பது இசைப்பாடல் என்பர்.

காரணம்: இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை. கீர்த்தி என்னும் சொல்லுக்குப் புகழ், இசை எனப் பல பொருளுண்டு. கீர்த்தனை என்பதை இசைப்பாடல் என்பர். இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் இது கீர்த்தனை எனப் பெயர்பெற்றது.**

156) 'ஹைக்கூ' பற்றிய தவறான கூற்றை தேர்வு செய்க

A) 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார்.

**B) ஹைக்கூ கவிதை நான்கு வரிகளால் ஆனது.**

C) ஹைக்கூ கவிதையின் முதல் இரண்டு வரிகளில் கூறப்படும் கருத்தை மூன்றாவது வரி விடுவிக்கும்.

D) மிக நுணுக்கமான ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும் ஹைக்கூ, கடைசி வரியில் படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்திவிடும்.

**விளக்கம்: 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார்.**

**ஹைக்கூ கவிதை மூன்று வரிகளால் ஆனது.**

**ஹைக்கூ கவிதையின் முதல் இரண்டு வரிகளில் கூறப்படும் கருத்தை மூன்றாவது வரி விடுவிக்கும்.**

**மிக நுணுக்கமான ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும் ஹைக்கூ, கடைசி வரியில் படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்திவிடும்.**

157) கீழ்க்காண்பனவற்றில் எது கீர்த்தனையாக வளர்ச்சி பெற்றுள்ளது?

A) பிள்ளைத்தமிழ்

**B) சிந்து**

C) பள்ளு

D) கலம்பகம்

**விளக்கம்: 'சிந்து' என்ற பாடல் வகையே கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. கீர்த்தனைகளில் சுரத்தைவிடச் சொற்களுக்குத்தான் முதன்மை அளிக்கப்படுகிறது.**

158) திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவரை ஆதரித்தவர் யார்?

A) சுந்தர கவிராயர்

B) அருணாச்சலத்துரை

C) தையூர் முத்து

**D) முத்துசாமி**

**விளக்கம்: திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பவர் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியுள்ளார்.**

159) கீழ்க்காணும் கூற்றுகளில் செய்யிது ஆசியா உம்மா கூறியவற்றில் பொருந்தாதது எது?

A) எத்தனை வேதங்களை எம்முறையில் கற்றாலும் அறிவில் தெளிவு அடையாதவர் தெளிவு அடைவதே பேரின்ப நிலையாகும்.

B) சேர்ந்த பொருட்செல்வங்களும் இந்த உலகில் சேர்ந்த உறவினர்களும் நேர்மையாகச் சேர்த்த சொத்துக்களும் இறுதி நாளில் இவ்வுலகை விட்டுப் பிரிகையில் நிலைத்து நம்மோடு வருவதில்லை. பேரானந்த நிலையே இறுதியில் நிலையானது.

C) ஆண் என்பதும் பெண் என்பதும் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்றன பழைமைதானே தவிர, வேறில்லை. 'தான்' என்பதை அறியும் நிலையே பேரானந்தமாகும்.

**D) என் உடல் உயிராகிய அனைத்தும் நீங்கள் தந்ததேயன்றி வேறில்லை. இதற்கு இப்பரந்த உலகம் முழுவதையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.**

**விளக்கம்: என் உடல் உயிராகிய அனைத்தும் நீங்கள் தந்ததேயன்றி வேறில்லை. இதற்கு இப்பரந்த உலகம் முழுவதையும் கைம்மாறகக் கொடுத்தாலும் ஈடாகாது – மாயூர் வேதநாயகர்.**

160) கீர்த்தனைகள் எத்தனை நிலைகளில் அமையப்பெறும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: 'சிந்து' என்ற பாடல் வகையே கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. கீர்த்தனைகளில் சுரத்தைவிடச் சொற்களுக்குத்தான் முதன்மை அளிக்கப்படுகிறது. இப்பாடல்கள் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று நிலைகளில் அமையப்பெறும்.**

161) கூற்றுகளை ஆராய்க.

1. செய்யிது ஆசியா உம்மா என்பவர் கல்வத்து நாயகத்தின் சீடர் ஆவார்.

2. மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிக இரத்தினம் ஆகிய பால்களை அரபுத்தமிழ் வடிவத்தில் இயற்றினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. செய்யிது ஆசியா உம்மா என்பவர் கல்வத்து நாயகத்தின் சீடர் ஆவார்.**

**2. மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிக இரத்தினம் ஆகிய பால்களை அரபுத்தமிழ் வடிவத்தில் இயற்றினார்.**

162) "சில சமயங்களில் நீ உணர்வதில்லை
பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை" என்ற வரியை எழுதியவர் யார்?

A) மித்ரா

B) வைகறை

**C) லிவிங் ஸ்மைல் வித்யா**

D) பனிமலர்

**விளக்கம்: "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை**
**சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை**
**சில சமயங்களில் நீ உணர்வதில்லை**
**பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை**
**தெரிந்தும் உணர்ந்தும்**
**கடந்து போகிறாய்**
**என் அந்தரங்கத்தை மிதித்தபடி....**
**யார் எவர் என்று தெரியாமல்**
**தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்**
**நானும் இருண்ட என் எதிர்காலமும்" – லிவிங் ஸ்மைல் வித்யா**

163) ______________நூற்றாண்டில் தோன்றி, வளர்ந்த சிற்றிலக்கிய வடிவம் பிற்காலத்தில் மக்களின் சிக்கல்களையும் பேசத் தொடங்கியது?

A) 15

**B) 17**

C) 18

D) 20

**விளக்கம்: 17–ஆம் நூற்றாண்டில் தோன்றி, வளர்ந்த சிற்றிலக்கிய வடிவம் பிற்காலத்தில் மக்களின் சிக்கல்களையும் பேசத் தொடங்கியது.**

164) மாயூரம் வேதநாயகர் பாடிய கீர்த்தனை எது?

A) சர்வ சமயக் கீர்த்தனைகள்

B) சர்வ சமரசக் கீர்த்தனைகள்

**C) சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்**

D) சர்வ மதக் கீர்த்தனைகள்

**விளக்கம்: கீரத்தனைப் பாடல்களை சமரச நோக்கத்தோடு பாடியவர் மாயூரம் வேதநாயகர் ஆவார். இவர் பாடிய இசைப்பாடல் நூல் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' ஆகும். இந்நூலில் 192 கீர்த்தனை பாடல்கள் இடம் பெற்றுள்ளன.**

165) அழகிய சொக்கநாதர் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர்?

A) சித்திரகவி

**B) சிலேடைப்பாடல்**

C) அந்தாதிப்பாடல்

D) நாட்டுப்புறப்பாடல்

**விளக்கம்: திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர் ஆவார். இவர் பாடிய தனிபாடல்கள் 25க்கும் மேற்பட்டவை ஆகும்.**

166) "கீர்த்தனை" என்பது கீழ்க்காணும் எதனோடு தொடர்புடையது?

A) நாட்டுப்புறப்பாடல்

B) சித்தர்பாடல்கள்

**C) சிற்றிலக்கியங்கள்**

D) தனிப்பாடல்

**விளக்கம்: சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை. கீர்த்தி என்னும் சொல்லுக்குப் புகழ், இசை எனப் பல பொருளுண்டு. கீர்த்தனை என்பதை இசைப்பாடல் என்பர். இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் இது கீர்த்தனை எனப் பெயர் பெற்றது.**

167) "ஆயிரம் ஈக்கள்

மொய்க்கும் ஆசையில்

வானத் தட்டில்

இராத்திரிக் கிழவி

சுட்டு வைத்த

ஒற்றைத் தோசையில்" என்ற குக்கூ கவிதையை எழுதியவர் யார்?

**A) மீரா**

B) பாரதியார்

C) சுரதா

D) ஈரோடு தமிழன்பன்

**விளக்கம்: "ஆயிரம் ஈக்கள்**

**மொய்க்கும் ஆசையில்**

**வானத் தட்டில்**

**இராத்திரிக் கிழவி**

**சுட்டு வைத்த**

**ஒற்றைத் தோசையில்" – மீரா**

168) மராத்தியில் கவிதா மகாஜன் எழுதிய கவிதையை என்பசி என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

A) சல்மா

**B) புதியமாதவி**

C) அமுதபாரதி

D) தமிழன்பன்

**விளக்கம்: மராத்தியில் கவிதா மகாஜன் எழுதிய கவிதையை என்பசி என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர் புதிய மாதவி ஆவார்**

169) கூற்றுகளை ஆராய்க.

1. நாடோடிப்பாடல், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், ஏட்டிலெழுதாக் கவிதை, மக்கள்பாடல், பரம்பரைப்பாடல், நாட்டார்பாடல் என்று பல்வேறு பெயர்களில் நாட்டுப்புறப் பாடல் அழைக்கப்படுகிறது.

2. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல்கள் என்கிறோம்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. நாடோடிப்பாடல், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், ஏட்டிலெழுதாக் கவிதை, மக்கள்பாடல், பரம்பரைப்பாடல், நாட்டார்பாடல் என்று பல்வேறு பெயர்களில் நாட்டுப்புறப் பாடல் அழைக்கப்படுகிறது.**

**2. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல்கள் என்கிறோம்.**

170) சிலேடை பாடுவதில் வல்லவரான அழகிய சொக்கநாதர் எந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்?

A) தூத்துக்குடி

**B) திருநெல்வேலி**

C) சிவகங்கை

D) கடலூர்

**விளக்கம்: திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பவர் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றை பாடியுள்ளார்.**

171) மாயூரம் வேரநாயகர் **தாம்** பாடிய "சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்"– **யை** எத்தனை வகையாக வகைப்படுத்தியுள்ளார்?

A) 2

B) 3

C) 4

**D) 5**

**விளக்கம்: வேதநாயகர் தாம் எழுதிய சர்வ சமய சமரசக் கீர்த்தனையை ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார் . அவை,**

**1.தேவதோத்திரக் கீர்த்தனைகள்**

**2.ஈசுவர வருடத்துப் பஞ்சத்தைப் பற்றிய கீர்த்தனைகள்**

**3. ஹிதோபதேசக் கீர்த்தனைகள்**

**4. உத்தியோக சம்பந்தக் கீர்த்தனைகள்**

**5.குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள்**

172) உலகில் மூலப்பொருளை, மௌனமாய் உணர்ந்து அறிந்தால், என்றும் இளமையாய் இருக்கும் நிலை உண்டாகும். அதுவே அமைதி நிலையாகும் என்று கூறியவர் யார்?

A) மாயூரம் வேதநாயகர்

**B) செய்யிது ஆசியா உம்மா**

C) ஈரோடு தமிழன்பன்

D) பாரதிதாசன்

**விளக்கம்: உலகில் மூலப்பொருளை, மௌனமாய் உணர்ந்து அறிந்தால், என்றும் இளமையாய் இருக்கும் நிலை உண்டாகும். அதுவே அமைதி நிலையாகும் – செய்யிது ஆசியா உம்மா.**

173) வேதநாயகர் எந்த மாவட்டத்தில் பிறந்தார்?

A) தஞ்சாவூர்

B) நாகப்பட்டினம்

**C) திருச்சிராப்பள்ளி**

D) சிவகங்கை

**விளக்கம்: வேதநாயகர் திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். இவர் எழுதிய நூல் சர்வ சமய சமரசக் கீர்த்தனை ஆகும்.**

174) கூற்று: மாயூரம் வேதநாயகர் எழுதிய நூல் "சர்வ சமய சமரசக் கீர்த்தனை" ஆகும்.

காரணம்: இவர் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இசைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: மாயூரம் வேதநாயகர் இயற்றிய நூல் – சர்வ சமய சமரசக் கீர்த்தனை ஆகும். இந்நூலின் பெயருக்கு ஏற்ப, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இசைப்பாடல்களைப் பாடியுள்ளார். சமுதாயக் கருத்து, அறநெறிக்கருத்து, தாம் வாழ்ந்த காலச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இந்நூலில் 192 கீர்த்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மாயூரம் வேதநாயகர் இதனை ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார்.**

175) கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும்.

B) சீதக்காதி மரபு வந்த ஹபீபு முகம்மது மரைக்காயருக்கும் ஹபீபு உம்மாவுக்கும் மகளாகப் பிறந்தவர் செய்யிது ஆசியா உம்மா ஆவார்.

**C) 'மெய்ஞ்ஞானப் பாடல்' தொகுப்புநூல் – அலி இபின் அலி தாலிஃப்**

D) சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை ஆகும்.

**விளக்கம்: தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும். சீதக்காதி மரபு வந்த ஹபீபு முகம்மது மரைக்காயருக்கும் ஹபீபு உம்மாவுக்கும் மகளாகப் பிறந்தவர் செய்யிது ஆசியா உம்மா ஆவார்.**

**'மெய்ஞ்ஞானப் பாடல்' தொகுப்புநூல் – செய்யிது ஆசியா உம்மா.**

**சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை ஆகும்.**

176) கூற்று: மாயூரம் வேதநாயகத்தை ஆங்கில அரசு நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியமர்த்தியது.

காரணம்: இவர் சிறுவயதிலேயே ஆங்கிலப் பயிற்சி பெற்றுள்ளார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: மாயூரம் வேதநாயகர் திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே ஆங்கிலப் பயிற்சி பெற்றமையால், ஆங்கில அரசாங்கம் இவரை மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியமர்த்தியது.**

177) இரவு என்பதனைக் குறிக்கும் இருசொல் இணையைத் தேர்ந்தெடுக்க

A) கங்குல், பகல்

B) நிசி, பகல்

**C) கங்குல், அல்**

D) அல், பகல்

**விளக்கம்: கங்குல், அல் – இரவு**

178) "குழந்தை வளர்ந்த தொட்டில்

கிழிந்து கந்தல் ஆன பின்னம்

பாடும் தாய்மை மெட்டில்" என்ற லிமெரைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

A) மீரா

B) பாரதியார்

C) சுரதா

**D) ஈரோடு தமிழன்பன்**

**விளக்கம்: "குழந்தை வளர்ந்த தொட்டில்**

**கிழிந்து கந்தல் ஆன பின்னும்**

**பாடும் தாய்மை மெட்டில்" – ஈரோடு தமிழன்பன்**

179) "தெரிந்தும் உணர்ந்தும்

கடந்து போகிறாய்

என் அந்தரங்கத்தை மிதித்தபடி…." என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) மித்ரா

B) வைகறை

**C) லிவிங் ஸ்மைல் வித்யா**

D) பனிமலர்

**விளக்கம்: "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை**

**சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை**

**சில சமயங்களில் நீ உணர்வதில்லை**

**பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை**

**தெரிந்தும் உணர்ந்தும்**

**கடந்து போகிறாய்**

**என் அந்தரங்கத்தை மிதித்தபடி….**

**யார் எவர் என்று தெரியாமல்**

**தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்**

**நானும் இருண்ட என் எதிர்காலமும்" – லிவிங் ஸ்மைல் வித்யா**

180) கூற்று: மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம் ஆகும்.

காரணம்: தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும்.

A) கூற்று, காரணம் இரண்டும் தவறு

**B) கூற்று, காரணம் இரண்டும் சரி**

C) கூற்று சரி காரணம் தவறு

D) கூற்று தவறு, காரணம் சரி

**விளக்கம்: மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம் ஆகும். தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும்.**

181) கூற்றுகளை ஆராய்க.

1. ஓவியப்பாவின் வகைகளுள் ஒன்றான நாகபந்தம் என்பதனை 'நாகப்பிணை' என்றும் குறிப்பிடலாம்.

2. பாடல் ஒன்றின் எழுத்துக்கள் நாகங்களின் தலையிலிருந்து வால் வரையில் உள்ள கட்டங்களில் எழுதப்பட்டிருக்கும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஓவியப்பாவின் வகைகளுள் ஒன்றான நாகபந்தம் என்பதனை 'நாகப்பிணை' என்றும் குறிப்பிடலாம்.**

**2. பாடல் ஒன்றின் எழுத்துக்கள் நாகங்களின் தலையிலிருந்து வால் வரையில் உள்ள கட்டங்களில் எழுதப்பட்டிருக்கும்.**

182) "எனக்கொரு சுகம்வரில் உமக்குவந் ததுபோல்

எக்களிப் படைந்தீரே

எனக்கொரு துயர்வரில் உமக்குவந் ததுபோல்

ஏங்கிஉள் ளுடைந்தீரே" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) அப்துல் ரகுமான்

B) தமிழன்பன்

C) ஞானக்கூத்தன்

D) **மாயூரம் வேதநாயகர்**

**விளக்கம்: "எனக்கொரு சுகம்வரில் உமக்குவந் ததுபோல்**

**எக்களிப் படைந்தீரே**

**எனக்கொரு துயர்வரில் உமக்குவந் ததுபோல்**

**ஏங்கிஉள் ளுடைந்தீரே" – மாயூர் வேதநாயகர்.**

183) சூஃபித்துவம் பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை ஆராய்க.

A) மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம் ஆகும்.

B) சூஃபித்துவத்தின் ஆணிவேர், இசுலாத்தின் அடிப்படையான மனிதநேயத்திலும் ஆன்மீகத்திலும் வேரூன்றியுள்ளது.

C) **சூஃபித்துவத்தின் தொடக்கப் புள்ளியாக ஆசிய உம்மா கருதப்படுகிறார்**

D) தத்துவக்கோட்பாடுகளையும் அறிவு சார்ந்த தருக்கங்களையும் தாண்டி, ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் வலியுறுத்தும் அகத்தரிசனமே சூஃபித்துவத்தின் அடிப்படை.

**விளக்கம்: மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம் ஆகும்.**

**சூஃபித்துவத்தின் ஆணிவேர், இசுலாத்தின் அடிப்படையான மனிதநேயத்திலும் ஆன்மீகத்திலும் வேரூன்றியுள்ளது.**

**சூஃபித்துவத்தின் தொடக்கப் புள்ளியாக அலி இபின் அபி தாலிஃப் கருதப்படுகிறார்**

**தத்துவக்கோட்பாடுகளையும் அறிவு சார்ந்த தருக்கங்களையும் தாண்டி, ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் வலியுறுத்தும் அகத்தரிசனமே சூஃபித்துவத்தின் அடிப்படை.**

winmeen.com

184) தமிழில் முதன்முதலில் புதினத்தை எழுதியவர் யார்?

A) **மாயூரம் வேதநாயகர்**

B) வீரமாமுனிவர்

C) பரிதிமாற்கலைஞர்

D) பாரதியார்

**விளக்கம்: பொ.ஆ.1876 ஆம் ஆண்டு வெளியான 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம் ஆகும். இப்புதினத்தை எழுதியவர் மாயூரம் வேதநாயகர் ஆவார். இவர் திருச்சிராப்பள்ளியிலுள்ள குளத்தூரில் பிறந்தவர் ஆவார்.**

185) ஏட்டிலெழுதாக்கவிதை என அழைக்கப்படுவது எது?

**A) நாட்டார் பாடல்கள்**

B) சங்கப்பாடல்கள்

C) கீர்த்தனைகள்

D) காப்பியப்பாடல்கள்

**விளக்கம்: நாட்டார் பாடல்கள் ஏட்டில் எழுதக் கவிதைகள் என்று அழைக்கப்படுகின்றன. இதன் வேறுபெயர்கள். நாடோடிப்பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், மக்கள்பாடல், பரம்பரைப்பாடல் ஆகும்**

186) "வானம் கூட்டுள் வருமா?

பறக்க மறந்து ஒடுங்கி இருந்தால்

சிறகு பெருமை தருமா?" என்ற லிமெரைக்கூ கவிதையை எழுதியவர் யார்?

A) மீரா

B) பாரதியார்

C) சுரதா

**D) ஈரோடு தமிழன்பன்**

**விளக்கம்: "வானம் கூட்டுள் வருமா?**

**பறக்க மறந்து ஒடுங்கி இருந்தால்**

**சிறகு பெருமை தருமா?" – ஈரோடு தமிழன்பன்**

187) தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் யார்?

A) பாரதியார்

B) அப்துல் ரகுமான்

C) மீரா

**D) ஈரோடு தமிழன்பன்**

**விளக்கம்: 'ஹைக்கூ' கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது லிமெரைக்கூ. இது வாழ்வியலை நகைச்சுவையோடு வெளிப்படுத்துவது. தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் ஈரோடு தமிழன்பன்.**

188) "யார் எவர் என்று தெரியாமல்

தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்

நானும் இருண்ட என் எதிர்காலமும்" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) மித்ரா

B) வைகறை

**C) லிவிங் ஸ்மைல் வித்யா**

D) பனிமலர்

**விளக்கம்: "சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை**

**சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை**

**சில சமயங்களில் நீ உணர்வதில்லை**

**பசும்புலல்லை நசுக்கியபடி கடந்து போவதை**

**தெரிந்தும் உணர்ந்தும்**

**கடந்து போகிறாய்**

**என் அந்தரங்கத்தை மிதித்தபடி.....**

**யார் எவர் என்று தெரியாமல்**

**தொடர்ந்து மிதபட்டே வருகிறோம்**

**நானும் இருண்ட என் எதிர்காலமும்" – லிவிங் ஸ்மைல் வித்யா**

## 11th Advanced Tamil Unit 2 Questions

## 2] அரங்கவியல்

1) விவேகானந்தர் அமெரிக்காவில் எப்போது சொற்பொழிவாற்றினார்?

**A) செப்டம்பர் 11, 1983**

B) செப்டம்பர் 13, 1983

C) செப்டம்பர் 23, 1983

D) செப்டம்பர் 17, 1983

**விளக்கம்: விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோ நகரில் செப்டம்பர் 11, 1983 அன்று நடைபெற்ற உலகச் சமய மாநாட்டுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார்.**

2) அரங்கவியல் கீழ்க்காணும் எதனை குறித்த ஆய்வு ஆகும்?

A) இயற்றமிழ், இசைத்தமிழ்

**B) நாடகக்கலை, பேச்சுக்கலை**

C) இசைத்தமிழ், நாடகத்தமிழ்

D) இயற்றமிழ், நாடகத்தமிழ்

**விளக்கம்: முத்தமிழான இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவை சார்ந்த நிகழ்த்துக்கலைகள் அவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட அரங்கங்கள் வழியாகவே வெளிப்படுகின்றன. அத்தகைய கலைகளான நாடகக்கலை, பேச்சுக்கலை ஆகியன குறித்து 'அரங்கவியல்' பேசுகிறது.**

3) கூற்றுகளை ஆராய்க.

1. உரையாடல்தான் நாடகத்தின் அடிப்படை அலகு

2. நூலின் இடப்பக்க ஓரத்தில் ஒருவர் மாற்றி ஒருவர் பேசுவதாக இருப்பதுதான் நாடக நூலின் தனித்த அடையாளம்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உரையாடல்தான் நாடகத்தின் அடிப்படை அலகு**

**2. நூலின் இடப்பக்க ஓரத்தில் ஒருவர் மாற்றி ஒருவர் பேசுவதாக இருப்பதுதான் நாடக நூலின் தனித்த அடையாளம்.**

4) கூற்றுகளை ஆராய்க.

1. உரையாடல் இல்லாமல் மௌன நாடகங்களும் நடைபெறும்.

2. உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம் என்பர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உரையாடல் இல்லாமல் மௌன நாடகங்களும் நடைபெறும்.**

**2. உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம் என்பர். இம்மூன்றையும் புறக்கட்டமைபின் கூறுகள் என்பர்.**

5) நாடக கூறுகளில் மிகச்சிறிய அலகு எது?

**A) உரையாடல்**

B) காட்சி

C) அங்கம்

D) வரையறுக்க இயலாது

**விளக்கம்: உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம். இம்மூன்றையும் புறக்கட்டமைப்பின் கூறுகள் என்கிறோம். உரையாடல் என்பது சிறிய அலகு. உரையாடல்களால் ஆனது காட்சி. காட்சிகளால் ஆனது அங்கம். அங்கங்களால் ஆனது நாடகம் ஆகும்.**

6) பொதுவாக நாடகத்தின் கதையை எத்தனை அங்கமாகப் பிரிப்பர்?

A) 2

B) 3

C) 4

**D) 5**

**விளக்கம்: நாடகத்தின் கதையைப் பிரித்து அமைக்கும் பிரிவு அங்கம் எனப்படும். பொதுவாக நாடகத்தின் கதையை ஐந்து அங்கமாகப் பிரிப்பர். இதனடிப்படையில் ஓர் அங்கம் மட்டுமே உள்ள நாடகத்தை ஓரங்க நாடகம் என்பர்**

7) பொதுவாக எத்தனை அங்கங்களில் முழுமை அடையும் நாடகங்களே சிறந்த நாடகங்களாகக் கருதப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: பல அங்கநாடகம் ஒன்றில், தொடக்கத்தை முதல் அங்கத்திலும் வளர்நிலையை அடுத்த அங்கத்திலும் முடிவை மூன்றாவது அங்கத்திலும் அமைக்க வேண்டும். அப்படி அமைப்பதுதான் நல்ல நாடகத்தின் வடிவம். பொதுவாக மூவங்கங்களில் முழுமை அடையும் நாடகங்களே சிறந்த நாடகங்களாகக் கருதப்படுகின்றன.**

8) பொதுவாக _______________ அங்கங்களைக் கொண்ட அமைப்பு நாடகத்தில் இல்லை.

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: ஒரே அங்கத்திற்குள் தொடக்கம், வளர்நிலை, முடிவு என்று அமைக்கும் நாடகங்கள் ஓரங்க நாடகங்கள். பல அங்கங்களைக் கொண்டும் நாடகங்கள் வளரும். ஈரங்கம் என்ற அமைப்பு நாடகத்தில் இல்லை.**

9) கூற்றுகளை ஆராய்க.

1. ஐந்து அங்கங்களுக்குமேல் நாடகம் வளர்த்தெடுக்கப்படுவதில்லை.

2. தொடக்கம், வளர்நிலை, முடிவு என்பது நாடகத்தில் முக்கிய கூறு ஆகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஐந்து அங்கங்களுக்குமேல் நாடகம் வளர்த்தெடுக்கப்படுவதில்லை.**

**2. தொடக்கம், வளர்நிலை, முடிவு என்பது நாடகத்தில் முக்கிய கூறு ஆகும்.**

10) நாடகத்தின் அகக்கட்டமைப்பு எத்தனை?

A) 5

**B) 6**

C) 3

D) 4

**விளக்கம்: தொடக்கம், மோதல், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு அகிய ஆறும் நாடகத்தின் அகக்கட்டமைப்புகள் ஆகும்.**

11) வருங்காலம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள் – என்று கூறியவர் யார்?

**A) திரு.வி.க**

B) அறிஞர் அண்ணா

winmeen.com

C) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

D) காந்தியடிகள்

**விளக்கம்: வருங்காலம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள் – திரு.வி.க**

12) சரியான வரிசையை தேர்வு செய்க.

**A) உரையாடல் →காட்சி →அங்கம்→ நாடகம்**

B) உரையாடல் →அங்கம் →காட்சி →நாடகம்

C) காட்சி→ அங்கம்→ உரையாடல் →நாடகம்

D) நாடகம்→காட்சி →அங்கம் →உரையாடல்

**விளக்கம்: உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம். இம்மூன்றையும் புறக்கட்டமைப்பின் கூறுகள் என்கிறோம். உரையாடல் என்பது சிறிய அலகு. உரையாடல்களால் ஆனது காட்சி. காட்சிகளால் ஆனது அங்கம். அங்கங்களால் ஆனது நாடகம் ஆகும்.**

13) கூற்றுகளை ஆராய்க.

1. நாடகத்தின் கூறுகளில் ஒன்றான காட்சிதான் நிகழ்வு என்று கூறுகிறோம்.

2. காட்சியை வரையறை செய்ய களம் அவசியம். நாடகம் நிகழும் சூழலை உணர்த்துவது களம். இதனை வெளி என்றும் கூறலாம்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. நாடகத்தின் கூறுகளில் ஒன்றான காட்சிதான் நிகழ்வு என்று கூறுகிறோம்.**

**2. காட்சியை வரையறை செய்ய களம் அவசியம். நாடகம் நிகழும் சூழலை உணர்த்துவது களம். இதனை வெளி என்றும் கூறலாம்.**

14) கூற்றுகளை ஆராய்க.

1. நாடகத்தின் கதையைப் பிரித்து அமைக்கும் பிரிவு அங்கம் எனப்படும்.

2. பொதுவாக நாடகத்தின் கதையை ஐந்து அங்கமாகப் பிரிப்பர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. நாடகத்தின் கதையைப் பிரித்து அமைக்கும் பிரிவு அங்கம் எனப்படும்.**

**2. பொதுவாக நாடகத்தின் கதையை ஐந்து அங்கமாகப் பிரிப்பர்.**

15) சங்கரதாச சுவாமிகளின் காலம் என்ன?

**A) 1867–1922**

B) 1892–1952

C) 1873–1964

D) 1860–1904

**விளக்கம்: 1867– 1922 – சங்கரதாச சுவாமிகள்**

**1892–1952–மதுரகவி பாஸ்கரதாஸ்**

**1873–1964–பம்மல் சம்பந்தனார்**

**1860–1904–ஆண்டன் செகாவ்**

16) தமிழ்நாடகத்தந்தை என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

B) சங்கரதாசு சுமாமிகள்

C) பரிதிமாற்கலைஞர்

**D) பம்மல் சம்பந்தனார்**

**விளக்கம்: தமிழ் நாடகத்தந்தை என்று அழைக்கப்பட்ட பம்மல் சம்பந்தனார் நாடக அமைப்பிலும் நடிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதின் மூலம் தமிழ் நாடகத்தை மேனாட்டு நாடகங்களுக்கு நிகராக மாற்றினார்.**

17) சிறுவர்களைக் கொண்டு 'பாய்ஸ் கம்பெனி' என்ற பாலர் நாடக்குழுவை உருவாக்கியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: சங்கரதாசு சுவாமிகள் சிறுவர்களைக் கொண்ட 'பாய்ஸ் கம்பெனி' என்ற பாலர் நாடக்குழுவை உருவாக்கினார். இதைத் தொடர்ந்து பல குழுக்கள் உருவாயின. இவரைத் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைப்பர்.**

18) கூற்று: தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்பட்ட நடிகர் ஆர்.எஸ்.மனோகர் ஆவார்

காரணம்: இரவு முழுவதும் நடைபெற்ற நாடகங்களை மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்குள் முடிக்கும் முறையைக் கொண்டுவந்தவர்.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்பட்ட நடிகர் ஆர்.எஸ்.மனோகர் ஆவார். கல்லூரி நாடகத்தில் 'மனோகர்' கதாபாத்திரத்தில் நடித்ததால், அதையே தன் பெயராக மாற்றிக் கொண்டவர்.**

19) "இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) திரு.வி.க

B) காந்தியடிகள்

**C) அண்ணா**

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: "இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது"என்ற வரிகளை எழுதியவர் அறிஞர் அண்ணா ஆவார்.**

20) ஆண்டன் செகாவ் என்பவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) அமெரிக்கா

B) இத்தாலி

**C) ரஷ்யா**

D) பிரேசில்

**விளக்கம்: ஆண்டன் செகாவ் (1860–1904) என்பவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர் ஆவார். இவர் புனைகதை இலக்கிய உலகில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார்.**

21) ஆண்டன் செகாவ் எழுதிய நாடகங்களில் பொருந்தாதது எது?

A) செர்ரிப் பழத்தோட்டம்

B) மூன்று சகோதரிகள்

**C) கடல் மீன்**

D) அங்கிள் வான்யா

**விளக்கம்: ஆண்டன் செகாவ் என்பவர் படைத்த கடல் பறவை, அங்கில் வான்யா, மூன்று சகோதரிகள், செர்ரிப் பழத்தோட்டம் ஆகிய நான்கு நாடகங்கள் மற்றும் அவரது சிறந்த சிறுகதைகள் ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்களிடம் தனி மரியாதையை ஏற்படுத்தின.**

22) தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே யாரால் உண்டாக்க முடிந்தது என்று பேரறிஞர் அண்ணா கூறினார்?

A) ஜவஹர்லால் நேரு

B) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

C) திலகர்

**D) காந்தியடிகள்**

**விளக்கம்: தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது என்று காந்தியடிகள் பற்றி அவரின் மறைவுக்கு அறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

23) எதன் மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவு என குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்?

A) வாழ்வதன் வழி

B) செய்யும் தொழிலின் மூலம்

C) தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம்

**D) இயற்கை இயக்கத்தின் மூலம் பெறும் அறிவு**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின் மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

24) பழங்கதைகளில் குறைவான பாத்திரங்களின் தர்க்கத்திற்கு இடமளித்து நாடகங்களை உருவாக்கியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: பழங்கதைகளின் குறைவான நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு பாத்திரங்களின் தர்க்கத்திற்கு இடமளித்து நாடகங்களை உருவாக்கியவர் சங்கரதாசு சுவாமிகள் ஆவார்.**

25) மதுரகவி பாஸ்கரதாஸ்–ன் காலம் என்ன?

A) 1867–1922

B) **1892–1952**

C) 1873–1964

D) 1860–1904

**விளக்கம்: 1867– 1922 – சங்கரதாச சுவாமிகள்**

**1892–1952–மதுரகவி பாஸ்கரதாஸ்**

**1873–1964–பம்மல் சம்பந்தனார்**

**1860–1904–ஆண்டன் செகாவ்**

26) தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்று அழைக்கப்படுபவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுமாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: சங்கரதாசு சுவாமிகள் சிறுவர்களைக் கொண்ட 'பாய்ஸ் கம்பெனி' என்ற பாலர் நாடக்குழுவை உருவாக்கினார். இதைத் தொடர்ந்து பல குழுக்கள் உருவாயின. இவரைத் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைப்பர்.**

27) ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்து ஒருவர் – என்று பேச்சுக்கலை பற்றிய கூற்றை கூறியவர் யார்?

A) பேரறிஞர் அண்ணா

**B) ஔவையார்**

C) விவேகானந்தர்

D) திரு.வி.க

**விளக்கம்: கருத்து வெளிப்பாட்டிற்கான பேச்சுமொழி, கலை வடிவமாக உருப்பெற்றுச் சமூகத்தின் மிக இன்றியமையாத அடையாளமாகவும் ஆளுமைத் திறனாகவும் வளர்ந்திருக்கிறது. இதன் காரணமாகவே, "ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர்**

**வார்த்தை பதினாயிரத்து ஒருவர்" என்று ஔவையார் பாடியுள்ளார்.**

28) பேச்சுக்கலையைச் சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள் என்று கூறியவர் யார்?

**A) வின்ஸ்டன் சர்ச்சில்**

B) உட்ரோ வில்சன்

C) மார்ட்டின் லூதர் கிங்

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: "மனிதனுக்கு உள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல், அதைச்சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள். அந்தக் கலையைக்கற்றவர்கள், இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள்" – வின்ஸ்டன் சர்ச்சில்.**

29) கட்டியங்காரன் உரையாடலுடன் கூடிய கூத்துக்கள் தமிழகத்தின் வட பகுதியில் நடத்தப்படுகின்றன. இவற்றிற்கு பதிலாக தென் பகுதியில் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய ஸ்பெஷல் நாடக முறையை உருவாக்கியவர் யார்?

A) பரிதிமாற்கலைஞர்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) ஆர்.எஸ்.மனோகர்

D) கவிராயர்

**விளக்கம்: கட்டியங்காரன் உரையாடலுடன் கூடிய கூத்துக்கள் தமிழகத்தின் வட பகுதியில் நடத்தப்படுகின்றன. இவற்றிற்கு பதிலாக தென் பகுதியில் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய ஸ்பெஷல் நாடக முறையை உருவாக்கியவர் சங்கரதாசு சுவாமிகள். பின்பு நடிகர் நடிகையர்கள் ஒருவரோடு ஒருவர் வெவ்வேறு இடங்களில் மாறி மாறி இணைந்து நடிப்பது இந்நாடகத்தின் இயல்புகளுள் ஒன்றாகும்.**

30) கூற்று: தமிழகத்தின் தொன்மையான கலைவடிவங்களுள் ஒன்று, கூத்துக்கலை. இது தெருக்கூத்து எனப்படுகிறது.

காரணம்: தெருவில் நடத்தப்படும் கூத்து என்பதால், இது தெருக்கூத்து என அழைக்கப்படுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

**விளக்கம்: தமிழகத்தின் தொன்மையான கலைவடிவங்களுள் ஒன்று, கூத்துக்கலை. இது தெருக்கூத்து எனவும்அழைக்கப்படுகிறது. தெருவில் நடத்தப்படும் கூத்து என்பதால், இது தெருக்கூத்து என அழைக்கப்படுகிறது**

31) இசையை முதன்மைப்படுத்தி கூத்து மரபுகளை உள்வாங்கி நாடகங்களைப் படைத்தவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: இசையை முதன்மைப்படுத்திக் கூத்து மரபுகளை உள்வாங்கி நாடகங்களைப் படைத்தவர் சங்கரதாசு சுவாமிகள் ஆவார்.**

32) "விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள், நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவற்றின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்" என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) என்.எஸ்.கிருஷ்ணன்

C) விவேகானந்தர்

**D) திரு.வி.க**

**விளக்கம்: "விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள், நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவற்றின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்" – திரு.வி.க**

33) திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் மதுரகவி பாஸ்கரதாஸ்–ன் நாடகப்பாடல்களை எந்த இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது?

**A) ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ்**

B) பிக் மாஸ்டர் வாய்ஸ்

C) சவுண்ட் மாஸ்டர் வாய்ஸ்

D) மியூக் மாஸ்டர் வாய்ஸ்

**விளக்கம்: திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் மதுரகவி பாஸ்கரதாஸ்–ன் நாடகப்பாடல்களைப் புகழ்பெற்ற ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது**

34) ஆட்டம், இசை, சிறிதளவு வசனம் என்று இருந்த தெருக்கூத்து நாடகங்களின் அமைப்பைக் குறைத்து, கற்பனைச் சிறப்பும் சந்தநயம் மிக்கதுமான பாடல்களை படைத்தவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: ஆட்டம், இசை, சிறிதளவு வசனம் என்று இருந்த தெருக்கூத்து நாடகங்களின் அமைப்பைக் குறைத்து, கற்பனைச் சிறப்பும் சந்தநயம் மிக்கதுமான பாடல்களை படைத்தவர் சங்கரதாசு சுவாமிகள் ஆவார்.**

35) தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்படுபவர் யார்?

**A) ஆர்.எஸ்.மனோகர்**

B) பாலமணி அம்மையார்

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்பட்ட நடிகர் ஆர்.எஸ்.மனோகர் ஆவார். கல்லூரி நாடகத்தில் 'மனோகர்' கதாபாத்திரத்தில் நடித்ததால், அதையே தன் பெயராக மாற்றிக் கொண்டவர்.**

36) தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்ற நாடக நூலை எழுதியவர் யார்?

A) சங்கரதாசு சுவாமிகள்

B) கவிராயர்

**C) டி.கே.சண்முகம்**

D) ஔவை சண்முகம்

**விளக்கம்: தமிழ் நாடகத் தலைமையாசியர் என்னும் நூலை எழுதியவர் டி.கே.சண்முகம் ஆவார்.**

**கவிராயர், சுவாமிகளை நோக்கி, "சங்கரதாச சுவாமிகளே, உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன." என்றார். அவர் கூறியதனைக் கேட்டவுடன். சங்கரதாச சுவாமிகள் சிரித்துக்கொண்டே, "கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும்போல் இருக்கின்றனவே" என்றாராம்.**

**இங்கும் முள்ளும் முரடும் என்றால் பலாச்சுளைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

**கல்லும் கரடும் என்றால், கற்கண்டடைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

**மேற்காணும் சொல்லாற்றல் இடம்பெற்றுள்ள நூல் – தமிழ் நாடகத் தலைமையாசிரியர்**

37) "விடிவெள்ளி தோன்றுவது போலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிகஉண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது" என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

**C) அறிஞர் அண்ணா**

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: "விடிவெள்ளி தோன்றுவது போலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிகஉண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது" என்ற வரிகள் காந்தியடிகள் மறைவுக்கு அறிஞர் அண்ணா ஆற்றிய உரையாகும்.**

38) ஜெயந்தன் எழுதிய எந்த வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது?

A) நினைக்கப்படும்

B) சிந்தனைக்கூடல்

**C) சிறகை விரி, வானம் உனது**

D) சிந்தனைக்களஞ்சியம்

**விளக்கம்: ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவர் பெ.கிருஷ்ணன். இவர் திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது 'நினைக்கப்படும்' என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 'சிறகை விரி, வானம் உனது' என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர் ஆவார்.**

39) பம்மல் சம்பந்தனார் வெளியிட்ட இதழ் எது?

A) நாடகத்தமிழ்

B) நாடகஅரங்கம்

**C) இந்திய நாடகமேடை**

D) தமிழன் நாடகம்

**விளக்கம்: நாடகத்தமிழ், நாடகமேடை நினைவுகள், பேசும்பட அனுபவங்கள் ஆகியன பம்மல் சம்பந்தனார் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களாகும். 'இந்திய நாடக மேடை' என்ற இதழையும் இவர் வெளியிட்டார்.**

40) தமிழ் நாடக மரபை பின்பற்றியும் கால மாற்றங்களுக்கேற்ப நாடகம் படைத்தவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: தமிழ் நாடக மரபைபின்பற்றியும் கால மாற்றங்களுக்கேற்ப நாடகம் படைத்தவர் சங்கரதாசு சுவாமிகள் ஆவார்.**

41) ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்த பிறகு அறிமுகமான அரங்க அமைப்பு எது?

A) அண்மை அரங்கம்

B) திறந்தவெளி அரங்கம்

**C) படச் சட்ட அரங்கம்**

D) அரை வட்ட வடிவ அரங்கம்

**விளக்கம்: அரங்கத்தில் பார்வையாளர்களை அமரவைக்கின்ற நிலையையும் காட்சிகள் நடக்கும் இடத்தில் கருத்தில்கொண்டு, நாடக அரங்கங்களைக் கீழக்காணுமாறு வகைப்படுத்தலாம்,**

**1. படச் சட்ட அரங்கம்**

**2. வட்ட வடிவ அரங்கம்**

**3. அரை வட்ட வடிவ அரங்கம்**

**4. சதுர அரங்கம்**

**5. செவ்வக அரங்கம்**

**6. முக்கோண அரங்கம்**

**7. அண்மை அரங்கம்**

**8. திறந்தவெளி அரங்கம்**

**படங்களுக்குப் போடும் சட்டத்தைப் போன்று அமைந்திருப்பதைப் படச்சட்ட அரங்கம் என்பர். இந்த அமைப்பு நமக்கு ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்த பிறகு அறிமுகமானது. சென்னைக் கன்னிமாரா நூலக வளாகத்தில், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட முன்மேடை அமைப்போடு அமைந்த படச்சட்ட அரங்கம் உள்ளது.**

42) பம்மல் சம்பந்தனாரின் காலம் என்ன?

A) 1867– 1922

B) 1892–1952

**C) 1873–1964**

D) 1860–1904

**விளக்கம்: 1867– 1922 – சங்கரதாச சுவாமிகள்**

**1892–1952–மதுரகவி பாஸ்கரதாஸ்**

**1873–1964–பம்மல் சம்பந்தனார்**

**1860–1904–ஆண்டன் செகாவ்**

43) நடிகர்கள் விருப்பம்போல் வசனங்களைப் பேசிவந்த நிலையை மாற்றி வரையறுத்த நாடகப் பிரதிகளை உருவாக்கியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: நடிகர்கள் விருப்பம்போல் வசனங்களைப் பேசிவந்த நிலையை மாற்றி வரையறுத்த நாடகப் பிரதிகளை உருவாக்கியவர் சங்கரதாசு சுவாமிகள் ஆவார்.**

44) இன்பநாள், உலகம் சிரிக்கிறது ஆகிய சமூக நாடகங்களை அரங்கேற்றியவர் யார்?

**A) ஆர்.எஸ்.மனோகர்**

B) பாலமணி அம்மையார்

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: பல திரைப்படங்களில் நடித்திருந்தாலும், நாடகத்தின் மீது கொண்ட காதலால் 'நேஷனல் தியேட்டர்ஸ்' என்ற நாடக நிறுவனத்தை 1954இல் தொடங்கினார். 'இன்ப நாள்', 'உலகம் சிரிக்கிறது' ஆகிய சமூக நாடகங்களை அரங்கேற்றினார் ஆர்.எஸ்.மனோகர்.**

45) பத்தாயிரம் பேரில் ஒருவரே சிறந்த பேச்சாளராகத் திகழ்வார் என்று வலியுறுத்தியவர் யார்?

A) திரு.வி.க

**B) ஔவையார்**

C) அறிஞர் அண்ணா

D) விவேகானந்தர்

**விளக்கம்: கற்றிந்த அறிஞர்கள் கூடியிருக்கும் உயர்ந்த சபைகளில் அமரும் தகுதி, நூறுபேரில் ஒருவருக்கே கிடைக்கும். ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞராகத் திகழ்வார். ஆனால், பத்தாயிரம் பேரில் ஒருவரே சிறந்த பேச்சாளராகத் திகழ்வார் என்று ஔவையார் வலியுறுத்தியுள்ளார். இத்தகைய ஆற்றல்வாய்ந்தது பேச்சுக்கலை ஆகும்.**

46) மதுரகவி என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) சங்கரதாஸ் சுவாமிகள்

B) பரிதிமாற்கலைஞர்

**C) பாஸ்கரதாஸ்**

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: மதுரகவி என்று அழைக்கப்பட்டவர் பாஸ்கரதாஸ் ஆவார். சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர், தமிழ் நாடக் கலைஞர் மதுரகவி பாஸ்கரதாஸ். ஆங்கிலேய அரசின் அடக்குமுறையை எதிர்த்தவர். நாடு முழுவதும் விடுதலை அரசியல் வீறுகொண்ட காலகட்டத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் மீதும் காந்தியடிகளின் அகிம்சைவழிப் போராட்டங்களின் மீதும்**

**பற்றுக்கொண்ட இவர், தம் நாடகங்களில் பாடல்களின்வழி விடுதலைக்கருத்துகளைப் பொதுமக்களிடத்தில் கொண்டு சேர்த்தார்.**

47) "நீங்கள் கால்மணி நேரம் சொற்பொழிவாற்ற எத்தனை நாள்கள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு, இரண்டு வாரம் என்று பதிலளித்தவர் யார்?

A) அறிஞர் அண்ணா

B) குன்றக்குடி அடிகளார்

C) திரு.வி.க

**D) உட்ரோ வில்சன்**

**விளக்கம்: அமெரிக்கக் குடியரசுத்தலைவராக இருந்த உட்ரோ வில்சனிடம் நண்பவர் ஒருவர், "நீங்கள் கால்மணி நேரம் சொற்பொழிவற்ற எத்தனை நாள்கள் தயார் செய்வீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர், "இரண்டு வாரம்" என்றாராம். பிறகு, "ஒரு மணி நேரம் பேச ஒரு வாரம்"என்றாராம். பிறகு, "இரண்டு மணி நேரம் பேச வேண்டும் என்றால், எத்தனை நாள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு "இப்போதே பேசுகிறேன்" என்றாராம்.**

48) மனிதனுக்கு உரிய திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல் என்று கூறியவர் யார்?

**A) வின்ஸ்டன் சர்ச்சில்**

B) உட்ரோ வில்சன்

C) மார்ட்டின் லூதர் கிங்

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: "மனிதனுக்கு உள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல், அதைச்சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள். அந்தக் கலையைக்கற்றவர்கள், இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள்" – வின்ஸ்டன் சர்ச்சில்.**

49) பம்மல் சம்பந்தனார் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களில் பொருந்தாது எது?

A) நாடகத்தமிழ்

B) நாடகமேடை நினைவுகள்

C) பேசும்பட அனுபவங்கள்

**D) இந்திய நாடகமேடை**

**விளக்கம்: நாடகத்தமிழ், நாடகமேடை நினைவுகள், பேசும்பட அனுபவங்கள் ஆகியன பம்மல் சம்பந்தனார் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களாகும். 'இந்திய நாடக மேடை' என்ற இதழையும் இவர் வெளியிட்டார்.**

50) பாடல்கள் மிகுந்திருந்த தமிழ் நாடகங்களில் உரையாடல்களை முதன்மைப்படுத்தியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

B) சங்கரதாசு சுவாமிகள்

C) பரிதிமாற்கலைஞர்

**D) பம்மல் சம்பந்தனார்**

**விளக்கம்: புராண, வரலாற்று, நாடகங்களுடன் மக்களின் வாழ்க்கையை ஒட்டிய கதைகளைக் கொண்ட, இயல்பான பேச்சு மொழியில் அமைந்த சமூக நாடகங்களையும் இவர் நடத்தினார். பாடல்கள் மிகுந்திருந்த தமிழ் நாடகங்களில் உரையாடல்களை முதன்மைப்படுத்தினார் பம்மல் சம்பந்தனார்.**

51) இயற்கை இயக்கத்தின் மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும் என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

52) தமிழனுக்கு நாடக அரங்குகளும் திரைப்படக் கொட்டகைகளும் பொழுதுபோக்குகளாக இருந்த காலகட்டத்தில் புத்தொளி வெளிச்சமாக யாருடைய மேடைப்பேச்சு மலரத்தொடங்கியது?

A) திரு.வி.க

**B) அறிஞர் அண்ணா**

C) விவேகானந்தர்

D) ம.பொ.சிவஞானம்

**விளக்கம்: தமிழனுக்கு நாடக அரங்குகளும் திரைப்படக் கொட்டகைகளும் பொழுதுபோக்குகளாக இருந்த காலகட்டத்தில் புத்தொளி வெளிச்சமாக அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சு மலரத்தொடங்கியது**

53) அவர் உரையில் அதிர்வோ ஆர்ப்பாட்டமோ இருக்காது. எளிமையான கருத்துப் பொழிவில் எழில் சேர்ப்பார். கருத்துக்களை தெள்ளிய நீரோடைபோலக் கேட்போர் இதயங்களில் பாயச் செய்வார் – இவ்வரியில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) அறிஞர் அண்ணா

**B) திரு.வி.க**

C) குன்றக்குடி அடிகளார்

D) காந்தியடிகள்

**விளக்கம்: "திரு.வி.கலியாணசுந்தரனாரின் உரை மேடையில் மெல்லிய பூங்காற்றாக வீசியது. அவர் உரையில் அதிர்வோ ஆர்ப்பாட்டமோ இருக்காது. எளிமையான கருத்துப் பொழிவில் எழில் சேர்ப்பார். கருத்துக்களைத் தெள்ளிய நீரோடைப் போலக் கேட்போர் இதயங்களில் பாயச் செய்வார்"**

54) பாலாமணி அம்மையார் குறித்து அவ்வை சண்முகம் என்பவர் எழுதிய நூல் எது?

A) பாலாமணி அம்மை நாடக வாழ்க்கை

**B) எனது நாடக வாழ்க்கை**

C) பெண்மையின் நாடக வாழ்க்கை

D) நாடக மேடை நினைவுகள்

**விளக்கம்: பாலாமணி அம்மையார் குறித்து, அவ்வை சண்முகம் "எனது நாடக வாழ்க்கை"என்ற நூலை எழுதியுள்ளார்.**

55) 'நினைக்கப்படும்' என்ற நாடகத்தை எழுதியவர் எங்கு பிறந்தார்?

**A) திருச்சி**

B) சிவகங்கை

C) திருநெல்வேலி

D) தூத்துக்குடி

**விளக்கம்: ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவர் பெ.கிருஷ்ணன். இவர் திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது 'நினைக்கப்படும்' என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 'சிறகை விரி, வானம் உனது' என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர் ஆவார்.**

56) அரங்கம் 8 வகைப்படும். இதில் பொருந்தாதது எது?

A) சதுர அரங்கம்

B) செவ்வக அரங்கம்

C) முக்கோண அரங்கம்

**D) அறுங்கோண அரங்கம்**

**விளக்கம்: அரங்கத்தில் பார்வையாளர்களை அமரவைக்கின்ற நிலையையும் காட்சிகள் நடக்கும் இடத்தில் கருத்தில்கொண்டு, நாடக அரங்கங்களை கீழக்காணுமாறு வகைப்படுத்தலாம்,**

**1. படச் சட்ட அரங்கம்**

**2. வட்ட வடிவ அரங்கம்**

**3. அரை வட்ட வடிவ அரங்கம்**

**4. சதுர அரங்கம்**

**5. செவ்வக அரங்கம்**

**6. முக்கோண அரங்கம்**

**7. அண்மை அரங்கம்**

**8. திறந்தவெளி அரங்கம்**

57) பகத்சிங் தூக்கிலேற்றப்பட்ட நிகழ்வு, காந்தியடிகள் பங்கேற்ற வட்டமேசை மாநாடு, பஞ்சாப் படுகொலை ஆகிய நிகழ்வுகளை கொண்டு யார் இயற்றிய நாடகப் பாடல்கள் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டன?

A) பம்மல் சம்பந்தனார்

**B) மதுரகவி பாஸ்கரதாஸ்**

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: பகத்சிங் தூக்கிலேற்றப்பட்ட நிகழ்வு, காந்தியடிகள் பங்கேற்ற வட்டமேசை மாநாடு, பஞ்சாப் படுகொலை ஆகிய நிகழ்வுகளைகொண்டு மதுரகவி பாஸ்கரதாஸ் இயற்றிய நாடகப் பாடல்கள் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டன.**

58) பழந்தமிழ் இலக்கிய வரிகளை, உரையாடலில் பயன்படுத்தியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: சங்கரதாசு சுவாமிகள் பழந்தமிழ் இலக்கிய வரிகளை உரையாடலில் பயன்படுத்தினார். இவரது நாடகங்களில் பாடல்களின் ஆதிக்கம் இருந்தது.**

59) முதன் முதலாக முழுவதும் பெண்களே பங்கேற்ற நாடகக் குழுவை தொடங்கியவர் யார்?

A) எம்.எஸ்.சுப்புலட்சுமி

B) அம்புஜதம்மாள்

C) அஞ்சலையம்மாள்

**D) பாலாமணி அம்மையார்**

**விளக்கம்: பாலாமணி அம்மையார் முதன் முதலாக முழுவதும் பெண்களே பங்கேற்ற 'பாலாமணி அம்மாள் நாடகக் குழு' வினைத் தொடங்கி நடத்தியவர். இவரின் குழுவில் 70 பெண்கள் இருந்தனர்.**

60) பேச்சுக் கலையைக்கற்றவர்கள், இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள் என்று கூறியவர் யார்?

**A) வின்ஸ்டன் சர்ச்சில்**

B) உட்ரோ வில்சன்

C) மார்ட்டின் லூதர் கிங்

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: "மனிதனுக்கு உள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல், அதைச்சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள். அந்தக் கலையைக்கற்றவர்கள், இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள்" – வின்ஸ்டன் சர்ச்சில்.**

61) ஒரு நாளில் இருவேறு கூட்டங்களில் பேசினாலும் கூறிய கருத்துகளை மீண்டும் கூறாதவர் யார்?

**A) அறிஞர் அண்ணா**

B) திரு.வி.க

C) காந்தியடிகள்

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: அண்ணா பேசும்போது உலக வரலாறும், உவமைகளும் அவரின் உரையில் தவழும். அவரின் மிகப்பெரிய சிறப்பு, ஒரு நாளில் இருவேறு கூட்டத்தில் பேசினாலும் கூறிய கருத்துக்களை மீண்டும் கூறமாட்டார். அதே உவமைகள் இருக்காது. மடைதிறந்த வெள்ளம்போல உரையாற்றும் ஆற்றல் பெற்றவர்.**

62) யாருடைய காலத்தில் படிப்படியாக நாடகங்கள் நகரங்களை நோக்கி நகர்ந்தன?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

**B) சங்கரதாசு சுவாமிகள்**

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: சங்கதாசு சுவாமிகள் காலத்தில் படிப்படியாக நகரங்களை நோக்கி நாடகங்கள் நகர்ந்தன.**

63) கூற்று: தமிழ் நாடகத்தை மேனாட்டு நாடகங்களுக்கு நிகராக மாற்றியவர் பம்மல் சம்பந்தனார்.

காரணம்: நாடக அமைப்பிலும், நடிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தினார்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனார் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: தமிழ் நாடகத்தந்தை என்று அழைக்கப்பட்ட பம்மல் சம்பந்தனார் நாடக அமைப்பிலும் நடிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதின் மூலம் தமிழ் நாடகத்தை மேனாட்டு நாடகங்களுக்கு நிகராக மாற்றினார்.**

64) எப்போது பம்மல் சம்பந்தனாரால் நிறுவப்பட்ட சுகுண விலாச சபை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பயில்முறை நாடகக் குழுவானது?

**A) 1891**

B) 1981

C) 1897

D) 1987

**விளக்கம்: 1891இல் பம்மல் சம்பந்தனாரால் நிறுவப்பட்ட சுகுண விலாச சபை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பயில்முறை நாடகக் குழுவாகும்.**

65) தேசிய கருத்துக்களை நுட்பமாக இணைத்து நாடகப் பாடல்களை இயற்றிக் கவி புனைவதில், புதிய முறைகளை உருவாக்கியவர் யார்?

A) பம்மல் சம்பந்தனார்

**B) மதுரகவி பாஸ்கரதாஸ்**

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: ஆங்கிலேய அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் நாடகங்களைக் கட்டுப்படுத்திய போது தேசிய கருத்துக்களை நுட்பமாக இணைத்து நாடகப் பாடல்களை இயற்றிக் கவி புனைவதில், புதிய முறைகளை உருவாக்கியவர் மதுரகவி பாஸ்கரதாஸ் ஆவார்**

66) ஆண்டன் செகாவ்–ன் காலம் என்ன?

A) 1867– 1922

B) 1892–1952

C) 1873–1964

**D) 1860–1904**

**விளக்கம்: 1867– 1922 – சங்கரதாச சுவாமிகள்**

**1892–1952– மதுரகவி பாஸ்கரதாஸ்**

**1873–1964– பம்மல் சம்பந்தனார்**

**1860–1904– ஆண்டன் செகாவ்**

67) 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர் யார்?

A) ஜெயகாந்தன்

B) அப்துல் ரகுமான்

C) பம்மல் சம்பந்தனார்

**D) மேற்காணும் யாருமில்லை**

**விளக்கம்: ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவர் பெ.கிருஷ்ணன். இவர் திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது 'நினைக்கப்படும்' என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 'சிறகை விரி, வானம் உனது' என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர் ஆவார்.**

68) மனிதன் தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான் என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

69) ராவணன், சூரபதுமன் உள்ளிட்ட எதிர்மறைக் கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகங்களை படைத்தவர் யார்?

**A) ஆர்.எஸ்.மனோகர்**

B) பாலமணி அம்மையார்

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: ராவணன், சூரபதுமன் உள்ளிட்ட எதிர்மறைக் கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகங்களைக் படைத்தவர் ஆர்.எஸ்.மனோகர் ஆவார். சிறப்பான மேடை அமைப்பும், தந்திரக் காட்சிகளும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன.**

70) புராண, வரலாற்று நாடகங்களுடன் மக்களின் வாழ்க்கையை ஒட்டிய கதைகளைக் கொண்ட, இயல்பான பேச்சு மொழியில் அமைந்த சமூக நாடகங்களை நடத்தியவர் யார்?

A) மதுரகவி பாஸ்கரதாஸ்

B) சங்கரதாசு சுவாமிகள்

C) பரிதிமாற்கலைஞர்

**D) பம்மல் சம்பந்தனார்**

**விளக்கம்: புராண, வரலாற்று, நாடகங்களுடன் மக்களின் வாழ்க்கையை ஒட்டிய கதைகளைக் கொண்ட, இயல்பான பேச்சு மொழியில் அமைந்த சமூக நாடகங்களையும் இவர் நடத்தினார். பாடல்கள் மிகுந்திருந்த தமிழ் நாடகங்களில் உரையாடல்களை முதன்மைப் படுத்தினார் பம்மல் சம்பந்தனார்.**

71) அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்தவர் யார்?

A) வின்ஸ்டன் சர்ச்சில்

B) உட்ரோ வில்சன்

**C) மார்ட்டின் லூதர் கிங்**

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்தவர் மார்ட்டின் லூதர் கிங். கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. 1963–ஆம் ஆண்டு ஆற்றிய 'எனக்கொரு கனவு உள்ளது' என்ற உரை மிகச்சிறந்த உரையாக இன்றும் போற்றப்படுகிறது.**

72) அவருடைய உடலமைப்போ பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை – இவ்வரிகளில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) பேரறிஞர் அண்ணா

B) அம்பேத்கர்

**C) காந்தியடிகள்**

D) பசும்பொன் முத்துராமலிங்தேவர்

**விளக்கம்: அவருடைய உருவமோ உடலமைப்போ பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை என்று காந்தியடிகள் பற்றி அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.**

73) "அறிவு ஒரு கருவியே. இதனைச் செயற்பாட்டுக்குத்தான் பயன்படுத்த வேண்டும்" என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: நம் நாட்டில் பேசுகின்ற திறன் நிறைய வளர்ந்துள்ளது. இதை வைத்துக்கொண்டு அவனுக்கு நிறைய தெரிந்திருப்பதாக எண்ணுகிறோம். அறிவு ஒரு கருவியே. இதனைச் செயற்பாட்டுக்குதான் பயன்படுத்த வேண்டும். தான் கற்ற கருத்தைச் செயல்படுத்துவதில்தான் அறிவின் திறன் இருக்கிறது – குன்றக்குடி அடிகளார்.**

74) சுகுண விலாச சபை என்ற நாடகக்குழுவை நிறுவியவர் யார்?

**A) பம்மல் சம்பந்தனார்**

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுமாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: 1891இல் பம்மல் சம்பந்தனாரால் நிறுவப்பட்ட சுகுண விலாச சபை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பயில்முறை நாடகக் குழுவாகும்.**

75) 'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே' என்று கூறியவர் யார்?

A) திருநாவுக்கரசர்

**B) மணிக்கவாசகர்**

C) சுந்தரர்

D) திருஞானசம்பந்தர்

**விளக்கம்: "வாழ்கின்றாய் வாழாதே நெஞ்சமே" என்பார் மாணிக்கவாசகர். அறிவார்ந்த ஆள்வினையோடு வாழ்தல் வேண்டும்.**

76) அரிச்சந்திரன் கதையை சந்திரஹரி என்று பொய் மட்டுமே பேசுகிற ஒருவரைப் பற்றிய கதையாக மாற்றியதன் மூலம் 'எதிர்க்கதை நாடகம்' என்னும் புதிய வகையையும் உருவாக்கியவர் யார்?

**A) பம்மல் சம்பந்தனார்**

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: அரிச்சந்திரன் கதையை சந்திரஹரி என்று பொய் மட்டுமே பேசுகிற ஒருவரைப் பற்றிய கதையாக மாற்றியதன் மூலம் 'எதிர்க்கதை நாடகம்' என்னும் புதிய வகையையும் உருவாக்கியவர் பம்மல் சம்பந்தனார் ஆவார்.**

77) 'நாடக அரசி' எனப்போற்றப்பட்டவர் யார்?

A) எம்.எஸ்.சுப்புலட்சுமி

B) அம்புஜதம்மாள்

C) அஞ்சலையம்மாள்

**D) பாலாமணி அம்மையார்**

**விளக்கம்: 'நாடகஅரசி' எனச் சிறப்பிக்கப்பட்ட பாலாமணி அம்மையாரின் நாடகங்கள், சமுதாய சீர்த்திருத்தங்களையே உள்ளடக்கங்களாகக் கொண்டிருந்தன. நாடக மேடையில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரே.**

78) அவரால் ராணுவங்களையும் எதிர்த்துக் நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது – இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) அறிஞர் அண்ணா

B) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

C) திரு.வி.க

**D) காந்தியடிகள்**

**விளக்கம்: காந்தியடிகளின் உருவமோ உடலமைப்போ பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.**

www.winmeen.com

79) பார்வையாளரின் மனத்தில் சோர்வை நீக்குவதற்கு நாடகங்களில்____________________ என்னும் உத்தி பயன்படுத்தப்படுகிறது?

A) பாடல்

**B) எதிர்நிலை**

C) நகைச்சுவை

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: பார்வையாளரின் மனத்தில் சோர்வை நீக்குவதற்கு நாடகங்களில் எதிர்நிலை என்னும் உத்தி பயன்படுத்தப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் காண்ட்ராஸ்ட் என்பர். ஒரு கதைமாந்தர் அவசரப்படும் நிலையில் இருந்தால், மற்றொரு கதைமாந்தர் நிதானத்தன்மை கொண்டவராகக் காட்டப்படுவார்.**

80) யாருடைய பாடல்கள் முள்ளும் முரடும் போல் இருக்கின்றன என்று கவிராயர் குறிப்பிட்டார்?

**A) சங்கரதாசு சுவாமிகள்**

B) பரிதிமாற்கலைஞர்

C) பாலாமணி அம்மையார்

D) ஆர்.எஸ்.மனோகர்

**விளக்கம்: கவிராயர், சுவாமிகளை நோக்கி, "சங்கரதாச சுவாமிகளே, உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன." என்றார். அவர் கூறியதனைக் கேட்டவுடன். சங்கராச சுவாமிகள் சிரித்துக்கொண்டே, "கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும்போல் இருக்கின்றனவே" என்றாராம்.**

**இங்கும் முள்ளும் முரடும் என்றால் பலாச்சுளைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

**கல்லும் கரடும் என்றால், கற்கண்டடைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

81) "இலங்கேஸ்வரன்" நாடகத்தை இலங்கையில் தொடர்ந்து 21 நாள்கள் நடத்தியவர் யார்?

**A) ஆர்.எஸ்.மனோகர்**

B) பாலமணி அம்மையார்

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: ஆர்.எஸ்.மனோகரின், 'இலங்கேஸ்வரன்' நாடகம் வியக்கத்தக்க அளவில் தயாராகியிருந்தது. இலங்கையில் இந்த நாடகத்தை தொடர்ந்து 21 நாள்கள் நடத்துவதற்கான வாய்ப்பு கிடைத்து. நாடகத்தைப் பார்த்து வியந்த மக்கள், இவருக்கு 'இலங்கேஸ்வரன்' என்ற பட்டத்தைக் கொடுத்து கவுரவித்தனர்.**

82) "ஆறு அறிவுடையவன் எல்லாம் உடையவன். அவன் ஆவது அறிவான். செய்திகளைச் சேகரிப்பதுதான் அறிவா? நூலறிவு அறிவின் அளவுகோலா?" என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) திரு.வி.க

C) விவேகானந்தர்

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: "ஆறு அறிவுடையவன் எல்லாம் உடையவன். அவன் ஆவது அறிவான். செய்திகளைச் சேகரிப்பதுதான் அறிவா? நூலறிவு அறிவின் அளவுகோலா?" – குன்றக்குடி அடிகளார்.**

83) திரு.வி.க. எப்போது நடைபெற்ற தமிழ் மாணாக்கர் மாநாட்டில் தலைமையுரையாற்றினார்?

A) 08.07.1923

**B) 07.08.1923**

C) 08.07.1933

D) 07.08.1933

**விளக்கம்: திரு.வி.க. தமிழ் மாணாக்கர் மாநாட்டில் 07.08.1923 இல் ஆற்றிய தலைமையுரையில், "சகோதரிகளே, சகோதரர்களே இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளை இடுவதற்கு என் மனம் எழவில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்களுக்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக" என்று கூறினார்.**

84) தற்காலத்தில் 'பட்டிமன்றம்' என்று அழைக்கப்படுவது, முன்பு எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) பட்டிமண்றம்

**B) பட்டிமண்டபம்**

C) வழக்காடு மன்றம்

D) பட்டுமன்றம்

**விளக்கம்: தற்காலத்தில் 'பட்டிமன்றம்' என்று அழைக்கப்படுவது, முன்பு 'பட்டிமண்டபம்' என்று அழைக்கப்பட்டது. பட்டிமண்டபம் என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், கம்பராமாயணம் முதலான நூல்களில் காணப்படுகிறது.**

85) திரைச்சீலைகளை மூன்று வகை என சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இதில் கரந்துவரல் எழினி என்பது என்ன?

**A) மேலிருந்து கீழே இறங்கும் திரை**

B) கீழிலிருந்து மேலே செல்லும் திரை

C) ஒரே பக்கத்தில் இழுக்கப்படுகின்றன திரை

D) இரு பக்கமும் திரையைத் திறக்கின்ற துணி

**விளக்கம்: திரைச்சீலைகளை மூன்று வகைகளாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அவை,**

**1. ஒரு முக எழினி– ஒரே பக்கத்தில் இழுக்கப்படுகின்றன திரை**

**2. பொரு முக எழினி– இரு பக்கமும் திரையைத் திறக்கின்ற துணி**

**3. கரந்துவரல் எழினி– மேலிருந்து கீழே இறங்கும் திரை**

86) கூத்து தொடங்கும்முன் அரைமணி நேரத்திற்கு மிருதங்கம், ஜால்ரா உள்ளிட்ட இசைக்கருவிகள் அனைத்தும் ஒரு சேர ஒலிக்கும். இவ்வொலி, ஊராரை அழைப்பதற்கு உதவியாக இருக்கும். இதனை தென்னாற்காடு மாவட்டத்தில் ______________________என்பர்.

**A) தாளக்கட்டு**

B) களரிதட்டுதல்

C) இசைத்தட்டு

D) அழைப்புதட்டு

**விளக்கம்: கூத்து தொடங்கும்முன் அரைமணி நேரத்திற்கு மிருதங்கம், ஜால்ரா உள்ளிட்ட இசைக்கருவிகள் அனைத்தும் ஒரு சேர ஒலிக்கும். இவ்வொலி, ஊராரை அழைப்பதற்கு உதவியாக இருக்கும். இதனைக் களரிகட்டுதல் என்பர். இதனை தென்னாற்காடு மாவட்டத்தில் தாளக்கட்டு என்பர். களரி கட்டுக்குப் பிறகு, பார்வையாளர்கள் முன் தோன்றுகிற, குறிப்பிடத்தக்க முதல் கதைமாந்தனைக் கட்டியங்காரன் என அழைக்கிறோம்.**

87) கட்டியம் என்பதன் பொருள் என்ன?

A) பொன்மொழி

**B) புகழ்மொழி**

C) இசைமொழி

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: கட்டியம் என்றால், அரசன் முன் புகழ்மொழி கூறுதல் என்று பொருள். தெருக்கூத்துக் கதைமாந்தர்களின் அருமை பெருமைகளைச் சொல்லிப் பார்வையாளர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்துவதாலும் கட்டியங்காரன் எனப் பெயர்பெற்றுள்ளான்.**

88) யாருடைய பாடல்கள் கல்லும் கரடும் போல் இருக்கின்றன என்று சங்கரதாசு சுவாமிகள் குறிப்பிட்டார்?

A) சங்கரதாசு சுவாமிகள்

B) பரிதிமாற்கலைஞர்

C) பாலாமணி அம்மையார்

**D) கவிராயர்**

**விளக்கம்: கவிராயர், சுவாமிகளை நோக்கி, "சங்கரதாச சுவாமிகளே, உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன." என்றார். அவர் கூறியதனைக் கேட்டவுடன். சங்கரதாசு சுவாமிகள் சிரித்துக்கொண்டே, "கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும்போல் இருக்கின்றனவே" என்றாராம்.**

**இங்கும் முள்ளும் முரடும் என்றால் பலாச்சுளைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

**கல்லும் கரடும் என்றால், கற்கண்டடைப்போல் இனிக்கிறது என்று பொருள்.**

89) நாடக மேடையில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?

A) ஆர்.எஸ்.மனோகர்

**B) பாலமணி அம்மையார்**

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: 'நாடகஅரசி' எனச் சிறப்பிக்கப்பட்ட பாலாமணி அம்மையாரின் நாடகங்கள், சமுதாய சீர்த்திருத்தங்களையே உள்ளடக்கங்களாகக் கொண்டிருந்தன. நாடக மேடையில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரே.**

90) "வாழ்வதன்வழி முதல் அறிவு பெறுகிறான், செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்" என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

91) 'எதிர்க்கதை நாடகம்' என்னும் புதிய வகையை உருவாக்கியவர் யார்?

**A) பம்மல் சம்பந்தனார்**

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: அரிச்சந்திரன் கதையை சந்திரஹரி என்று பொய் மட்டுமே பேசுகிற ஒருவரைப் பற்றிய கதையாக மாற்றியதன் மூலம் 'எதிர்க்கதை நாடகம்' என்னும் புதிய வகையை உருவாக்கியவர் பம்மல் சம்பந்தனார் ஆவார்.**

92) யாருடைய புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டுவந்தது என அறிஞர் அண்ணா கூறுகிறார்?

A) திலகர்

B) பசும்பொன் முத்துராமலிங்தேவர்

**C) காந்தியடிகள்**

D) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

**விளக்கம்: காந்தியடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டுவந்தது என அறிஞர் அண்ணா காந்தியடிகள் மறைவுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

93) கூற்று: கூத்துக்களில் பார்வையாளர்கள் முன் தோன்றுகிற, குறிப்பிடத்தக்க முதல் கதைமாந்தனைக் கட்டியங்காரன் என அழைக்கிறோம்.

காரணம்: தெருக்கூத்துக் கதைமாந்தர்களின் அருமை பெருமைகளைச் சொல்லிப் பார்வையாளர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்துவதால் கட்டியங்காரன் எனப் பெயர்பெற்றுள்ளான்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: கூத்துக்களில் பார்வையாளர்கள் முன் தோன்றுகிற, குறிப்பிடத்தக்க முதல் கதைமாந்தனைக் கட்டியங்காரன் என அழைக்கிறோம். கட்டியம் என்றால், அரசன் முன் புகழ்மொழி கூறுதல் என்று பொருள். தெருக்கூத்துக் கதைமாந்தர்களின் அருமை பெருமைகளைச் சொல்லிப் பார்வையாளர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்துவதால் கட்டியங்காரன் எனப் பெயர்பெற்றுள்ளான்.**

94) கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) வின்ஸ்டன் சர்ச்சில்

B) உட்ரோ வில்சன்

**C) மார்ட்டின் லூதர் கிங்**

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்தவர் மார்ட்டின் லூதர் கிங். கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. 1963–ஆம் ஆண்டு ஆற்றிய 'எனக்கொரு கனவு உள்ளது' என்ற உரை மிகச்சிறந்த உரையாக இன்றும் போற்றப்படுகிறது.**

95) "வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையராக்குதலும் பண்பு நலமுடையோராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத்தக்க வழியில் மக்களுடைய வாழ்க்கை நடைமுறை இல்லை" என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) திரு.வி.க

C) விவேகானந்தர்

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: "மக்களாகப் பிறந்தோர், இயற்கை வழங்கிய அறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும். வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையராக்குதலும் பண்பு நலமுடையோராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத்தக்க வழியில் மக்களுடைய வாழ்க்கை நடைமுறை இல்லை" – குன்றக்குடி அடிகளார்.**

96) இரவு முழுவதும் நடைபெற்ற நாடகங்களை மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்குள் முடிக்கும் முறையைக் கொண்டுவந்தவர் யார்?

**A) பம்மல் சம்பந்தனார்**

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: இரவு முழுவதும் நடைபெற்ற நாடகங்களை மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்குள் முடிக்கும் முறையைக் கொண்டுவந்தவர் பம்மல் சம்பந்தனார் ஆவார்.**

97) ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவரின் இயற்பெயர் என்ன?

**A) பெ.கிருஷ்ணன்**

B) ராஜம் கிருஷ்ணன்

C) ஜெயகாந்தன்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: ஜெயந்தன் என்னும் புனைப்பெயர் கொண்டவர் பெ.கிருஷ்ணன். இவர் திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது 'நினைக்கப்படும்' என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 'சிறகை விரி, வானம் உனது' என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர் ஆவார்.**

98) நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும் என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

99) "உங்களை நன்முறையில் பயன்படுத்த தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாய் இருக்கிறாள். அவளைப் பற்றியுள்ள பீடிகைகள் எல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்" என்று கூறியவர் யார்?

**A) திரு.வி.க**

B) விவேகானந்தர்

C) காந்தியடிகள்

D) அறிஞர் அண்ணா

**விளக்கம்: "உங்களை நன்முறையில் பயன்படுத்த தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாய் இருக்கிறாள். அவளைப் பற்றியுள்ள பீடிகைகள் எல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்" என்று கூறியவர் திரு.வி.க ஆவார்**

100) விடிவெள்ளி தோன்றுவது போல யார் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிகஉண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது?

A) கோபால கிருஷ்ண கோகலே

B) ஜவஹர்லால் நேரு

C) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

**D) திலகர்**

**விளக்கம்: "விடிவெள்ளி தோன்றுவது போலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிகஉண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது" என்ற வரிகள் காந்தியடிகள் மறைவுக்கு அறிஞர் அண்ணா ஆற்றிய உரையாகும்.**

101) 'நேஷனல் தியேட்டர்ஸ்' என்ற நாடக நிறுவனத்தை 1954–இல் தொடங்கியவர் யார்?

**A) ஆர்.எஸ்.மனோகர்**

B) பாலமணி அம்மையார்

C) கவிராயர் முத்துச்சாமி

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: ஆர்.எஸ்.மனோகர் பல படங்களில் கதாநாயகனாக நடித்தார். ஆனாலும் நாடகத்தின் மீதான காதலால் 'நேஷனல் தியேட்டர்ஸ்' என்ற நாடக நிறுவனத்தை 1954–இல் தொடங்கினார்.**

102) கூற்றுகளை ஆராய்க.

1. கட்டியங்காரன் உரையாடலுடன் கூடிய கூத்துக்கள் தமிழகத்தின் தென் பகுதியில் நடத்தப்படுகின்றன.

2. இவற்றிற்கு பதிலாக வட பகுதியில் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கட்டியங்காரன் உரையாடலுடன் கூடிய கூத்துக்கள் தமிழகத்தின் வட பகுதியில் நடத்தப்படுகின்றன.**

**2. இவற்றிற்கு பதிலாக தென் பகுதியில் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன.**

103) பட்டிமண்டபம் என்ற சொல் கீழ்க்காணும் எந்த நூலில் காணப்படவில்லை?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

**C) சீவகசிந்தாமணி**

D) திருவாசகம்

**விளக்கம்: தற்காலத்தில் 'பட்டிமன்றம்' என்று அழைக்கப்படுவது, முன்பு 'பட்டிமண்டபம்' என்று அழைக்கப்பட்டது. பட்டிமண்டபம் என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், கம்பராமாயணம் முதலான நூல்களில் காணப்படுகிறது.**

104) ஒரு ரூபாய் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ஜெயந்தன்**

B) சங்கரதாஸ் சுவாமிகள்

C) பம்மல் சம்பந்தனார்

D) ஜெயகாந்தன்

**விளக்கம்: ஒரு ரூபாய் என்ற நாகடத்தை எழுதியவர் ஜெயந்தன் ஆவார். இது ஒரு ஒற்றை நடிகர் நாடகம் ஆகும்.**

105) யாருடைய நாடகங்களைப் பார்ப்பதற்கு ஆங்கில அரசாங்கம் சிறப்புத் தொடர்வண்டி விட்டது?

A) பம்மல் சம்பந்தனார்

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுவாமிகள்

**D) பாலாமணி அம்மையார்**

**விளக்கம்: "கும்பகோணத்தில் இரவு ஒன்பதரை மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். இதற்காகப் பார்வையாளர்களை ஏற்றிக்கொண்டு மாயாவரத்திலிருந்து இரவு எட்டு மணிக்கு ஒரு இரயில் கும்பகோணத்திற்கு வரும். அதேபோல எட்டரை மணிக்குத் திருச்சியிலிருந்து ஒரு ரயில் வரும். அந்த ரயில்கள், கும்பகோணத்தில் நின்று விட்டு, இரவு மூன்று மணிக்கு மீண்டும் புறப்பட்டு, மாயவரத்திற்கும்,**

**திருச்சிக்கும் போய்விடும். பாலாமணி நாடகங்களைப் பார்க்க ரசிகர்களுக்காக ஆங்கில அரசு இத்தகைய சிறப்புத் தொடர்வண்டி விட்டது. அத்தொடர்வண்டியை "பாலாமணி ஸ்பெஷல்" என்று அழைத்தனர்.**

106) 1963–ஆம் ஆண்டு 'எனக்கொரு கனவு உள்ளது' என்ற தலைப்பில் உரையாற்றியவர் யார்?

A) வின்ஸ்டன் சர்ச்சில்

B) உட்ரோ வில்சன்

**C) மார்ட்டின் லூதர் கிங்**

D) ஆபிரகாம் லிங்கன்

**விளக்கம்: அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்த மார்ட்டின் லூதர் கிங் சிறந்த பேச்சாளர். கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. 1963–ஆம் ஆண்டு ஆற்றிய 'எனக்கொரு கனவு உள்ளது' என்ற உரை மிகச்சிறந்த உரையாக இன்றும் போற்றப்படுகிறது.**

107) கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும் என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) விவேகானந்தர்

C) அறிஞர் அண்ணா

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: 1. வாழ்வதன் வழி முதல் அறிவு பெறுகிறான்.**

**2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான்.**

**3. தான் வாழும் காலத்தில் சூழ்நிலைத் தாக்கத்தலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான்.**

**4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும்.**

**5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும்.**

**6. இயற்கை இயக்கத்தின மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாகும்– குன்றக்குடி அடிகளார்.**

108) எந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் நொண்டி நாடகங்கள் தோன்றின?

A) 15

B) 16

**C) 17**

D) 18

**விளக்கம்: 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதில் நொண்டி நாடகங்கள் தோன்றின. திருக்கச்சூர் நொண்டி நாடகம், பழனி நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம் என்பன அவற்றுள் சில.**

109) "எழுங்கள் இளம்பரிதிகளே சாதிவேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்து ஓட தமிழ்க்கதிர் பரப்பி எழுங்கள் எழுங்கள்" என எழுச்சியுடன் கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) விவேகானந்தர்

C) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

**D) திரு.வி.க**

**விளக்கம்: "எழுங்கள் இளம்பரிதிகளே சாதிவேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்து ஓட தமிழ்க்கதிர் பரப்பி எழுங்கள் எழுங்கள்" என எழுச்சியுடன் கூறியவர் திரு.வி.க ஆவார்.**

110) பேச்சின் கூறுகள் எத்தனை?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கொண்டுவந்து தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப்பகுத்துப் பேசுவதையே பேச்சின் கூறுகள் என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.**

111) பேச்சின் அடிப்படை என்பது கீழ்க்காண்பனவற்றில் எது?

A) சுருக்கமாக பேசுதல்

**B) தெளிவாக பேசுதல்**

C) விரிவாக பேசுதல்

D) நடுநிலையுடன் பேசுதல்

**விளக்கம்: பேச்சின் அடிப்படை, தெளிவாகப் பேசுதலாகும். ஆகையால் சொல் தெளிவும் கருத்துத் தெளிவும் மிக முக்கியமானவை. கருத்து, சுருக்கமாக இருக்கும்போது தான் பேச்சு சுவைக்கும்.**

112) "இந்தியா என்றோர் நாடுண்டு. அங்கு ஏலம், கிராம்பு பெறுவது உண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு. போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில் 16–ஆம் நூற்றாண்டிலேயே உலகம் அறிந்திருக்கிறது" என்ற வரிகளை கூறியவர் யார்?

A) திரு, வி.க

B) காந்தியடிகள்

**C) அண்ணா**

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: "இந்தியா என்றோர் நாடுண்டு. அங்கு ஏலம், கிராம்பு பெறுவது உண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு. போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில் 16–ஆம் நூற்றாண்டிலேயே உலகம் அறிந்திருக்கிறது"என்ற வரிகள் காந்தியடிகள் மறைவுக்கு அண்ணா ஆற்றிய உரை ஆகும்.**

113) "நான் எனது பேச்சின்மூலம் வெற்றி பெறுவேன். என் பேச்சைக் கேட்பதற்காகவே நீங்கள் எல்லாரும் காத்துக்கொண்டு இருப்பீர்கள்" எனச் சூளுரைத்தவர் யார்?

A) வின்ஸ்டன் சர்ச்சில்

B) உட்ரோ வில்சன்

C) மார்ட்டின் லூதர் கிங்

**D) டிஸ்ரேலி**

**விளக்கம்: பிரிட்டன் நாட்டு முதன்மை அமைச்சராய் இருந்தவர் டிஸ்ரேலி. அவர், பொதுக் கூட்டங்களில் பேசிப் பழக்கமில்லாதவர். முதன் முதலில், அவையினர் முன் பேசுவதற்காக அவர் எழுந்தபோது, உடல் நடுங்கியது, நா குழறியது. பேச முடியாமல், உடல் வியர்த்தது, அமைதியாக உட்கார்ந்துவிட்டார். அதனால்,**

**அவையினரின் ஏளனப்பார்வைக்கு ஆளானர். இருந்தபோதிலும், அவர் கூட்டத்தினரைப் பார்த்து, "நான் எனது பேச்சின்மூலம் வெற்றி பெறுவேன். என் பேச்சைக் கேட்பதற்காகவே நீங்கள் எல்லாரும் காத்துக்கொண்டு இருப்பீர்கள்" என்று சூளுரைத்தார்.**

114) உடல் மனநலத்தைக் கெடுத்து இயக்க ஆற்றலைக் குறைப்பது கிரணம் எனும் உண்மையையும் ஓசோன் சார்ந்து சுறுசுறுப்பையும் உயிரியக்கத்தையும் மிகுதிப்படுத்தும் என்பதையும் அறியும் அறிவே ஆறாவது அறிவு என்று கூறியவர் யார்?

**A) குன்றக்குடி அடிகளார்**

B) என்.எஸ்.கிருஷ்ணன்

C) அறிஞர் அண்ணா

D) திரு.வி.க

**விளக்கம்: உடல் மனநலத்தைக் கெடுத்து இயக்க ஆற்றலைக் குறைப்பது கிரணம் எனும் உண்மையையும் ஓசோன் சார்ந்து சுறுசுறுப்பையும்உயிரியக்கத்தையும் மிகுதிப்படுத்தும் என்பதையும் அறியும் அறிவே ஆறாவது அறிவு – குன்றக்குடி அடிகளார்**

115) "நான் என்ன செய்வேன்? எனக்குள்ளதையெல்லாம் சேர்த்துத்தான் உங்கள் மன்னர் அணிந்திருக்கிறாரே" என்று கூறியவர் யார்?

A) அம்பேத்கர்

**B) காந்தியடிகள்**

C) அறிஞர் அண்ணா

D) ஜவஹர்லால் நேரு

**விளக்கம்: வட்ட மேஜை மாநாட்டுக்கு மகாத்மா காந்தி போயிருக்கும் போது, "இந்த வெறும் வேஷ்டியுடன், இப்படியேவா, மன்னரைப் பார்க்கப் போகிறீர்கள்?நல்ல ஆடைகள் அணிந்து கொள்ள வேண்டாவா?" என்று அங்குள்ள ஒருவர் கேட்டாராம். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே, "நான் என்ன செய்வேன்? எனக்குள்ளதையெல்லாம் சேர்த்துத்தான், உங்கள் மன்னர் அணிந்திருக்கிறாரே" என்று கேட்டுவிட்டாராம்.**

116) பெரியார் தன் பேச்சின் மூலம் ஏற்படுத்திய தாக்கம், அவர் உருவாக்கிய இயக்கம் அறிஞர்களை, தலைவர்களை, சிறந்த பேச்சாளர்களை மக்களுக்கு அடையாளம் காட்டியது. அவர்களுள் முதன்மையானவர் யார்?

A) திரு.வி.க

**B) பேரறிஞர் அண்ணா**

C) மு.வ

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: பெரியார் தன் பேச்சின் மூலம் ஏற்படுத்திய தாக்கம், அவர் உருவாக்கிய இயக்கம் அறிஞர்களை, தலைவர்களை, சிறந்த பேச்சாளர்களை மக்களுக்கு அடையாளம் காட்டியது. அவர்களுள் முதன்மையானவர் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தால் 'அறிஞர்' எனப் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா ஆவார்.**

117) கூற்றுகளை ஆராய்க.

1. கட்டியங்காரனை கோமாளி என்றும் பபூன் என்றும் கூறுவர்.

2. இயக்குநரை நெறியாளர் எனவும் அழைப்பர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கட்டியங்காரனை கோமாளி என்றும் பபூன் என்றும் கூறுவர்.**

**2. நடிகர், நடிகைகளை இயக்கக்கூடிய முழுப்பொறுப்பையும் ஏற்பவர் இயக்குநர். இயக்குநரை நெறியாளர் எனவும் அழைப்பர்.**

118) கூற்று: அண்ணா தனித்துவமான உரைகள் நிகழ்த்தக் கூடியவர் ஆவார்.

காரணம்: சென்னை கன்னிமாரா நூலகத்தில் அவர் கைபடாத நூல்கள் இல்லை என்னும் அளவிற்குச் சிறந்த வாசிப்பாளர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: அண்ணா மடைதிறந்த வெள்ளம்போல உரையாற்றும் ஆற்றல் பெற்றவர். சென்னைக் கன்னிமாரா நூலகத்தில் அவர் கைபடாத நூல்கள் இல்லை என்னும் அளவிற்குச் சிறந்த வாசிப்பாளர். அந்த வாசிப்புத்தான் அவரின் தனித்துவமான உரைகளுக்குக் காரணம் ஆகும்.**

119) "ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுக்கும் அற்புதம் அவர் காட்டினாரில்லை. ஆனால், ஊமைகளாக இருந்து வந்த மக்களைப் பேச செய்தார்" – இவ்வரிகளில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) திரு, வி.க

**B) காந்தியடிகள்**

C) அண்ணா

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: "ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுக்கும் அற்புதம் அவர் காட்டினாரில்லை. ஆனால், ஊமைகளாக இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார். உரிமை முழக்கமிடச் செய்தார்"– காந்தியடிகள் மறைவுக்கு அண்ணா ஆற்றிய உரை.**

120) மக்களாய் பிறந்தோர் இயற்கை வழங்கிய அறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும் என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) திரு.வி.க

C) விவேகானந்தர்

**D) குன்றக்குடி அடிகளார்**

**விளக்கம்: "மக்களாகப் பிறந்தோர், இயற்கை வழங்கியஅறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும். வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையராக்குதலும் பண்பு நலமுடையோராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத்தக்க வழியில் மக்களுடைய வாழ்க்கை நடைமுறை இல்லை" – குன்றக்குடி அடிகளார்.**

121) பேச்சின் தொடக்கமாக இருந்தாலும் முடிவாக இருந்தாலும் தம் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் வெற்றியடைந்துள்ளவர் யார்?

**A) திரு.வி.க**

B) பெரியார்

C) அறிஞர் அண்ணா

D) காந்தியடிகள்

**விளக்கம்: பேச்சின் தொடக்கமாக இருந்தாலும் முடிவாக இருந்தாலும் தம் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் வெற்றியடைந்துள்ளவர் திரு.வி.க ஆவார். இவரைத் 'தமிழ்த்தென்றல்' எனவும் அழைப்பர்.**

122) ஏதென்ஸ் நகரில் வீதி வீதியாகச் சென்று இளைஞர்களைத் தம்கருத்துக்கள் மூலம் சிந்திக்க வைத்தவர் யார்?

A) டிஸ்ரேலி

B) ஆப்ரகாம் லிங்கன்

C) வின்ஸ்டன் சர்ச்சில்

**D) சாக்ரடீஸ்**

**விளக்கம்: தமிழக வரலாற்றில் பல ஆண்டுகளாகச் சிந்தனை இன்றி உழன்ற மக்களைச் சிந்திக்க வைத்து, பகுத்தறிவுடன் வாழ வழிகாட்டிய தலைவர் தந்தை பெரியார். ஏதென்ஸ் நகரில் சாக்ரடீஸ் எப்படி வீதி வீதியாகச் சென்று, இளைஞர்களைத் தம் கருத்துக்கள் மூலம் சிந்திக்க வைத்தாரோ, அதே போன்று மிகப்பெரிய சிந்தனை எழுச்சியைத் தமிழ்நாட்டு வீதிகளில் ஏற்படுத்தியவர் தந்தை பெரியார்.**

123) "ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக்காட்டினார்" என்ற வரிகளில் குறிப்பிடப்படுவர் யார்?

A) திரு, வி.க

**B) காந்தியடிகள்**

C) அண்ணா

D) குன்றக்குடி அடிகளார்

**விளக்கம்: "ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார். சிட்டுக்குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்" என்ற வரிகளில் குறிப்பிடப்படுபவர் காந்தியடிகள்.**

**மேற்காணும் வரி காந்தியடிகள் மறைவுக்கு அண்ணா ஆற்றிய உரை ஆகும்.**

124) பேச்சில் இலக்கிய நயம் இல்லாவிட்டாலும், இயல்பான பேச்சுத்தமிழ் மூலம் மக்களைச் சிந்திக்க வைத்தவர் யார்?

A) திரு.வி.க

**B) தந்தை பெரியார்**

C) பேரறிஞர் அண்ணா

D) காந்தியடிகள்

**விளக்கம்: தந்தை பெரியாரின் பேச்சில் இலக்கிய நயம் இருந்ததில்லை. இயல்பான பேச்சுத்தமிழில்தான் உரையாற்றுவார். ஆனால், அந்த இயல்பான பேச்சுத்தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்தது.**

125) "வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" என்று குறிப்பிடும் நூல் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) திருவாசகம்

D) கம்பராமாயணம்

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில், "வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" (5-102) என குறிக்கப்பட்டுள்ளது.**

126) அரங்குகள் அமைய வேண்டியமுறை பற்றி கீழ்க்காணும் எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A) மணிமேகலை

**B) சிலப்பதிகாரம்**

C) சீவக சிந்தாமணி

D) கம்பராமாயணம்

**விளக்கம்: தமிழின் முதல் காப்பியமாக சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையில், அரங்குகள் அமைய வேண்டியமுறை, அரங்கின் உயரம், திரைச்சீலைகளின் வகைகள், தூண்களின் நிழலைக்காட்டாது விளக்குகளை அமைக்க வேண்டியமுறை குறித்தெல்லாம் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.**

127) நாடகத்தில் இரண்டு கதைமாந்தர்கள் உச்சத்தில் தங்களுக்கு என்ன நடக்கப்போகிறது? எனத் தெரியாமல் இருப்பார்கள். இதனை ________________என்பர்.

A) எதிர்பார்ப்பு

B) கிளைமாக்ஸ்

**C) குறிப்பு முரண்**

D) காண்ட்ராஸ்ட்

**விளக்கம்: நாடகத்தில் இரண்டு கதைமாந்தர்கள் உச்சத்தில் தங்களுக்கு என்ன நடக்கப்போகிறது? எனத்தெரியாமல் இருப்பார்கள். ஆனால் பார்வையாளர்களுக்கு நடக்கப்போவது முன்னதாகவே தெரிந்துவிடும். இதனையே குறிப்புமுரண் என்பர். நாடக ஆசிரியர்கள் குறிப்புமுரண் மிகநுட்பமாகப் பயன்படுத்துவர். இதனை, நாடகமுரண் என்றும் கூறுவர்.**

128) மனோகரா, சபாபதி, சந்திரஹரி, சிறுத்தொண்டர் நாடகம் முதலிய நாடகங்களை எழுதியவர் யார்?

**A) பம்மல் சம்பந்தனார்**

B) மதுரகவி பாஸ்கரதாஸ்

C) சங்கரதாசு சுவாமிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: பம்மல் சம்பந்தனார் எழுதிய 94 நாடகங்களும் அச்சு நூலாக வெளிவந்துள்ளன. அவற்றுள் மனோகரா, சபாபதி, சந்திரஹரி, சிறுத்தொண்டர் நாடகம், உத்தமபத்தினி போன்றவை குறிப்பிடத்தக்கன.**

129) திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் யாருடைய நாடகப்பாடல்களைப் புகழ்பெற்ற ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது?

**A) மதுரகவி பாஸ்கரதாஸ்**

B) சங்கரதாசு சுமாமிகள்

C) பரிதிமாற்கலைஞர்

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் மதுரகவி பாஸ்கரதாஸ்–ன் நாடகப்பாடல்களைப் புகழ்பெற்ற ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது.**

130) எந்த பல்கலைக்கழகத்தால் 'அறிஞர்' எனப் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்டவர் பேரறிஞர் அண்ணா?

A) ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

B) சென்னைப் பல்கலைக்கழகம்

**C) யேல் பல்கலைக்கழகம்**

D) நியூயார்க் பல்கலைக்கழகம்

**விளக்கம்: அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் 'அறிஞர்' எனப் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்டவர் பேரறிஞர் அண்ணா.**

131) கீழ்க்காணும் எந்த பல்கலைக்கழகத்தில் நாடகப்பள்ளி உள்ளது?

A) தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழகம்

**B) பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்**

C) சென்னைப் பல்கலைக்கழகம்

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நாடகப்பள்ளி இருக்கிறது. தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் நாடகப்புலம் இருக்கிறது.**

132) திரைச்சீலைகளை எத்தனை வகைகளாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: திரைச்சீலைகளை மூன்று வகைகளாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அவை,**

**1. ஒரு முக எழினி– ஒரே பக்கத்தில் திரை இழுக்கப்படுகின்றன திரை**

**2. பொரு முக எழினி– இரு பக்கமும் திரையைத் திறக்கின்ற துணி**

**3. கரந்துவரல் எழினி– மேலிருந்து கீழே இறங்கும் திரை**

133) "பட்டிமண்டபத்து பாங்கு அறிந்து ஏற்றுமின்" என்று குறிப்பிட்டுள்ள நூல் எது?

A) சிலப்பதிகாரம்

**B) மணிமேகலை**

C) கம்பராமாயணம்

D) திருவாசகம்

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில், "வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" (5–102) எனவும், மணிமேகலையில் "பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏற்றுமின்" (1–16) எனவும் குறிக்கப்பட்டுள்ளது.**

134) நாடகத்தின் அடிப்படை அலகு எது?

A) களம்

B) அங்கம்

C) காட்சி

**D) உரையாடல்**

**விளக்கம்: உரையாடல்தான் நாடகத்தின் அடிப்படை அலகு. இது நாடகம் என்னும் இலக்கிய வடிவத்தை உருவாக்குகிறது.**

135) "87 ஆண்டுகளுக்கு முன்பு நமது முன்னோர்கள் இந்தக் கண்டத்தில் சுதந்திரத்தை மனத்திற்கொண்டும் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற எண்ணத்திற்கு அர்ப்பணித்தும் ஒரு புதிய நாட்டை உருவாக்கினர்" என்று கூறியவர் யார்?

A) விவேகானந்தர்

**B) அபிரகாம் லிங்கன்**

C) வின்ஸ்டன் சர்ச்சில்

D) டிஸ்ரேலி.

**விளக்கம்: கட்டிஸ்பர்க்கில் 1863 நவம்பர் 19ஆம் நாள் நடைபெற்ற நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு அபிரகாம் லிங்கன் உரை நிகழ்த்தினார். அதில், "87 ஆண்டுகளுக்கு முன்பு நமது முன்னோர்கள் இந்தக் கண்டத்தில் சுதந்திரத்தை மனத்திற்கொண்டும் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற எண்ணத்திற்கு அர்ப்பணித்தும் ஒரு புதிய நாட்டை உருவாக்கினர்" என்று கூறினார்.**

136) திரைச்சீலைகளை மூன்று வகை என சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இதில் பொருமுக எழினி என்பது என்ன?

A) மேலிருந்து கீழே இறங்குகும் திரை

B) கீழிலிருந்து மேலே செல்லும் திரை

C) ஒரே பக்கத்தில் இழுக்கப்படுகின்றன திரை

D) இரு பக்கமும் திரையைத் திறக்கின்ற துணி

**விளக்கம்: திரைச்சீலைகளை மூன்று வகைகளாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அவை,**

**1. ஒரு முக எழினி– ஒரே பக்கத்தில் இழுக்கப்படுகின்றன திரை**

**2. பொரு முக எழினி– இரு பக்கமும் திரையைத் திறக்கின்ற துணி**

**3. கரந்துவரல் எழினி– மேலிருந்து கீழே இறங்கும் திரை**

137) "பட்டிமண்டபம் ஏற்றினை" என்று குறிப்பிடப்பட்டுள்ள நூல் எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) கம்பராமாயணம்

**D) திருவாசகம்**

**விளக்கம்: திருவாசகத்தில் "பட்டிமண்டபம் ஏற்றினை"(சதகம் – 41) என்று சொல்லப்பட்டிருக்கிறது.**

138) அரங்கம் எத்தனை வகைப்படும்?

**A) 7**

B) 9

C) 5

D) 8

**விளக்கம்: அரங்கத்தில் பார்வையாளர்களை அமரவைக்கின்ற நிலையையும் காட்சிகள் நடக்கும் இடத்தை கருத்தில்கொண்டு, நாடக அரங்கங்களை கீழக்காணுமாறு வகைப்படுத்தலாம்,**

**1. படச் சட்ட அரங்கம்**

**2. வட்ட வடிவ அரங்கம்**

**3. அரை வட்ட வடிவ அரங்கம்**

**4. சதுர அரங்கம்**

**5. செவ்வக அரங்கம்**

**6. முக்கோண அரங்கம்**

**7. அண்மை அரங்கம்**

**8. திறந்தவெளி அரங்கம்**

139) கெட்டிஸ்பர்க்கில் எப்பேர்து நடைபெற்ற நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு அபிரகாம் லிங்கன் உரை நிகழ்த்தினார்?

**A) 1863 நவம்பர் 19**

B) 1873 நவம்பர் 19

C) 1883 நவம்பர் 19

D) 1893 நவம்பர் 19

**விளக்கம்: கெட்டிஸ்பர்க்கில் 1863 நவம்பர் 19ஆம் நாள் நடைபெற்ற நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு அபிரகாம் லிங்கன் உரை நிகழ்த்தினார்.**

140) "பன்னஅரும் கலைதெரி பட்டிமண்டபம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள காப்பியம் எது?

A)**கம்பராமாயணம்**

B) சிலப்பதிகாரம்

C) மணிமேகலை

D) சீவக சிந்தாமணி

**விளக்கம்: "பன்னஅரும் கலைதெரி பட்டிமண்டபம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது காப்பியம் கம்பராமாயணம் ஆகும்.**

141) பொதுவாக மேடைப்பேச்சில் எத்தனை வகையான நடைகள் உள்ளன?

A) 4

**B) 5**

C) 6

D) 7

**விளக்கம்: பொதுவாக மேடைப்பேச்சில் கடின நடை, எளிய நடை, இலக்கிய நடை, அடுக்குமொழி நடை, கொச்சை நடை என ஐவகை நடைகள் உள்ளன.**

## 11th Advanced Tamil Unit 3 Questions

### 3] ஊடகவியல்

1) தமிழ்க்கொடி என்ற இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) மறைமலை அடிகள்

**B) சி.பா.ஆதித்தனார்**

C) பாரதிதாசன்

D) பெருஞ்சித்தனார்

**விளக்கம்: தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவை,**

**1. மறைமலை அடிகள் – அறிவுக்கடல்**

**2. சி.பா.ஆதித்தனார்– தமிழன், தமிழ்க்கொடி**

**3. பாரதிதாசன் – குயில்**

**4. பெருஞ்சித்தனார்– தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

2) காரிருள் அகத்தில் நல்ல

கதிரொளி நீதான் – என்ற வரிகளை பாடியவர் யார்?

**A) பாரதிதாசன்**

B) பாரதியார்

C) கவிமணி

D) நாமக்கல் கவிஞர்

**விளக்கம்: காரிருள் அகத்தில் நல்ல**

**கதிரொளி நீதான் இந்தப்**

**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**

**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**

**ஊரினை நாட்டை இந்த**

**உலகினை ஒன்று சேர்க்கப்**

**பேரறி வாளர் நெஞ்சில்**

**பிறந்த பத்திரிகைப் பெண்ணே – பாரதிதாசன்**

3) 'மக்களாட்சியின் முதல் தூண்' என அழைக்கப்படுவது எது?

**A) அரசு நிர்வாகம்**

B) பாராளுமன்றம், சட்டமன்றம்

C) நீதிமன்றம்

D) ஊடகம்

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது. முதல் தூணாக அரசு நிருவாகமும், இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும், மூன்றாவது தூணாக நீதிமன்றமும், நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

4) செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது. இதில் பொருந்தாதது எது?

A) சமநிலைப் பக்க அமைப்பு

B) மாறுபட்ட பக்க அமைப்பு

C) கலப்பு பக்க அமைப்பு

**D) கூம்புப் பக்க அமைப்பு**

**விளக்கம்: செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது. அவை,**

**1. சமநிலைப் பக்க அமைப்பு**

**2. மாறுபட்ட பக்க அமைப்பு**

**3. கலப்பு பக்க அமைப்பு.**

5) கூற்றுகளை ஆராய்க.

1. தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்று சிந்தித்தவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார்.

2. 1990இலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்பட்டது தி ஹிந்து நாளிதழ்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்என்று சிந்தித்தவர் ஜி.கஸ்தூரி ஆவார்.**

**2. 1990இலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்பட்டது தி ஹிந்து நாளிதழ்.**

6) கூற்று: தந்தை பெரியார் எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டார்.

காரணம்: தமிழை விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டும்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார். தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும் எழுத்துருக்கள் இருக்கவேண்டும். மேலும் தமிழை விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார்.**

7) இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம்எங்குள்ளது?

**A) பெங்களுரு**

B) புது தில்லி

C) அகமதாபாத்

D) சென்னை

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி**

**இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களுரு.**

**முதுரா தகவல் தொடர்பு நிறுவனம் – அகமதாபாத்**

**ஆசிய இதழியல் கல்லூரி – சென்னை**

8) 'சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்' என்று பாரதியார் குறிப்பிடுவது கீழ்க்காணும் யாரை?

A) படித்த இந்தியர்கள்

**B) மிதவாதிகள்**

C) தீவிர தேசிய வாதிகள்

D) ஆங்கிலேயர்கள்

**விளக்கம்: நாடு விரைந்து சுதந்திரம் அடைய போராடியவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மிதவாதிகளைப் பாரதியார் தயக்கமின்றி எதிர்த்து எழுதினார். சித்திரம் ஒன்றில் அவர்களைகச் 'சுதேச ஒளிக்கும் அஞ்சும் ஆந்தைகள்' என்று பழித்தார்.**

9) ஜி.கஸ்தூரி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

A) இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாகக் கருதினார்

B) 1980இல் உலோக எழுத்துருக்களைக் கோத்து அச்சிடும் முறையிலிருந்து தட்டச்சு செய்து பக்கங்களைத் தயார் செய்யும் முறைக்கு மாறியபோதும் பின்னர், ஒளியச்சுக்கோவைக்கு மாறியபோதும் அவர் ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருக்கும் எந்தவொரு ஊழியரையும் மாற்றவில்லை.

C) செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட, மாநிலத் தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை நியமித்தது அவரது புதுமையான முயற்சியாகும்.

**D) ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியிலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வது செய்தித்தாளின் பணி என்று கருதினார்.**

**விளக்கம்: ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியிலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வது செய்தித்தாளின் பணி என்று கருதியவர் ஏ.என்.சிவராமன் ஆவார்.**

10) கூற்று: செய்தியின் முகப்புப்பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும்.
காரணம்: முகப்புப் பகுதி செய்திக்கு உயிரோட்டம் தருகிறது. படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: செய்தியின் முகப்புப்பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும். இது செய்திக்கு உயிரோட்டம் தருகிறது. படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.**

11) செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் எத்தனை பக்க அமைப்பைக் கொண்டுள்ளது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது. அவை,**

**1. சமநிலைப் பக்க அமைப்பு.**

**2. மாறுபட்ட பக்க அமைப்பு.**

**3. கலப்புநிலைப் பக்க அமைப்பு**

12) இதழ்களின் பத்திகள் எத்தனை செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்?

**A) 5**

B) 10

C) 2

D) 15

**விளக்கம்: இதழ்களில் பத்திகள் 5 செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இரண்டு பத்திக்குமிடையே தொடர்பு விட்டுப்போகுமிடத்தில் துணைத் தலைப்பிட்டு இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.**

13) 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் ஆங்கில அரசின் வரிவிதிப்பு பற்றிய பாரதியின் கருத்துப்படம் எப்போது வெளியானது?

A) 13.03.1909

B) 08.09.1906

C) 19.12.1908

**D) 30.03.1907**

**விளக்கம்: ஆங்கில அரசின் வரிவிதிப்புச் சார்ந்து 30.03.1907–இல் 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் வெளியான கருத்துப்படம் மக்களிடையே பெரிதும் பேசப்பட்டது.**

14) ஆங்கில அரசு வரிச்சலுகையாக கீழ்க்காணும் எதனை குறைத்துவிட்டதாக பாரதியார் தன் கருத்துப்படம் மூலம் விளக்கியுள்ளார்?

A) குடிநீர்

**B) உப்பு**

C) கைத்தறி ஆடை

D) அழகு சாதனப் பொருட்கள்

**விளக்கம்: அமைதியும், பலமும் கொண்ட இந்தியா என்ற யானையின்மீது சுங்கவரி, நிலவரி, தொழில்வரி, வருமான வரி முதலிய சுமக்க முடியாத வரிச்சுமைகளை ஏற்றி, அதன் கழுத்தின்மீது அமர்ந்து ஜான் புல்துரை (ஆங்கிலய அரசு) சவாரி செய்வதுபோல இக்கருத்துப்படம் அமைந்துள்ளது. இதில் சிறு வரிச்சலுகையாக உப்பு மூட்டையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பெரிய சுமையைக் குறைத்துவிட்டதாக ஆங்கில அரசு மகிழ்வதாகவும், யானை தன் மனத்திலே என்ன எண்ணம் வைத்திருக்கிறதோ யார் அறிவார், என்ற வினாவையும் எழுதியுள்ளமை பாரதியாரின் நுட்பமான வெளிப்பாட்டு உத்தியைக் காட்டுகிறது.**

15) கூற்றுகளை ஆராய்க.

1. வங்காளத்திலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்' மற்றும் 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்கள் தொடக்ககால கருத்துப்படங்களுக்காக அறிப்படுகின்றன.

2. தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதியார் நடத்திய இந்தியா என்ற இதழே ஆகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்' மற்றும் 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்கள் தொடக்ககால கருத்துப்படங்களுக்காக அறிப்படுகின்றன.**

**2. தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதியார் நடத்திய இந்தியா என்ற இதழே ஆகும்.**

16) பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. ஆனால் சுதேசிக்கப்பலின் தேவையை உணர்ந்து எத்தனை படங்கள் வரைந்துள்ளார்?

A) 2

B) 3

**C) 4**

D) 10

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால், சுதேசிக் கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்கள் வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைந்திருக்கின்றது.**

17) 'மக்களாட்சியின் இரண்டாவது தூண்' என அழைக்கப்படுவது எது?

A) அரசு நிர்வாகம்

**B) பாராளுமன்றம், சட்டமன்றம்**

C) நீதிமன்றம்

D) ஊடகம்

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது.முதல் தூணாக அரசு நிருவாகமும், இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும், மூன்றாவது தூணாக நீதிமன்றமும், நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

18) கூற்றுகளை ஆராய்க.

1. செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர்.

2. செய்தித்தாளின் பகுதிகள் நான்கு ஆகும்

3. ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை மூன்று காரணிகள் உறுதிசெய்கின்றன.

4. இதழாசிரியர்கள், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்வர்.

**A) 1, 4 சரி**

B) 2, 4 சரி

C) 1, 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர்.**

**2. செய்தித்தாளின் பகுதிகள் மூன்று. செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது**

**3. ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை நான்கு காரணிகள் உறுதிசெய்கின்றன. அவை,**

**1. செய்தி எழுதுவதற்குக் கிடைக்கும் நேரம்.**

**2. செய்தியின் உருவ அமைப்பு.**

**3. செய்தித்தாளில் அவற்றை வெளியிடுவதற்குக் கிடைக்கும் இடம்**

**4.செய்தி எழுதுபவரின் திறமை.**

**4. இதழாசிரியர்கள், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்வர்.**

19) சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம் எங்குள்ளது?

A) புனே

**B) மும்பை**

C) ஜாமியா

D) கோட்டயம்

**விளக்கம்: சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

**சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம் – மும்பை.**

**எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி – ஜமியா, புதுதில்லி**

**மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி – கோட்டயம், கேரளா**

20) தந்தை பெரியார் தாம் நடத்திய எந்த இதழில் தாம் மேற்கொள்ளப்போகும் எழுத்துரு மாற்றங்கள் குறித்து அறிவித்தார்?

A) ரிவோல்ட்

B) குடி அரசு

C) விடுதலை

**D) பகுத்தறிவு**

**விளக்கம்: பெரியார் தாம் நடத்திய பகுத்தறிவு இதழில் (30.12.1934) தாம் மேற்கொள்ளப்போகும் எழுத்துரு மாற்றங்கள் குறித்து அறிவித்தார். அதற்கு அடுத்த இதழிலிருந்து எழுத்துருக்களை மாற்றம் செய்து பதிப்பித்தார்.**

21) எப்போது பாரதியார் சுதேசமித்திரன் என்ற இதழின் துணையாசிரியராக சேர்ந்தார்?

A) 1856

**B) 1882**

C) 1889

D) 1904

**விளக்கம்: 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' 1889இல் நாளிதழாக மாறியது. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.**

22) இந்தியாவில் எந்த இதழில் கருத்துப்படம் முதன்முதலில் வெளியானது?

A) பெங்கால் கெஜட்

B) மெட்ராஸ் மெயில்

C) சுதேசமித்திரன்

**D) தில்லி ஸ்கெட்ச் புக்**

**விளக்கம்: 1850 ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும்.**

23) கூற்று: கஸ்தூரி தேசிய அளவில் நாளிதழ் ஆசிரியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

காரணம்: தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மை, காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

**விளக்கம்: தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மை, காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தியதால், கஸ்தூரி தேசிய அளவில் நாளிதழ் ஆசிரியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.**

24) பொருத்துக.

அ. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் இதழ்– 1. 1882

ஆ. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ்– 2. 1780

இ. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – 3. 1868

**A) 2, 3, 1**

B) 1, 3, 2

C) 2, 3, 1

D) 3, 2, 1

**விளக்கம்: இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் இதழ்– 1780**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ் – 1868**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ்– 1882**

25) ஊரினை நாட்டை இந்த

உலகினை ஒன்று சேர்க்கப்

பேரறி வாளர் நெஞ்சில்

பிறந்த பத்திரிகைப் பெண்ணே – என்ற வரிகளைபாடியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) நாமக்கல் கவிஞர்

D) கவிமணி

**விளக்கம்: காரிருள் அகத்தில் நல்ல**

**கதிரொளி நீதான் இந்தப்**

**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**

**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**

**ஊரினை நாட்டை இந்த**

**உலகினை ஒன்று சேர்க்கப்**

**பேரறி வாளர் நெஞ்சில்**

**பிறந்த பத்திரிகைப் பெண்ணே – பாரதிதாசன்**

**மேற்காணும் வரிகளில் குறிப்பிடப்படுவது பத்திரிக்கை ஆகும்.**

26) இதழ்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 4

C) 5

D) 6

**விளக்கம்: நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும் காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம்.**

**பருவ இதழ்கள் வாரம், வாரமிருமுறை, மாதம், மாதமிருமுறை, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனக் கால இடைவெளியை வரையறுத்துக்கொண்டு வெளிவருகின்றன.**

27) கூற்றுகளை ஆராய்க.

1. பாரதியார் 'புதிய அபிவிருத்தி' என்ற கட்டுரையில் "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்களை பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றர்.

2. பாரதியார் 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாரதியார் 'புதிய அபிவிருத்தி' என்ற கட்டுரையில் "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்களை பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றர்.**

**2. பாரதியார் 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.**

28) யாருடைய இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்ததுடன். புதுப்புதுத்தமிழ்ச் சொற்களும் உலா வந்தன?

A) அறிஞர் அண்ணா

B) தந்தை பெரியார்

C) **திரு.வி.க**

D) பாரதியார்

**விளக்கம்: தமிழ் இதழியலில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத்தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாக திகழ்ந்தது.**

29) இதழ்களை அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன – என்று கூறியவர் யார்?

**A) ஆலன் ஹோம் கோம்ப்**

B) வின்சென்ட் சர்ச்சில்

C) பாரதிதாசன்

D) பாரதியார்

**விளக்கம்: "இதழ்களை,** அவற்றில் **இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாக் கணிக்கின்றன" – ஆலன் ஹோம் கோம்ப்.**

30) கூற்றுகளை ஆராய்க.

1. செய்தித்தாள்கள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிக்கை உலகில் போற்றப்படுபவர் – டி.எஸ்.சொக்கலிங்கம்.

2. டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய 'காந்தி' இதழில் ஒரு பத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கியவர். ஏ.என்.சிவராமன் ஆவார்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. செய்தித்தாள்கள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிக்கை உலகில் போற்றப்படுபவர் – ஜி.கஸ்தூரி.**

**2. டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய 'காந்தி' இதழில் ஒரு பத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கியவர் ஏ.என்.சிவராமன்.**

31) ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை எத்தனை காரணிகள் உறுதி செய்கின்றன?

winmeen.com

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை நான்கு காரணிகள் உறுதிசெய்கின்றன.அவையாவன:**

**1. செய்தி எழுதுவதற்குக் கிடைக்கும் நேரம்.**

**2. செய்தியின் உருவ அமைப்பு.**

**3. செய்தித்தாளில் அவற்றை வெளியிடுவதற்குக் கிடைக்கும் இடம்**

**4. செய்தி எழுதுபவரின் திறமை.**

32) கீழ்க்காண்பனவற்றில் எது முதன்மை செய்திக்களம் அல்ல?

A) மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

B) மக்கள் செய்தித்தொடர்பு அலுவலகம்

C) காவல் நிலையங்கள்

**D) பல்கலைக்கழகங்கள்**

**விளக்கம்: மாவட்ட ஆட்சியர் அலுவலம், மக்கள் செய்தித்தொடர்பு அலுவலகம், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள் ஆகியவை முதன்மைச் செய்திக் களங்களாகக் கருதப்படுகின்றன.**

33) கூற்று: புகை நுழையமுடியாத இடத்திலும் செய்தியாளர்கள் நுழைந்துவிடுவர் என்னும் சொல் வழக்கு உள்ளது.

காரணம்: தீ பற்றிய செய்திகளை உடனடியாக சேகரித்து வழங்குவர்.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: செய்தியாளர்கள், செய்தி திரட்டுவதற்காக எல்லா இடங்களிலும் பம்பரமாய்ச் சுழல்வார்கள். எனவேதான், புகை நுழையமுடியாத இடத்திலும் செய்தியாளர்கள் நுழைந்துவிடுவர் என்னும் சொல் வழக்கு ஏற்பட்டது.**

34) கூற்றுகளை ஆராய்க.

1. நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் என்கிறோம்.

2. காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் என்கிறோம்.

3. நாளிதழ்கள் நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன.

4. செய்திகளை திரட்டுபவர்கள் செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர்.

A) 1, 2 சரி

B) 3, 4 சரி

C) 1, 2, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும் காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம்.**

**பருவ இதழ்கள் வாரம், வாரமிருமுறை, மாதம், மாதமிருமுறை, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனக் கால இடைவெளியை வரையறுத்துக்கொண்டு வெளிவருகின்றன.**

**நாளிதழ்கள், நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன. அவை உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.**

**செய்திகளை திரட்டுபவர்கள் செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர்.**

35) ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்று பாரதியார் தம் கருத்துப்படம் மூலம் விளக்கினார். இந்த கருத்துப்படம் இந்தியா என்ற இதழில் எப்போது வெளிவந்தது?

A) 13.03.1909

**B) 08.09.1906**

C) 11.12.108

D) 11.10.1912

**விளக்கம்: ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்று பாரதியார் சித்திரம் ஒன்றின் மூலம் இந்தியா இதழில் 08.09.1906–ல் விளக்கினார்.**

36) கல்விக்கதிர் என்ற இதழ் கீழ்க்காணும் எந்த ஆண்டுடன் தொடர்புடையது?

A) 1897

B) 1951

**C) 1969**

D) 1911

**விளக்கம்: ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர் கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டு வந்தன.**

37) ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையாது எது?

A) தலைப்பு

B) முகப்பு

C) பக்க அமைப்பு

**D) மொழிநடை**

**விளக்கம்: ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையானது அதனுடைய மொழி நடையாகும். சிறப்பான மொழிநடை மக்களை வெகுவாக ஈர்க்கிறது.**

38) கூற்றுகளை ஆராய்க.

1. நாளிதழ்கள் உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.

2. பருவ இதழ்கள், நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. நாளிதழ்கள் உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. நாளிதழ்களை உருவாக்குவதில் செய்தியாளர்கள், இதழாசிரியர்கள், பதிப்பாளர்கள் முகவர்கள் ஆகியோர் இன்றியமையாப் பணியாற்றுகின்றனர்.**

**2. பருவ இதழ்கள், நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன. இவை பல்வேறு துறைசார்ந்த பருவ இதழ்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக இலக்கிய இதழ்கள், அறிவியல் இதழ்கள்.**

39) பொருத்துக.

அ. பெங்கால் கெஜட்– 1. 1882

ஆ. மதராஸ் மெயில்– 2. 1780

இ. சுதேசமித்திரன்– 3. 1868

A) 1, 2, 3

B) 3, 2, 1

**C) 2, 3, 1**

D) 2, 1, 3

**விளக்கம்: பெங்கால் கெஜட் – 1780.**

**மதராஸ் மெயில்– 1868.**

**சுதேசமித்திரன்– 1882.**

40) கூற்று: ஊடகம் என்பது மக்களாட்சியின் நான்காவது தூண்

காரணம்: நான்கு திசைகளிலிருந்து செய்தியை திரட்டித் தருவது ஊடகம்.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

41) ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி என்று அழைக்கப்படுவது எது?

A) முகப்பு

**B) தலையங்கம்**

C) மொழி நடை

D) கருத்துப்படம்

**விளக்கம்: தலையங்கம் ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். எதனைப் பற்றி தலையங்கம் எழுதினாலும் தரவுகளைத் திரட்டி வைத்துக்கொண்டு நடுநிலையோடு எழுதுதல் வேண்டும்.**

42) 'தேசப்பிதா காந்திஜி'யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் எழுதியவர் யார்?

A) பாரதியார்

B) சுபாஷ் சந்திரபோஸ்

**C) திரு.வி.க**

D) அறிஞர் அண்ணா

**விளக்கம்: 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.**

43) பாரதியார் கீழ்க்காணும் யாரை நிதானக் கட்சியினர், பழையக் கட்சியினர் என்று அழைத்தார்?

A)**மிதவாதிகள்**

B) தீவிரதேசியவாதிகள்

C) அகிம்சைவாதிகள்

D) ஆங்கிலேயர்கள்

**விளக்கம்: நாடு விரைந்து சுதந்திரம் அடைய போராடியவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மிதவாதிகளைப் பாரதியார் தயக்கமின்றி எதிர்த்து எழுதினார். சித்திரம் ஒன்றில் அவர்களைக் 'சுதேச ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்' என்று பழித்தார். இவர்களை நிதானக் கட்சியினர், பழைய கட்சியினர் என்று அழைத்தார். அத்துடன் உலக அரசியல் நிகழ்வுகளைக் கூறியும் மிதவாதிகளை விமர்சித்தார்.**

44) தமிழின் முதல் வார இதழ் தினவர்த்தமானி ஆகும். இதனைத் தொடங்கியவர் யார்?

**A) பெர்சிவல் பாதிரியார்**

B) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

C) ஜோஹன்னஸ் கூடன்பர்க்

D) ரிச்சர்டு ஜான்

**விளக்கம்: தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிவில்லை. 1856–இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தனமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது.**

45) 'தேசபக்தன்' என்ற இதழை திரு.வி.க எப்போது தொடங்கினார்?

A) 1907

**B) 1917**

C) 1909

D) 1908

**விளக்கம்: 1917–இல் திரு.வி.க அவர்கள் 'தேசபக்தன்' என்ற நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே.**

46) வை.மு.கோதைநாயகி எப்போது "ஜகன்மோகினி" என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தினார்?

A) 1921

B) 1922

C) 1924

**D) 1925**

**விளக்கம்: வை.மு.கோதைநாயகி 1925இல் "ஜகன்மோகினி" என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தினார். முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" 1937இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது.**

47) தமிழில் அறிவியலுக்கு புகழ்பெற்ற காலைக்கதிர் என்ற இதழ் எப்போது முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது?

A) 1951

**B) 1948**

C) 1949

D) 1952

**விளக்கம்: தமிழில் புகழ்பெற்ற இதழான 'காலைக்கதிர்' 1948 முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்து கட்டுரைகளை அவ்விதழ் வெளியிடுகிறது.**

48) தமது தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மையாலும், காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தியதிலும் தேசிய அளவில் நாளிதழ் ஆசிரியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

**C) ஜி.கஸ்தூரி**

D) வை.மு.கோதைநாயகி

**விளக்கம்: ஜி.கஸ்தூரி, தமது தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மையாலும், காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தியதிலும் தேசிய அளவில் நாளிதழ் ஆசியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.**

49) ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு எத்தனை கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்று பாரதியார் தம் கருத்துப்படம் மூலம் விளக்கினார்?

**A) 45**

B) 50

C) 100

D) 25

**விளக்கம்: ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்று பாரதியார் தம் கருத்துப்படம் மூலம் விளக்கினார்.**

50) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) ஆங்கிலத்தில் கார்ட்டூன் என்று அழைக்கப்படும் சொல் தமிழில் கருத்துப்படம், விகடசித்திரம், வேடிக்கை வித்திரம், கேலிச்சித்திரம், விளக்கப்படம், கூர்த்தப்படம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

B) பாரதியாரின் காலம் 1882 முதல் 1921 வரையாகும்.

**C) வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் பெங்களுருவில் உள்ளது.**

D) சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழ வேண்டும் என்பதே தந்தை பெரியாரின் குறிக்கோளாக இருந்தது

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் புதுடெல்லியில் உள்ளது.**

51) வை.மு.கோதை நாயகி பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. தமிழ் இதழியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் ஆசிரியர், பொறுப்பேற்று நடத்திய "ஜகன்மோகினி" இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது ஒரு சாதனையாகும்.

2. இன்றைய மகளிர் இதழ்களின் தவிர்க்க முடியாத தன்மையாக விளங்கும் சமையல், கோலம், அழகுக்குறிப்பு, சோதிடம் போன்றவை அன்றைய ஜகன்மோகினியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தமிழ் இதழியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் ஆசிரியர், பொறுப்பேற்று நடத்திய "ஜகன்மோகினி" இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது ஒரு சாதனையாகும்.**

**2. இன்றைய மகளிர் இதழ்களின் தவிர்க்க முடியாத தன்மையாக விளங்கும் சமையல், கோலம், அழகுக்குறிப்பு, சோதிடம் போன்றவை அன்றைய ஜகன்மோகினியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

52) கூற்று: இந்தியா என்ற இதழுக்கு ஆங்கில அரசு தடை விதித்தது.

காரணம்: கருத்துப்படங்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய இதழ் இந்தியா.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: கருத்துப்படங்களுக்காகவும், கட்டுரைகளுக்காகவும், 'இந்தியா' என்ற இதழுக்கு ஆங்கில அரசு தடை விதித்திருந்தது அவை மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வினை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது.**

53) 'மக்களாட்சியின் மூன்றாவது தூண்' என அழைக்கப்படுவது எது?

A) அரசு நிர்வாகம்

B) பாராளுமன்றம், சட்டமன்றம்

**C) நீதிமன்றம்**

D) ஊடகம்

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது.முதல் தூணாக அரசு நிருவாகமும், இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும், மூன்றாவது தூணாக நீதிமன்றமும், நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான**

**கருத்துரிமையக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

54) வண்ண அச்சுமுறை நடைமுறைக்கு வந்தபோது வண்ணப்படங்களுக்காகவே எந்த நாளிதழ் புகழ்பெற்றன?

A) மெட்ராஸ் மெயில்

**B) தி ஹிந்து**

C) தினமணி

D) ஜகன்மோகினி

**விளக்கம்: வண்ண அச்சுமுறை நடைமுறைக்கு வந்தபோது வண்ணப்படங்களுக்காகவே தி ஹிந்து நாளிதழும் அதன் குழும இதழ்களும் புகழ்பெற்றன. நேர்த்தியான புகைப்படக் கலைஞர் ஒருவனின் கைவண்ணத்தில் உருவாகும் ஒரு வண்ணப்படம் அதே தரத்துடன் நாளிதழில் வெளியாகும்போதும் அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் ஜி.கஸ்தூரி.**

55) திரைப்படக் கல்லூரி எங்குள்ளது?

A) புனே

B) புதுதில்லி

**C) அடையாறு**

D) திருநெல்வேலி

**விளக்கம்: இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – புனே.**

**டைம்ஸ் இதழியல் பள்ளி – புதுதில்லி.**

**திரைப்படக் கல்லூரி – அடையாறு, சென்னை.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி.**

56) தமிழ்நாட்டில் முதல் நாளிதழ் எப்போது வெளிவந்தது?

A) **1868**

B) 1882

C) 1780

D) 1898

**விளக்கம்: தமிழ்நாட்டின்வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868).**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882).**

57) கூற்றுகளை ஆராய்க.

1. தலைப்பு 5 வகைப்படும்.

2. செய்திக்கு உயிரோட்டம் தருவது முகப்புப் பகுதியாகும்.

3. செய்தி விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

4. செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்

A) 1, 2, 3 சரி

B) 2, 3, 4 சரி

C) 1, 3 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. தலைப்பு 5 வகைப்படும்.**

**2. செய்திக்கு உயிரோட்டம் தருவது முகப்புப் பகுதியாகும்.**

**3. செய்தி விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**4. செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.**

58) எந்த ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும்.

A) 1882

B) 1868

C) 1780

**D) 1850**

**விளக்கம்: 1850 ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும்.**

59) தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். இதற்கு காரணமாக இருந்தது எது?

A) மணிமேகலை

**B) சிலப்பதிகாரம்**

C) சீவக சிந்தாமணி

D) வளையாபதி

**விளக்கம்: 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.**

60) ஆசிய இதழியல் கல்லூரி எங்குள்ளது?

A) பெங்களூரு

B) புது தில்லி

C) அகமதாபாத்

**D) சென்னை**

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி**

**இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களூரு.**

**முதுரா தகவல் தொடர்பு நிறுவனம் – அகமதாபாத்**

**ஆசிய இதழியல் கல்லூரி – சென்னை**

61) 'பாலபாரதம்' என்பது ஒரு ஆங்கில வார இதழ் ஆகும். இந்த இதழ் யாரால் தொடங்கப்பட்டது?

A) திரு.வி.க

**B) பாரதியார்**

C) அறிஞர் அண்ணா

D) ஜி.சுப்பிரமணிய ஐயர்

**விளக்கம்: மகாகவி பாரதியார், 1907இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.**

62) பாரதியார் சுதேசி கப்பல் பற்றி நான்கு படங்கள் வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் கீழ்க்காணும் எதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது?

A) தேசிய விடுதலைக்கு போராடுவது நமது கடமை

B) மிதவாதிகளுக்கு எதிராக தீவிர தேசியவாதிகள் போராட்டத்தை அறிவிக்க வேண்டும்

C) ஆங்கிலேயருக்கு எதிராக சுயமாக தொழில் செய்ய வேண்டும்

**D) சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை**

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால், சுதேசிக் கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்கள் வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைந்திருக்கின்றது.**

63) ராணி என்பது கீழ்க்காணும் யாருடைய இதழ்?

A) டி.எஸ்.சொக்கலிங்கம்

B) ஏ.என்.சிவராமன்

C) ஜி.கஸ்தூரி

**D) சி.பா.ஆதித்தனார்**

**விளக்கம்: "தினத்தந்து, ராணி ஆகிய சி.பா.ஆதித்தனாரின் இதழ்கள் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சுத்தமிழில் நடத்தப்படுகின்றன. ஆகவே அவை அதிகமாக விற்பனை ஆகின்றன." – ஜவஹர்லால் நேரு.**

64) செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் எத்தனை குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**1. செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.**

**2. செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.**

**3. செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும்.**

65) எந்த ஆண்டிலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்பட்டது தி ஹிந்து நாளிதழ்?

A) 1980

winmeen.com

B) 1987

**C) 1990**

D) 1992

**விளக்கம்: 1990இலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்பட்டது தி ஹிந்து நாளிதழ்.**

66) இதழ் செய்திகளை தயார் செய்வதில் எப்போது உலோக எழுத்துருக்களைக் கோத்து அச்சிடும் முறையிலிருந்து தட்டச்சு செய்து பக்கங்களைத் தயார் செய்யும் முறைக்கு மாறியது?

A) 1969

B) 1974

**C) 1980**

D) 1987

**விளக்கம்: 1980இல் உலோக எழுத்துருக்களைக் கோத்து அச்சிடும் முறையிலிருந்து தட்டச்சு செய்து பக்கங்களைத் தயார் செய்யும் முறைக்கு மாறியபோதும் பின்னர், ஒளியச்சுக்கோவைக்கு மாறியபோதும் ஜி.கஸ்தூரி ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருக்கும் எந்வொரு ஊழியரையும் மாற்றவில்லை.**

67) காந்தியடிகளின் இதழ்களில் ஒன்று மட்டும் பொருந்தாமல் உள்ளது. அதனை கண்டுபிடி?

A) இந்தியன் ஒபினியன்

B) யங் இந்தியா

C) ஹரிஜன்

**D) நவ இந்தியா**

**விளக்கம்: அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல்நுழைவு, இதழ்களின் வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென்னாப்பிரிகாவில், 'இந்தியன் ஒபினியன்' என்ற இதழையும், நம் நாட்டில் 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.**

68) 'மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுவது ஊடகம் ஆகும். இதற்கு நான்கு காரணங்கள் கூறப்படுகிறது. இதில் பொருந்தாதது எது?

A) அரசுக்கு வழிகாட்டுதல்

B) ஆலோசனைகளை வழங்குதல்

C) அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல்

D) **கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்**

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது.முதல் தூணாக அரசு நிருவாகமும், இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும், மூன்றாவது தூணாக நீதிமன்றமும், நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

69) பேச்சுத்தமிழைக் கொச்சைநீக்கி, மக்களின் மொழியில் எழுதவேண்டும் என நாளிதழ்களுக்காக பொன்விதி ஏற்படுத்தியவர் யார்?

A) தந்தை பெரியார்

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

C) திரு.வி.க

**D) சி.பா.ஆதித்தனார்**

**விளக்கம்: ஒரு செய்தித்தாள் என்பது, மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண வாசகனுக்கும் சென்று சேர வேண்டுமென்றால், அது எளிய மொழிநடையில் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். பேச்சுத்தமிழைக் கொச்சைநீக்கி, மக்களின் மொழியில் எழுதவேண்டும் என்பது, ஆதித்தனார் தமது நாளிதழ்களுக்காக ஏற்படுத்திய பொன்விதி.**

70) சென்னை தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை தொடங்கியவர் ஜி.கஸ்தூரி ஆவார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு 1969ஆம் ஆண்டு எந்த நகரத்திலிருந்து வெளிவந்தது?

A) திருச்சி

B) மதுரை

**C) கோயம்புத்தூர்**

D) பெங்களுரு

**விளக்கம்: சென்னை தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை தொடங்கியவர் ஜி.கஸ்தூரி ஆவார். ஆசியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்ட இம்முறையினால் செய்தித்தாள் விநியோகத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தினார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு 1969ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது.**

71) தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படும் இதழ்களில் பொருந்தாது எது?

A) அமிர்த பஜார் பத்திரிகா

B) அவத் பஞ்ச்

C) இந்தியன் பஞ்ச்

**D) பெங்கால் கெஜட்**

**விளக்கம்: 1850 ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும். வங்காளத்திலிருந்து வெளியியான அமிர்த பஜார் பத்திரிக்கா, தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்', 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்களும் தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படுகின்றன.**

72) தலைப்பு எத்தனை வகைப்படும்?

A) 4

**B) 5**

C) 3

D) 2

**விளக்கம்: தலைப்பு 5 வகைப்படும். அவை,**

**1. கூம்புத்தலைப்பு**

**2. தலைகீழ்க் கூம்புத்தலைப்பு**

**3. இடப்பக்கம் தள்ளிய தலைப்பு**

**4. வலப்பக்கம் தள்ளிய தலைப்பு**

**5. உடுக்குத் தலைப்பு**

73)செய்திகள் எத்தனை நிலைகளில் அமைதல் வேண்டும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.**

74) சகோதரர் என்ற இதழுடன் தொடர்புடையவர் யார்?

A) திலகர்

B) அரவிந்தர்

**C) சுவாமி விவேகானந்தர்**

D) காந்தியடிகள்

**விளக்கம்: இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் 'கேசரி' அரவிந்தரின் 'வந்தே மாதரம்' சுவாமி விவேகானந்தரின் 'சகோதரர்' போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.**

75) கூற்று: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும்.

காரணம்: கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று பாரதியார் நம்பினார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று பாரதியார் நம்பினார்.**

76) மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துகளை எங்கு பரப்புவதற்காகக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார்?

A) இத்தாலி

**B) ஜெர்மனி**

C) இங்கிலாந்து

D) பிரான்சு

**விளக்கம்: மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துகளை ஜெர்மனியில் பரப்புவதற்காகக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார்.**

77) இந்திய அளவிலான இதழியல் படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களுள் பொருத்தமற்றதை தெரிவு செய்க.

A) வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி.

B) இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களுரு

**C) முதுரா தகவல் தொடர்பு நிறுவனம் – புனே**

D) ஆசிய இதழியல் கல்லூரி – சென்னை

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி**

**இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களுரு.**

**முதுரா தகவல் தொடர்பு நிறுவனம் – அகமதாபாத்**

**ஆசிய இதழியல் கல்லூரி – சென்னை**

**சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

78) கூற்று: தந்தை பெரியார் எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டார்.

காரணம்: தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும் எழுத்துருக்கள் இருக்க வேண்டும்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார். தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும் எழுத்துருக்கள் இருக்கவேண்டும். மேலும் தமிழை விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார்.**

79) அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்று எழுதியவர் யார்?

A) அறிஞர் அண்ணா

B) பாரதியார்

C) திலகர்

**D) திரு.வி.க**

**விளக்கம்: காந்திஜியை காந்தியடிகள் என்று குறிப்பிட்டது போலவே, அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்றே திரு.வி.க எழுதினார்.**

80) தந்தை பெரியார் குடி அரசு, விடுதலை ஆகிய இதழ்களில் சிலவற்றை பற்றி எழுதியதன் மூலம் மிகச்சிறந்த எழுத்தாளராக அறியப்படுகிறார். இதில் பொருந்தாதது எது?

A) சமயம் சார்ந்த கருத்தாடல்கள்

B) பொருளியல் கொள்கை

C) பிற்படுத்தப்பட்டோரின் நிலை

**D) எழுத்து சீர்திருத்தம்**

**விளக்கம்: பெரியார் குடி அரசு, விடுதலை ஆகிய இதழ்களில் பெண்விடுதலை, இந்திய சமூக அமைப்பு, அதில் பிற்படுத்தப்பட்டோரின் நிலை, சுயமரியாதையோடு கூடிய அரசியல் சுதந்திரம், சமயம் சார்ந்த கருத்தாடல்கள், பொருளியல் கொள்கை போன்றவற்றை எழுதியதன் மூலம் மிகச்சிறந்த எழுத்தாளராக அறியப்படுகிறார்.**

81) 1935இல் நீதிக்கட்சிக்காக, தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை' என்னும் இதழ் சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது. ஆரம்பத்தில் அது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை வரும் இதழாக இருந்தது?

**A) வாரம் இருமுறை**

B) மாதம் இருமுறை

C) மாதம் ஒருமுறை

D) வாரம் ஒருமுறை

**விளக்கம்: 1935இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை' சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது.**

82) "அடுத்த வாரம் முதல் தலைப்பக்கத்தில் உள்ள ஒரு சித்திரம் மட்டுமே அன்றி, பக்கத்துக்குப் பக்கம் உள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குதவன் பொருட்டு ஆங்காங்குச் சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்" என்று குறிப்பிட்டவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) வ.உ.சி

D) வ.வே.சு.ஐயர்

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.03.1909) "தமிழ்நாட்டுப் வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார். "அடுத்த வாரம் முதல் தலைப்பக்கத்தில் உள்ள ஒரு சித்திரம் மட்டுமே அன்றி, பக்கத்துக்குப் பக்கம் உள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குதவன் பொருட்டு ஆங்காங்குச் சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்" என்றும் குறிப்பிடுகிறார்.**

83) கூற்றுகளை ஆராய்க.

1. முதியோர் கல்வி என்ற கல்வி இதழ் 1951 முதல் வெளிவந்தது.

2. தமிழ் இதழியலில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை மறைமலையடிகளாரையே சாரும்.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. முதியோர் கல்வி என்ற கல்வி இதழ் 1951 முதல் வெளிவந்தது.**

**2. தமிழ் இதழியலில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.க–வையே சாரும்.**

84) தமிழ்நாட்டில் முதல் தமிழ் நாளிதழ் எப்போது வெளிவந்தது?

A) 1868

**B) 1882**

C) 1780

D) 1898

**விளக்கம்: தமிழ்நாட்டில்வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868).**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882).**

85) பாரதியின் கருத்துப்படங்களில் நான்கு படங்கள் சுதேசிக்கப்பலின் தேவையை உணர்ந்து வரையப்பட்டவை. இதில் ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் கீழ்க்காணும் எதனை கூறுவதாக அமைந்திருக்கின்றது?

A) தேசிய விடுதலைக்கு உதவுங்கள்

B) ஆங்கிலேயரின் பொருட்களை பயன்படுத்தாதீர்கள்

**C) இதற்கு உதவுங்கள்**

D) அகிம்சை கொள்கையை பின்பற்றுங்கள்

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால், சுதேசிக் கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்கள் வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைந்திருக்கின்றது.**

86) தமிழ் உரைநடை வரலாற்றில் யாருடைய நடை குறிப்பிடத்தக்க ஒன்றாக திகழ்ந்தது?

A) அறிஞர் அண்ணா

B) தந்தை பெரியார்

**C) திரு.வி.க**

D) பாரதியார்

**விளக்கம்: தமிழ் இதழியலில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத்தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாக திகழ்ந்தது.**

87) திரு.வி.க–கீழ்க்காணும் எந்த சொல்லை முதன்முதலில் உருவாக்கினார்?

**A) வல்லரசு**

B) நல்லரசு

C) பேரரசு

D) சுதந்திர அரசு

**விளக்கம்: 'வல்லரசு' என்ற புதிய அரசியல் பதத்தை முதன்முதலில் உருவாக்கியவர் திரு.வி.க ஆவார்.**

88) 'அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது' என்ற வரியில் அவர் என்று குறிப்பிடப்படுவர் யார்?

A) பாரதிதாசன்

B) திரு.வி.க

C) தந்தை பெரியார்

**D) பாரதியார்**

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களைப் பற்றிப் பாரதிதாசன் எழுதும்போது, "அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று" என்று, பாரதியின் கருத்துப்படம் பற்றிய பாரதிதாசன் எழுதியுள்ளார்.**

89) சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் எங்குள்ளது?

**A) புனே**

B) மும்பை

C) ஜாமியா

D) கோட்டயம்

**விளக்கம்: சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

**சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம்– மும்பை.**

**எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி– ஜமியா, புதுதில்லி**

**மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி– கோட்டயம், கேரளா**

90) பெரியார் பல்வேறு இதழ்களில் பணியாற்றினாலும், கீழ்க்காணும் எந்த இதழ் அவரின் மனக்கருத்தை வெளிப்படுத்தின?

**A) குடி அரசு, விடுதலை**

B) விடுதலை, புரட்சி

C) குடி அரசு, பகுத்தறிவு

D) பகுத்தறிவு, ரிவோல்ட்

**விளக்கம்: பெரியார் பல்வேறு இதழ்களில் பணியாற்றினாலும், பெரியாரால் தொடங்கப்பட்ட 'குடி அரசு' என்ற இதழும், தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் நீதிக்கட்சிக்காக தொடங்கப்பட்ட 'விடுதலை' என்ற இதழுமே அவரின் முழுமையான மனக்கருத்தை வெளிப்படுத்தின.**

91) கூற்றுகளை ஆராய்க.

1. ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் வரைந்து சுதேசமித்திரன் இதழில் பாரதியார் மக்களுக்கு விளக்கினார்.

2. இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார் பாரதியார்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றையும் (இந்தியா இதழ் – 08.09.1906). இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார் பாரதியார்.**

92) சென்னை தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை தொடங்கியவர் ஜி.கஸ்தூரி ஆவார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு எந்த ஆண்டு கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது?

A) 1971

B) 1968

C) 1970

**D) 1969**

**விளக்கம்: சென்னை தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை தொடங்கியவர் ஜி.கஸ்தூரி ஆவார். ஆசியாவிலேயே முதன்முற்றாயகச் செயல்படுத்தப்பட்ட இம்முறையினால் செய்தித்தாள் விநியோகத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தினார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு 1969ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது.**

93) தினமணி பத்திரிக்கையின் ஆசிரியரான ஏ.என்.சிவராமன் எத்தனை மொழிகளை அறிந்திருந்தார்?

A) 2

B) 9

C) 4

D) **17**

**விளக்கம்: பிரெஞ்சு, சமஸ்கிருதம், உருது உள்ளிட்ட 17 மொழிகளை அறிந்திருந்தார் என்பது வியப்பிற்குரிய செய்தியாகும்.**

94) தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் எது?

**A) மதராஸ் மெயில்**

B) சுதேசமித்திரன்

C) நவஇந்தியா

D) தி இந்து

**விளக்கம்: தமிழ்நாட்டின்வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868).**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882)**

95) சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த யார் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார் திரு.வி.க?

A) இராஜாஜி

B) மோகன் குமாரமங்கலம்

**C) பி.வி.நரசிம்மன்**

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி.நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார் திரு.வி.க.**

96) இந்தியாவில் தொடக்க கால கருத்துப்படங்களை வெளியிட்ட நாளிதழ்களுள் அமிர்த பஜார் பத்திரிக்கையும் ஒன்று. இது எங்கு இருந்து வெளியிடப்பட்டது?

A) டெல்லி

**B) வங்காளம்**

C) மும்பை

D) சென்னை

**விளக்கம்: 1850 ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும். வங்காளத்திலிருந்து வெளியான அமிர்த பஜார் பத்திரிக்கா, தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்', 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்களும் தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படுகின்றன.**

97) கடுமையான சட்டங்கள் என்ற கோழி, குப்பை மேட்டிலிருந்து கூவுகின்றது. இக்கோழியின் குரலைக் கேட்டவுடனே 'சுதந்திர சூரியன்' உதிப்பது போன்ற சித்திரம் எப்போது பத்திரிக்கையில் வெளிவந்தது?

A) 13.03.1909

B) 08.09.1906

**C) 19.12.1908**

D) 11.10.1913

**விளக்கம்: பாரதியார் வரைந்த, கடுமையான சட்டங்கள் என்ற கோழி, குப்பை மேட்டிலிருந்து கூவுகின்றது. இக்கோழியின் குரலைக் கேட்டவுடனே 'சுதந்திர சூரியன்' உதிப்பது போன்ற சித்திரம் 19.12.1908ல் பத்திரிக்கையில் வெளிவந்தது.**

98) யாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை' என்னும் இதழ் சிறிது காலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது?

A) நீதிக்கட்சி

**B) தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தார்**

C) சென்னை மகாஜன சபை

D) சென்னை சுதேசி சங்கம்

**விளக்கம்: 1935இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை' சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது.**

99) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) தமிழன், தமிழ்க்கொடி– சி.பா. ஆதித்தனார்.

B) தென்மொழி, தமிழ்ச்சிட்டு– பெருஞ்சித்தனார்

**C) வேலைகளைத் தாமதமின்றி உடனே முடிக்க வேண்டும். மக்களின் நலத்தை முன்னெடுப்பதைவிட முக்கியமான வேலை ஏதும் இல்லை என்று காந்தியடிகள் கூறினார்.**

D) மணிக்கொடி, கிராம ஊழியன். கலாமோகினி, எழுத்து போன்றவை புகழ்பெற்ற சிற்றிதழ்கள் ஆகும்.

**விளக்கம்: வேலைகளைத் தாமதமின்றி உடனே முடிக்க வேண்டும். மக்களின் நலத்தை முன்னெடுப்பதைவிட முக்கியமான வேலை ஏதும் இல்லை என்று அசோகர் தர்ம ஆணை பிறப்பித்துள்ளார்.**

100) தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' ஆகும். இதனைப் பற்றி பாரதியார் எந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்?

**A) புதிய அபிவிருத்தி**

B) விகடசித்திரம்

C) கேலிச்சித்திரம்

D) புதிய முயற்சி

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.03.1909) "தமிழ்நாட்டுப் வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார்.**

101) எந்த ஆண்டு, ஏ.என்.சிவராமன் தமது சிறந்த இதழியல் பணிகளுக்காகக் 'கோயங்கோ விருது' பெற்றார்?

A) 1976

B) 1978

**C) 1988**

D) 1974

**விளக்கம்: 1988ஆம் ஆண்டு, தமது சிறந்த இதழியல் பணிகளுக்காகக் 'கோயங்கோ விருது' பெற்றார் ஏ.என்.சிவராமன்.**

102) தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ் எது?

**A) மதராஸ் மெயில்**

B) சுதேசமித்திரன்

C) நவஇந்தியா

D) தி இந்து

**விளக்கம்: தமிழ்நாட்டில்வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868).**

**தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882)**

103) பாரதியார் பஞ்சம் எந்த தலைப்பில் சித்திரம் வரைந்து, பஞ்சத்திற்கு காரணமாக கீழ்க்காணும் எதைக் குறிப்பிடுகிறார்?

A) பருவநிலை மாற்றம்

B) இந்திய உற்பத்திப் பொருள்களுக்கு அதிக வரி

**C) இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்வது**

D) மேற்காணும்அனைத்தும்

**விளக்கம்: பாரதியார் ஒரு பன்முக ஆளுமைத் தன்மை கொண்டவர். அவருடைய பொருளாதார அறிவு வியக்கத்தக்கது. 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.**

104) சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி.நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் திரு.வி.க எந்த இதழில் வெளியிட்டார்?

A) நவசக்தி

**B) தேசபக்தன்**

C) சுதேச மித்திரன்

D) முல்லை

**விளக்கம்: சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி.நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார் திரு.வி.க.**

105) 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்ற தலைப்பில் பாரதியாரின் கருத்துப்படம் கீழ்க்காணும் எதனைக் குறிப்பிடுகிறது?

A) பஞ்சம்

B) சுரண்டல்

**C) வரிவிதிப்பு**

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: ஆங்கில அரசின் வரிவிதிப்புச் சார்ந்து 30.03.1907–இல் 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் வெளியான கருத்துப்படம் மக்களிடையே பெரிதும் பேசப்பட்டது.**

106) இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் எப்போது தொடங்கப்பட்டது?

**A) 1780**

B) 1791

C) 1882

D) 1799

**விளக்கம்: இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் பெங்கால் கெஜட் (1780).**

107) "அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று" என்ற வரியை கூறியவர் யார்?

A) பாரதிதாசன்

B) திரு.வி.க

C) தந்தை பெரியார்

**D) பாரதிதாசன்**

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களைப் பற்றிப் பாரதிதாசன் எழுதும்போது, "அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று" என்று பாரதியின் கருத்துப்படம் பற்றி பாரதிதாசன் எழுதியுள்ளார்.**

108) கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று நம்பியவர் யார்?

A) பாரதிதாசன்

**B) பாரதியார்**

C) திலகர்

D) ஜவஹர்லால் நேரு

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று பாரதியார் நம்பினார்.**

109) வெகுமக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் எங்குள்ளது?

A) பெங்களுரு

**B) புது தில்லி**

C) அகமதாபாத்

D) சென்னை

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி**

**இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களுரு.**

**முதுரா தகவல் தொடர்பு நிறுவனம்– அகமதாபாத்**

**ஆசிய இதழியல் கல்லூரி – சென்னை**

110) கீழ்க்காணும் பத்திரிக்கைகளில் ஒன்று மட்டும் அது வெளியாகும் இடத்திலிருந்து மாறுபட்டுள்ளது?

A) தில்லி ஸ்கெட்ச் புக்

**B) அமிர்த பஜார் பத்திரிக்கா**

C) இந்தியன் பஞ்ச்

D) அவத் பஞ்ச்

**விளக்கம்: 1850 ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும். வங்காளத்திலிருந்து வெளியான அமிர்த பஜார் பத்திரிக்கா, தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்', 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்களும் தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படுகின்றன.**

111) எப்போது 'குடி அரசு' என்னும் இதழைத் தொடங்க தந்தை பெரியார் முடிவு செய்தார்?

A) 1921

**B) 1922**

C) 1924

D) 1925

**விளக்கம்: 1922இல் கோயம்புத்தூர் சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும்போது, 'குடி அரசு' என்னும் பத்திரிக்கையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி 02.05.1925 முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.**

112) எப்போது 'விடுதலை' என்னும் இதழ் தொடங்கப்பட்டது?

A) 1932

**B) 1935**

C) 1934

D) 1925

**விளக்கம்: 1935இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை' சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது.**

113) தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) திரு.வி.க

D) வ.உ.சி

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனை பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.03.1909) "தமிழ்நாட்டுப் வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார்.**

114) காலைக்கதிர் என்ற இதழ் எதற்கு புகழ்பெற்றது?

**A) அறிவியல்**

B) தொழில்நுட்பம்

C) கல்வி

D) மருத்துவம்

**விளக்கம்: தமிழில் புகழ்பெற்ற இதழான 'காலைக்கதிர்' 1948 முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்து கட்டுரைகளை அவ்விதழ் வெளியிடுகிறது.**

115) இந்தியாவில் முதன்முதலில் தொடங்கப்பட்ட இதழ் எது?

A) மதராஸ் மெயில்

**B) பெங்கால் கெஜட்**

C) டெல்லி எக்ஸ்பிரஸ்

D) மும்பை இந்தியா

**விளக்கம்: இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் பெங்கால் கெஜட் (1780).**

**(கல்கத்தா ஜெனரல் அட்வைசர்).**

116) "தமிழ் பத்திரிக்கைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிக்கைகள் கடினமான இலக்கிய நடையில் எழுதப்படுவதால் குறைவாக விற்பனையாகின்றன" என்று குறிப்பிட்டவர் யார்?

A) சி.பா.ஆதித்தனார்

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

C) தந்தை பெரியார்

**D) ஜவஹர்லால் நேரு**

**விளக்கம்: "தமிழ் பத்திரிக்கைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிக்கைகள் கடினமான இலக்கிய நடையில் எழுதப்படுவதால் குறைவாக விற்பனையாகின்றன. அவர்கள்(இந்தியப் பத்திரிக்கைகள்) எழுவதை என்னால்கூடப் புரிந்துகொள்ள**

**முடிவதில்லை. அவர்கள் கடின நடையைக் கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுத வேண்டும்" என்றார் ஜவஹர்லால் நேரு. இதன்பிறகு, இந்திய நாளிதழ்கள் சி.பா.ஆதித்தனாரின் மொழிநடையைப் பின்பற்ற ஆரம்பித்தன.**

117) செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் எப்போது அறிமுகப்படுத்தினார்?

A) பொ.ஆ.60

**B) பொ.ஆ.மு.60**

C) பொ.ஆ.600

D) பொ.ஆ.மு.600

**விளக்கம்: செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார்.**

118) கூற்று: 1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது.

காரணம்: தினத்தந்தி அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சுத் தமிழில் நடத்தப்படுகின்றது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: 1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது. ஆதித்தனாரின் இதழ்கள் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சுத் தமிழில் நடத்தப்படுகின்றன, ஆகவே அவை அதிகமாக விற்பனை ஆகின்றன.**

119) மக்களாட்சி உரிமைகளைக் காக்கும் இதழியல் பணியில் வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் மகிழ்ச்சி கண்டவர் யார்?

A) தந்தை பெரியார்

B) சி.பா.ஆதித்தனார்

C) திரு.வி.க

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: மக்களாட்சி உரிமைகளைக் காக்கும் இதழியல் பணியில் வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் மகிழ்ச்சி கண்டவர் டி.எஸ்.சொக்கலிங்கம். இவர் காந்தி, தினமணி, தினசரி, ஜனயுகம், நவசக்தி போன்ற இதழ்களில் பணியாற்றினார்.**

120) கூற்றுகளை ஆராய்க.

1. சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது தேசபக்தன் இதழில் திரு.வி.க எழுதியுள்ளார்.

2. சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி.நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது நவசக்தி இதழில் வெளியிட்டார் திரு.வி.க.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் திரு.வி.க எழுதியுள்ளார்.**

**2. சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி.நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார் திரு.வி.க.**

121) இந்திய இதழியலின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் யார்?

**A) ஜேம்ஸ் அகஸ்ட்டஸ் ஹிக்கி**

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

C) சி.பா.ஆதித்தனார்

D) அரங்க.சீனிவாசன்

**விளக்கம்: இந்திய இதழியலின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் ஜேம்ஸ் அகஸ்ட்டஸ் ஹிக்கி ஆவார்.**

122) 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, எந்த தலைப்பில் தினமணி இதழில் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார்?

A) ஆங்கிலேயரின் அதிகாரம்

B) அரசின் இயலாமை

C) பீகார் துயரம்

**D) சர்க்கார் எங்கே?**

**விளக்கம்: 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தினமணி இதழில் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை (முன்ஜாமீன்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார்.**

123) ஹரிஜன் என்ற இதழை நடத்தியவர் யார்??

A) ஆச்சார்ய வினோபாவே

**B) காந்தியடிகள்**

C) அம்பேத்கர்

D) திலகர்

**விளக்கம்: அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல்நுழைவு, இதழ்களின் வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென்னாப்பிரிகாவில், 'இந்தியன் ஒபீனியன்' என்ற இதழையும், நம் நாட்டில் 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.**

124) இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் எங்குள்ளது?

**A) புனே**

B) புதுதில்லி

C) அடையாறு

D) திருநெல்வேலி

**விளக்கம்: இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – புனே.**

**டைம்ஸ் இதழியல் பள்ளி – புதுதில்லி.**

**திரைப்படக் கல்லூரி – அடையாறு, சென்னை.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி.**

125) தந்தை பெரியார் தமிழகத்தில் எதன் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்தார்?

A) மேடைப்பேச்சு

**B) இதழ்கள்**

C) கருத்துப்படம்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் தந்தை பெரியாரின் இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு, எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.**

126) எப்போது முதல் தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட 'குடி அரசு' வார இதழ் வெளிவந்தது?

A) 02.04.1925

B) 04.02.1925

**C) 02.05.1925**

D) 05.02.1925

**விளக்கம்: 1922இல் கோயம்புத்தூர் சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும்போது, 'குடி அரசு' என்னும் பத்திரிக்கையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி 02.05.1925 முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.**

127) மக்கள் செய்ய வேண்டியதைத் தலையங்கம் மூலம் உணர்த்தும் ஆற்றல் பெற்றவர் யார்?

A) தந்தை பெரியார்

B) சி.பா.ஆதித்தனார்

C) திரு.வி.க

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: இதழாளராகவும் எழுத்தாளராகவும் விளங்க ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தாக்கத்தை உடைத்தார். மக்கள் செய்ய வேண்டியதைத் தலையங்கம் மூலம் உணர்த்தும் ஆற்றல் டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்களின் எழுத்துக்களில் இருந்தது.**

128) ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காக முதியோர் கல்வி என்ற இதழ் எப்போது தொடங்கப்பட்டது.

A) 1897

**B) 1951**

C) 1969

D) 1856

**விளக்கம்: ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர் கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டு வந்தன.**

129) டி.எஸ்.சொக்கலிங்கம் என்பவர் 'ராஜபாட்டை'என்ற தலைப்பில் எந்த இதழில் கட்டுரை எழுதினார்?

A) தினமணி

**B) தினசரி**

C) ஜனயுகம்

D) நவசக்தி

**விளக்கம்: டி.எஸ்.சொக்கலிங்கம் தினசரி என்ற நாளிதழில் 'ராஜபாட்டை' என்ற தலைப்பில் சிந்தனைக் கட்டுரைகளும், 'ஊதல், உண்ணல், உறிஞ்சல்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிய வந்த எழுத்தோவியங்களும் பரவலான வரவேற்பைப் பெற்றன.**

130) எதனையும் ஏன்? எதற்கு, எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, யார் தமது நோக்கமாகக் கொணடிருந்தார்?

A) அம்பேத்கர்

B) திரு.வி.க

**C) தந்தை பெரியார்**

D) பேரறிஞர் அண்ணா

**விளக்கம்: தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் தந்தை பெரியாரின் இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு, எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.**

131) டி.எஸ்.சொக்கலிங்கம் கீழ்க்காணும் எந்த இதழில் பணியாற்றவில்லை?

A) காந்தி

B) தினசரி

C) ஜனயுகம்

**D) தேசபக்தன்**

**விளக்கம்: டி.எஸ்.சொக்கலிங்கம் காந்தி, தினமணி, தினசரி, ஜனயுகம், நவசக்தி போன்ற இதழ்களில் பணியாற்றினார்.**

132) சென்னைத் தலைமை அலுவலத்தில் வடிவமைக்கப்பட்ட பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி ஜி.கஸ்தூரி ஆவார். சென்னைத் தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் இவரே.**

133) முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" எந்த ஆண்டு முதல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது?

A) 1925

B) 1927

C) 1932

**D) 1937**

**விளக்கம்: வை.மு.கோதைநாயகி 1925இல் "ஜகன்மோகினி" என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தினார். முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" 1937இல் மகளிருக்கான இதழாகத் தன்மை மாற்றிக்கொண்டது.**

134) குயில் என்ற இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) மறைமலை அடிகள்

B) சி.பா.ஆதித்தனார்

**C) பாரதிதாசன்**

D) பெருஞ்சித்தனார்

**விளக்கம்: தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவை,**

**1. மறைமலை அடிகள்– அறிவுக்கடல்**

**2. சி.பா.ஆதித்தனார்– தமிழன், தமிழ்க்கொடி**

**3. பாரதிதாசன்– குயில்**

**4. பெருஞ்சித்தனார்– தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

135) "இந்திய பத்திரிக்கைகள் கடின நடையைக் கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுத வேண்டும்" என்று கூறியவர் யார்?

A) சி.பா.ஆதித்தனார்

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

C) தந்தை பெரியார்

**D) ஜவஹர்லால் நேரு**

**விளக்கம்: "தமிழ் பத்திரிக்கைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிக்கைகள் கடினமான இலக்கிய நடையில் எழுதப்படுவதால் குறைவாக விற்பனையாகின்றன. அவர்கள்(இந்தியப் பத்திரிக்கைகள்) எழுவதை என்னால்கூடப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் கடின நடையைக் கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுத வேண்டும்" என்று ஜவஹர்லால் நேரு கூறினார். இதன்பிறகு, இந்திய நாளிதழ்கள் சி.பா.ஆதித்தனாரின் மொழிநடையைப் பின்பற்ற ஆரம்பித்தன.**

136) இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் எப்போது நடைபெற்றது?

A) 1950–51

**B) 1951–52**

C) 1949–50

D) 1952–53

**விளக்கம்: 1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது.**

137) தம் நாளிதழ் வளர வேண்டும் என்பதைவிட மக்களைப் பாதிக்கும் சிக்கல்கள் தீரவேண்டும் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டவர் யார்?

**A) டி.எஸ்.சொக்கலிங்கம்**

B) தந்தை பெரியார்

C) திரு.வி.க

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: மக்களாட்சி உரிமைகளைக் காக்கும் இதழியல் பணியில் வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் மகிழ்ச்சி கண்டவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார். இவர் தம் நாளிதழ் வளர வேண்டும் என்பதைவிட மக்களைப் பாதிக்கும் சிக்கல்கள் தீரவேண்டும் என்பதை முதன்மை நோக்கமாக கொண்டிருந்தார்.**

138) கீழ்க்காணும் எந்த மாவட்டச் சிறையில் இருக்கும்போது தந்தை பெரியார் இதழை தொடங்க முடிவெடுத்தார்?

A) சென்னை

B) வேலூர்

C) ஈரோடு

**D) கோயம்புத்தூர்**

**விளக்கம்: 1922இல் கோயம்புத்தூர் சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும்போது, 'குடி அரசு' என்னும் பத்திரிக்கையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி 02.05.1925 முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.**

139) கூற்று: பெரியார் நாளிதழ் ஒன்றை தொடங்க விரும்பினார்.

காரணம்: பெரியாரின் கொள்கையை எந்த நாளிதழும் வெளியிட முன்வரவில்லை

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) **கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: பெரியாரின் சுயமரியாதை. சமதருமம், பெண்ணுரிமை, வகுப்புரிமை போன்ற பரப்புரைகளை வெளியிட எந்த இதழும் முன்வரவில்லை. எனவே, தெளிவு உடைய நோக்கத்தினை மக்களிடையே கொண்டுசெல்லவேண்டும் என்று விரும்பிய பெரியார் நாளிதழ் ஒன்றைத் தொடங்க எண்ணினார்.**

140) ஆங்கிலத்தில் காரட்டூன் என்பதனை பாரதியார் தமிழில் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

A) கேலிச்சித்திரம்

**B) விகட சித்திரம்**

C) விளக்கப்படம்

D) வேடிக்கைச் சித்திரம்

**விளக்கம்: ஆங்கிலத்தில் 'கார்ட்டூன்' என்று அழைக்கப்படும் கருத்துப்படம், தமிழில் விகட சித்திரம், வேடிக்கைப்படம், கேலிச்சித்திரம், விளக்கப்படம், கூடார்த்த படம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இதனைப் பாரதியார் 'விகட சித்திரம்' என்று குறிப்பிடுகிறார்.**

141) 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியவர் யார்?

A) சி.பா.ஆதித்தனார்

B) ஏ.என்.சிவராமன்

**C) டி.எஸ்.சொக்கலிங்கம்**

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தினமணி இதழில் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை (முன்ஜாமீன்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார்.**

142) டி.எஸ்.சொக்கலிங்கம் என்பவர் எந்த இதழில் 'ஊதல், உண்ணல், உறிஞ்சல்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுத்தோவியங்களை எழுதினார்?

A) ஜனயுகம்

**B) தினசரி**

C) தினமணி

D) காந்தி

**விளக்கம்: டி.எஸ்.சொக்கலிங்கம் என்பவர் தினசரி என்ற நாளிதழில் 'ராஜபாட்டை' என்ற தலைப்பில் சிந்தனைக் கட்டுரைகளும், 'ஊதல், உண்ணல், உறிஞ்சல்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிய வந்த எழுத்தோவியங்களும் பரவலான வரவேற்பைப் பெற்றன.**

143) பயிற்சியற்ற வாசகர்களின் படிப்பறிவை வளர்ப்பதைத் தம் நோக்கமாகக் கொண்டு, தமது நாளிதழின் மொழிநடையை அவர்களுக்கு ஏற்றாற்போல் எளிமையாக அமைத்துக்கொண்டவர் யார்?

A) டி.எஸ்.சொக்கலிங்கம்

B) தந்தை பெரியார்

C) திரு.வி.க

**D) சி.பா.ஆதித்தனார்**

**விளக்கம்: பயிற்சியற்ற வாசகர்களின் படிப்பறிவை வளர்ப்பதைத் தம் நோக்கமாகக் கொண்டு, தமது தினத்தந்தி நாளிதழின் மொழிநடையை அவர்களுக்கு ஏற்றாற்போல் எளிமையாக அமைத்துக்கொண்டவர் சி.பா.ஆதித்தனார் ஆவார்.**

144) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) 1942இல் 'வெள்ளையனே வெளியேறு' இயகத்திற்குப் பின்னர், பெரும்பாலான இதழ்கள் தேசிய இயக்கத்தோடு ஒன்றிணைந்தன.

B) சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் இதழ்கள் விளங்குகின்றன.

**C) தமிழில் புகழ்பெற்ற அறிவியல் இதழான 'காலைக்கதிர்' 1951 முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.**

D) தமிழ்க்கல்வி – 1897

**விளக்கம்: தமிழில் புகழ்பெற்ற அறிவியல் இதழான 'காலைக்கதிர்' 1948 முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.**

145) எழுத்துக்கூட்டிப் படிப்பவர்களையும் மனத்தில் வைத்து இதழ் நடத்தியவர் யார்?

A) தந்தை பெரியார்

**B) சி.பா.ஆதித்தனார்**

C) ஜ.கஸ்தூரி

D) டி.எஸ்.சொக்கலிங்கம்

**விளக்கம்: சி.பா.ஆதித்தனார் எழுத்துக்கூட்டிப் படிப்பவர்களையும் மனத்தில் வைத்துத்தான் இதழ் நடத்தினார். ஆகவேதான். கலைச்சொற்களைத் தவிர்த்துப் பேச்சுமொழிச் சொற்களைப் பயன்படுத்தினார்.**

146) 'போரும் அமைதியும்' என்ற நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

A) பாரதிதாசன்

B) சி.பா.ஆதித்தனார்

**C) டி.எஸ்.சொக்கலிங்கம்**

D) பாரதியார்

**விளக்கம்: லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார்.**

147) "செந்தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால் அது பலருக்குப் புரியாது." என்று கூறியவர் யார்?

A) ஜவஹர்லால் நேரு

**B) சி.பா.ஆதித்தனார்**

C) ஜ.கஸ்தூரி

D) டி.எஸ்.சொக்கலிங்கம்

**விளக்கம்: "செந்தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால் அது பலருக்குப் புரியாது. பேச்சுதமிழையே எழுதவேண்டும். இதுவே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்யவேண்டிய தொண்டு" என்று ஆதித்தனார் குறிப்பிட்டுள்ளார்.**

148) இதழாளராகவும் எழுத்தாளராகவும் விளங்க ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தாக்கத்தை உடைத்தவர் யார்?

A) தந்தை பெரியார்

B) சி.பா.ஆதித்தனார்

C) திரு.வி.க

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: இதழாளராகவும் எழுத்தாளராகவும் விளங்க ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தாக்கத்தை உடைத்தார் டி.எஸ்.சொக்கலிங்கம். மக்கள் செய்ய வேண்டியதைத் தலையங்கம் மூலம் உணர்த்தும் ஆற்றல்இவரின் எழுத்துக்களில் இருந்தது.**

149) தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் யாருடைய இதழ்ப்பணி முதன்மையானது?

A) அறிஞர் அண்ணா

**B) தந்தை பெரியார்**

C) பாரதியார்

D) மு.வ

**விளக்கம்: தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் தந்தை பெரியாரின் இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு, எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொணடிருந்தார்.**

150) 1951–1952இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது எந்த நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது?

A) பெங்கால் கெஜட்

B) மெட்ராஸ் மெயில்

**C) தினத்தந்தி**

D) தி இந்து

**விளக்கம்: 1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது.**

151) செய்தித்தாள் வாசித்தல் என்பது, நன்கு படித்தவர்களுக்கான செயல் என்கிற காலம்மாறிச் சற்றே தமிழ் தெரிந்தவர்களும் படிக்குமாறு தமிழை எளிமைப்படுத்தி, கொஞ்சம் பரபரப்புச் சேர்த்து, குழப்பம் இல்லாத வகையில் செய்தியைத் தரும் உத்தியைத் தமிழ்நாட்டில் முதலில் கொண்டுவந்தவர் யார்?

A) டி.எஸ்.சொக்கலிங்கம்

B) ஏ.என்.சிவராமன்

C) ஜி.கஸ்தூரி

**D) சி.பா.ஆதித்தனார்**

**விளக்கம்: "செய்தித்தாள் வாசித்தல் என்பது, நன்கு படித்தவர்களுக்கான செயல் என்கிற காலம்மாறிச் சற்றே தமிழ் தெரிந்தவர்களும் படிக்குமாறு தமிழை எளிமைப்படுத்தி, கொஞ்சம் பரபரப்புச் சேர்த்து, குழப்பம் இல்லாத வகையில் செய்தியைத் தரும் உத்தியைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்தவர் சி.பா.ஆதித்தனார்"**

152) குற்றாலம் அறிவியில் வெள்ளையரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்பு பலகையை அகற்ற போராட்டம் நடத்தியவர் யார்?

**A) டி.எஸ்.சொக்கலிங்கம்**

B) தந்தை பெரியார்

C) சி.பா.ஆதித்தனார்

D) ஏ.என்.சிவராமன்

**விளக்கம்: குற்றாலம் அருவியில் வெள்யைரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டிருந்தார்கள். அந்தப் பலகையை எடுக்க அறப்போர் நடத்தினார் டி.எஸ்.சொக்கலிங்கம். இருபதே வயது நிறைந்திருந்த டி.எஸ்.சொக்கலிங்கத்தின் அறப்போராட்டத்திற்கு**

**மக்கள் ஆதரவு வலுத்தது. நாடெங்கும் இந்த அறப்போராட்டச் செய்தி பரவியது. 'தேசபக்தன்' நாளிதழ், இளைஞர் சொக்கலிங்கத்தின் போராட்டத்தை ஆதரித்து எழுதியது. இக்கிளர்ச்சிக்கு ஆங்கிலேய அரசு பணிந்தது. உடனே அந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டது.**

153) எந்த ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தினமணி இதழில் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார்?

A) 1938

**B) 1934**

C) 1937

D) 1935

**விளக்கம்: 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தினமணி இதழில் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை(முன்ஜாமீன்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார்.**

154) பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. இதில் ஒன்று கீழ்க்காண்பனவற்றில் கொடுக்கப்பட்டுள்ளது. அதை தேர்வு செய்க

A) பத்திரிக்கை

B) துண்டுபிரசுரம்

C) புத்தகம்

**D) மேடைப்பேச்சு**

**விளக்கம்: பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. அவை,**

**1. மேடைப்பேச்சு**

**2. எழுத்து**

155) நாளிதழ் என்பவை வீடு வீடாக சென்று விற்கும் பொருளாக இல்லாமல் மக்கள் முந்திச் சென்று வாங்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கருதியவர் யார்?

A) தந்தை பெரியார்

B) சி.பா.ஆதித்தனார்

C) திரு.வி.க

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: டி.எஸ்.சொக்கலிங்கம் நாளிதழ் என்பவை வீடு வீடாக் சென்று விற்கும் பொருளாக இல்லாமல் மக்கள் முந்திச் சென்று வாங்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கருதினார்.**

156) கூற்று: தந்தை பெரியார் ஒரு புரட்சிகரமான இதழாளர் ஆவார்.

காரணம்: தமது எழுத்துக்களை வெளியிடத் தாமே இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தினார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: பெரியார் தமது எழுத்துக்களை வெளியிடத் தாமே இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தியதன்மூலம், அவர் ஒரு புரட்சிகரமான இதழாளராக அறியப்படுகிறார்.**

157) 'போரும் அமைதியும்' என்ற நாவலின் ஆசிரியர் யார்?

A) காளிதாசர்

**B) லியோ டால்ஸ்டாய்**

C) எர்னஸ்ட் ஹெமிங்வே

D) நா.காமராசன்

**விளக்கம்: லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார்.**

158) "இதழ்களில் பேச்சுதமிழையே எழுதவேண்டும். இதுவே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்யவேண்டிய தொண்டு" என்று கூறியவர் யார்?

A) ஜவஹர்லால் நேரு

**B) சி.பா.ஆதித்தனார்**

C) ஜ.கஸ்தூரி

D) டி.எஸ்.சொக்கலிங்கம்

**விளக்கம்: "செந்தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால் அது பலருக்குப் புரியாது. பேச்சுதமிழையே எழுதவேண்டும். இதுவே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்யவேண்டிய தொண்டு" என்று ஆதித்தனார் குறிப்பிட்டுள்ளார்.**

159) தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் எப்போது குறிப்பிட்டார்?

A) 13.04.1909

B) 13.02.1909

C) **13.03.1909**

D) 13.05.1909

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.03.1909) "தமிழ்நாட்டுப் வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார். "அடுத்த வாரம் முதல் தலைப்பக்கத்தில் உள்ள ஒரு சித்திரம் மட்டுமே அன்றி, பக்கத்துக்குப் பக்கம் உள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு ஆங்காங்குச் சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்" என்றும் குறிப்பிடுகிறார்.**

160) கூற்று: சி.பா.ஆதித்தனார் இந்தியப் பத்திரிக்கை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

காரணம்: தமது மொழிநடையால் பாமரரையும் நாளிதழ் படிக்கவைத்தார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: தமது மொழிநடையால் பாமரரையும் நாளிதழ் படிக்கவைத்ததன் மூலம் ஆதித்தனார் இந்தியப் பத்திரிக்கை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.**

161) கூற்று: தினமணி நாளிதழ் 1934இல் தொடங்கப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார்.

காரணம்: இவர், தமது தலையங்களுக்காகவும், கட்டுரைகள் மற்றும் கருத்துப்படங்களுக்காகவும் அறியப்படுகிறார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: தினமணி நாளிதழ் 1934இல் தொடங்கப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார். இவர், தமது தலையங்களுக்காகவும், கட்டுரைகள் மற்றும் கருத்துப்படங்களுக்காகவும் அறியப்படுகிறார்.**

162) பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. இதில் அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது எது?

**A) மேடைப்பேச்சு**

B) எழுத்து

C) புத்தகம்

D) துண்டுப்பிரசுரம்

**விளக்கம்: பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. அவை,**

**1. மேடைப்பேச்சு**

**2. எழுத்து**

**அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது மேடைப்பேச்சு.**

**அவரது கொள்கைகளை மிகப்பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது – எழுத்து.**

163) சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதை நிறைவேற்ற, ஆட்சியில் பங்கேற்காமல் ஆட்சியாளர்களை இயக்கிய ஆளுமை யார்?

A) அறிஞர் அண்ணா

B) காமராசர்

C) பக்தவத்சலம்

**D) தந்தை பெரியார்**

**விளக்கம்: சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது. அவரது குறிக்கோள்களை நிறைவேற்ற, ஆட்சியில் பங்கேற்காமல் ஆட்சியளர்களை இயக்கிய ஆளுமை தந்தை பெரியார்.**

164) இதழாளர்களுக்குப் பயன்படும் வகையில் அங்கில–தமிழ் அகராதியை உருவாக்கியவர் யார்?

A) திரு.வி.க

B) தந்தை பெரியார்

C) சி.பா.ஆதித்தனார்

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: டி.எஸ்.சொக்கலிங்கம் இதழாளர்களுக்குப் பயன்படும் வகையில் ஆங்கில–தமிழ் அகராதியை உருவாக்கினார். லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.**

165) செய்தியின் பகுதிகள் எத்தனை?

A) 2

**B) 3**

C) 5

D) 6

**விளக்கம்: செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது.**

166) ஜகன்மோகினி இதழின் வெற்றிக்கு காரணமான ஒன்றை தெரிவு செய்க?

A) கருத்துப்படங்களுடன் கூடிய செய்தி

B) வண்ண இதழாக வெளிவந்தது

**C) எளிய நடையில் செய்திகளை வெளியிட்டது**

D) மகளிருக்கான சிறப்பு இதழ்

**விளக்கம்: முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" 1937இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது. பண்டிதத் தமிழில் ஏனைய பத்திரிக்கைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் எளிய நடையில் பாமரரும் படித்தறியும் வகையில் வை.மு.கோதைநாயகி எழுதியதும் ஜகன்மோகினியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் எனலாம்.**

167) எத்தனை ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றினார் வை.மு.கோதைநாயகி?

**A) 35**

B) 29

C) 33

D) 37

**விளக்கம்: 35 ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர். இவர் எழுதியுள்ள 115 நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.**

168) எழுத்துநடை குறித்துப் பத்திரிக்கை எழுத்தளார் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டவர். சி.பா.ஆதித்தனார் ஆவார். இதன் நோக்கம் என்ன?

A) இதழ்களில் கொச்சை நீக்க வேண்டும்

B) எழுத்துத் தமிழில் கொச்சை நீக்க வேண்டும்

**C) பேச்சுத் தமிழில் கொச்சை நீக்க வேண்டும்**

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: எழுத்துநடை குறித்துப் பத்திரிகை எழுத்தாளர் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டிருக்கிறார் சி.பா.ஆதித்தனார். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி எழுது என்பதே இக்கையேட்டின் பொன்விதி.**

169) ஒரு செய்தித்தாள் என்பது, மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண வாசகனுக்கும் சென்று சேர வேண்டுமென்றால், அது எளிய மொழிநடையில் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும் என்ற கொள்கை கொண்டவர் யார்?

A) தந்தை பெரியார்

B) டி.எஸ்.சொக்கலிங்கம்

C) திரு.வி.க

**D) சி.பா.ஆதித்தனார்**

**விளக்கம்: ஒரு செய்தித்தாள் என்பது, மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண வாசகனுக்கும் சென்று சேர வேண்டுமென்றால், அது எளிய மொழிநடையில் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். பேச்சுத்தமிழைக் கொச்சைநீக்கி, மக்களின் மொழியில் எழுதவேண்டும் என்பது, ஆதித்தனார் தமது நாளிதழ்களுக்காக ஏற்படுத்திய பொன்விதி.**

170) குற்றாலம் அருவியில் வெள்ளையரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்புப் பலகையை அகற்றுவதற்காக போராடிய டி.எஸ்.சொக்கலிங்கத்தின் போராட்டத்தை ஆதரித்து செய்தி வெளியிட்ட நாளிதழ் எது?

A) தினமணி

B) சுதேசமித்திரன்

C) தி ஹிந்து

**D) தேசபக்தன்**

**விளக்கம்: குற்றாலம் அருவியில் வெள்ளையரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டிருந்தார்கள். அந்தப் பலகையை எடுக்க அறப்போர் நடத்தினார் டி.எஸ்.சொக்கலிங்கம். இருபதே வயது நிறைந்திருந்த டி.எஸ்.சொக்கலிங்கத்தின் அறப்போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு வலுத்தது. நாடெங்கும் இந்த அறப்போராட்டச் செய்தி பரவியது. 'தேசபக்தன்' நாளிதழ், இளைஞர் சொக்கலிங்கத்தின் போராட்டத்தை ஆதரித்து எழுதியது. இக்கிளர்ச்சிக்கு ஆங்கிலேய அரசு பணிந்தது. உடனே அந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டது.**

171) தனது தலையங்களுக்காகத் தினமணி புகழ்பெற்றிருப்பதற்கு மூலகாரணமாக அமைந்தவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

B) ஜி.கஸ்தூரி

C) சி.பா.ஆதித்தனார்

**D) டி.எஸ்.சொக்கலிங்கம்**

**விளக்கம்: தினமணி நாளிதழின் முதல் ஆசிரியர் திரு.டி.எஸ்.சொக்கலிங்கம், தினமணி தலையங்களுக்காகப் புகழ்பெற்றிருப்பதற்கு இவரே காரணமாவார்.**

172) எப்போது தினமணி நாளிதழ் தொடங்கப்பட்டது?

A) 1938

B) 1925

C) 1937

**D) 1934**

**விளக்கம்: தினமணி நாளிதழ் 1934இல் தொடங்கப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார்.**

173) ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காக கல்விக்கதிர் இதழ் எப்போது தொடங்கப்பட்டது?

A) 1897

B) 1951

**C) 1969**

D) 1978

**விளக்கம்: ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர் கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டு வந்தன.**

174) தந்தை பெரியாரின் காலம் என்ன?

A) 1869–1972

B) 1879–1963

**C) 1879–1973**

D) 1889–1979

**விளக்கம்: பகுத்தறிவு சிந்தனை கொண்ட தந்தை பெரியாரின் காலம் 1879 முதல் 1973 வரையாகும். பெரியாரின் வாழ்க்கை, சமுதாயச் சீர்திருத்ததிற்கான வரலாறாகும். சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது.**

175) பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. இதில் கொள்கைகளை மிகப்பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது எது?

A) மேடைப்பேச்சு

**B) எழுத்து**

C) புத்தகம்

D) துண்டுப்பிரசுரம்

**விளக்கம்: பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு. அவை,**

**1. மேடைப்பேச்சு**

**2. எழுத்து**

**அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது மேடைப்பேச்சு.**

**அவரது கொள்கைகளை மிகப்பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது – எழுத்து.**

176) அனாதைப்பெண் என்ற நாவல் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இதனை எழுதியவர் யார்?

A) பம்மல் சம்பந்தனார்

B) சங்கரதாச சுவாமிகள்

**C) வை.மு.கோதைநாயகி அம்மாள்**

winmeen.com

D) அம்புஜதம்மாள்

**விளக்கம்: 35 ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர். இவர் எழுதியுள்ள 115 நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.**

177) செய்தி பரிமாற்றத்தின் வளர்ச்சி நிலைகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

**A)புகைமூட்டிச் செய்தி அறிவித்தல் →குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல்→ முரசறைந்து செய்தி அறிவித்தல் →பொதுஇடங்களில் செய்தியை எழுதிவைத்தல்.**

B) புகைமூட்டிச் செய்தி அறிவித்தல்→ குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல் →பொதுஇடங்களில் செய்தியை எழுதிவைத்தல் →முரசறைந்து செய்தி அறிவித்தல்

C) குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல் →புகைமூட்டிச் செய்தி அறிவித்தல்→ பொதுஇடங்களில் செய்தியை எழுதிவைத்தல் →முரசறைந்து செய்தி அறிவித்தல்

D) புகைமூட்டிச் செய்தி அறிவித்தல் →பொதுஇடங்களில் செய்தியை எழுதிவைத்தல் →குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல் →முரசறைந்து செய்தி அறிவித்தல்

**விளக்கம்: செய்தி பரிமாற்றத்தின் வளர்ச்சி நிலைகள்:**

**1. புகைமூட்டிச் செய்தி அறிவித்தல்**

**2. குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல்**

**3. முரசறைந்து செய்தி அறிவித்தல்**

**4. பொதுஇடங்களில் செய்தியை எழுதிவைத்தல்**

178) 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' எப்போது நாளிதழாக மாறியது?

A) 1856

B) 1882

**C) 1889**

D) 1904

**விளக்கம்: 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' 1889இல் நாளிதழாக மாறியது. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.**

179) எந்த ஆண்டு பெங்கால் கெஜட் என்ற முதல் இந்தியச் செய்தித்தாள் வெளியிடப்பட்டது?

A) 1788

B) 1785

C) 1782

**D) 1780**

**விளக்கம்: 1780ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் என்ற முதல் இந்திய செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.**

180) 'இந்தியா' என்ற தமிழ் மாத இதழைத் தொடங்கியவர் யார்?

A) அறிஞர் அண்ணா

**B) பாரதியார்**

C) திரு.வி.க

D) ஜி.சுப்பிரமணிய ஐயர்

**விளக்கம்: மகாகவி பாரதியார், 1907இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.**

181) எந்த இதழுக்குப் பிறகு 'தேசபக்தன்' இதழ் தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கியது?

A) நவ இந்தியா

**B) சுதேசமித்திரன்**

C) திராவிடன்

D) பாலபாரதம்

**விளக்கம்: 1917இல் திரு.வி.க. அவர்கள் "தேசபக்தன்" என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே.**

182) கேசரி என்ற இதழைத் தொடங்கியவர் யார்?

**A) திலகர்**

B) அரவிந்தர்

C) சுவாமி விவேகானந்தர்

D) காந்தியடிகள்

**விளக்கம்: இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் 'கேசரி' அரவிந்தரின் 'வந்தே மாதரம்' சுவாமி விவேகானந்தரின் 'சகோதரர்' போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.**

183) கூற்று: பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு.

காரணம்: பாரதியின் கனவு தேசியமே.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே.**

184) காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாக எந்த இதழில் திரு.வி.க. எழுதியுள்ளார்?

**A) நவசக்தி**

B) சுதேசமித்திரன்

C) தேசபக்தன்

D) காந்திஜி

**விளக்கம்: 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.**

185) கூற்றுகளை ஆராய்க.

1. 1917இல் திரு.வி.க. 'தேசபக்தன்' என்னும் நாளிதழைத் தொடங்கினார்.

2. சுதேமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1917இல் திரு.வி.க. 'தேசபக்தன்' என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே. இதனைத் தொடர்ந்து நவசக்தி, திராவிடன், தமிழ்நாடு, ஜெயபாரதி, சுதந்திர சங்கு, ஜனசக்தி போன்ற இதழ்களும் தோன்றி மக்களிடையே விடுதலை வேட்கையை ஏற்படுத்தின.**

186) மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி எங்குள்ளது?

A) புனே

B) மும்பை

C) ஜாமியா

**D) கோட்டயம்**

**விளக்கம்: சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

**சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம்– மும்பை.**

**எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி– ஜமியா, புதுதில்லி**

**மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி– கோட்டயம், கேரளா.**

187) பொ.ஆ.1450 இல் ஆண்டு ஜோகன்ஸ் கூடன்பர்க்(1398–1468) என்பவர் முதன்முதலில் அச்சுப்பொறியினை கண்டுபிடித்தார். இவர் எந்த நாட்டைச் சார்ந்தவர்?

A) ரோம்

**B) ஜெர்மனி**

C) பிரேசில்

D) இங்கிலாந்து

**விளக்கம்: பொ.ஆ.1450 இல் ஆண்டு ஜோகன்ஸ் கூடன்பர்க்(1398–1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினை கண்டுபிடித்தார். இதனால், அச்சிட்ட இதழ்கள் நம் நகரங்களில் தவழ்ந்து, சமுதாயம் பல மாற்றங்களைப் பெறக் காரணமாக அமைந்தது.**

188) முதுரா தகவல் தொடர்பு நிறுவனம்எங்குள்ளது?

A) பெங்களூரு

B) புது தில்லி

**C) அகமதாபாத்**

D) சென்னை

**விளக்கம்: வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம் – புது தில்லி**

**இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம் – பெங்களுரு.**

**முதுரா தகவல் தொடர்பு நிறுவனம்– அகமதாபாத்**

**ஆசிய இதழியல் கல்லூரி– சென்னை**

189) இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும், வெள்ளையார்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியவர் யார்?

A) வ.உ.சி

B) பாரதிதாசன்

C) திரு.வி.க

**D) பாரதியார்**

**விளக்கம்: ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றையும் (இந்தியா இதழ் – 08.09.1906). இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார் பாரதியார்.**

190) பெங்கால் கெஜட் என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை வெளியிட்டவர் யார்?

A) ரிச்சர்டு ஜான்சன்

B) பெர்சிவல் பாதிரியார்

C) ஜோஹன்னஸ் கூடன்பர்க்

**D) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி**

**விளக்கம்: 1780ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.**

191) நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி ஜி.கஸ்தூரி ஆவார். சென்னைத் தலைமை அலுவலத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் இவரே.**

192) தயாநிதி என்ற நாவல் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இதனை எழுதியவர் யார்?

A) பம்மல் சம்பந்தனார்

B) சங்கரதாச சுவாமிகள்

**C) வை.மு.கோதைநாயகி அம்மாள்**

D) அம்புஜதம்மாள்

**விளக்கம்: 35 ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர். இவர் எழுதியுள்ள 115 நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.**

193) மகாகவி பாரதியார் எப்போது இந்தியா என்ற தமிழ் மாத இதழைத் தொடங்கினார்?

**A) 1907**

B) 1917

C) 1905

D) 1908

**விளக்கம்: மகாகவி பாரதியார், 1907இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.**

194) 1977இல் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய "OUTLOOK, SPECIAL REPORT OPEN PAGE" ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இதனை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட, மாநில தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை நியமித்தது ஜி.கஸ்தூரியின் புதுமையான முயற்சியாகும். 1977இல் அவர் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய "OUTLOOK, SPECIAL REPORT OPEN PAGE" ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.**

195) "ஜகன்மோகினி" யின் துணைவெளியீடாக எந்த இதழ் வெளியிடப்பட்டது?

A) தினசரி

B) தினயுகம்

C) பூமி

**D) நந்தவனம்**

**விளக்கம்: "ஜகன்மோகினி"யின் துணைவெளியீடாக நந்தவனம் என்ற இதழையும் வெளியிட்டு, அதன்மூலம் 150க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை வை.மு.கோதைநாயகி அறிமுகப்படுத்தினார்.**

196) 'தேசபக்தன்' என்ற இதழை திரு.வி.க எப்போது தொடங்கினார்?

A) 1907

**B) 1917**

C) 1909

D) 1908

**விளக்கம்: 1917–இல் திரு.வி.க அவர்கள் 'தேசபக்தன்' என்ற நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே.**

197) 'பாலபாரதம்' என்பது ஒரு ஆங்கில வார இதழ் ஆகும். இந்த இதழ் யாரால் தொடங்கப்பட்டது?

A) திரு.வி.க

**B) பாரதியார்**

C) அறிஞர் அண்ணா

D) ஜி.சுப்பிரமணிய ஐயர்

**விளக்கம்: மகாகவி பாரதியார், 1907–இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.**

198) எந்த ஆண்டு ஜோகன்ஸ் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினை கண்டுபிடித்தார்?

A) 1780

**B) 1450**

C) 1665

D) 1545

**விளக்கம்: பொ.ஆ.1450–ஆம் ஆண்டு ஜோகன்ஸ் கூடன்பர்க்(1398–1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினை கண்டுபிடித்தார். இதனால், அச்சிட்ட இதழ்கள் நம் நகரங்களில் தவழ்ந்து, சமுதாயம் பல மாற்றங்களைப் பெறக் காரணமாக அமைந்தது.**

199) கூற்றுகளை ஆராய்க.

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் 'இந்தியன் ஒப்பினியன்' என்ற இதழை நடத்தி வந்தார்.

2. துளிர் என்னும் அறிவியல் இதழ் சிறுவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் 'இந்தியன் ஒப்பினியன்' என்ற இதழை நடத்தி வந்தார்.**

**2. துளிர் என்னும் அறிவியல் இதழ் சிறுவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது.**

200) கூற்று: பாரதியார் தமிழில் முதன் முதலில் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தினார்.

காரணம்: அன்றைய அரசியல், சமூகச் சூழல்களையும் சுட்டிக்காட்டி விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பங்குபெற வேண்டும் என்கிற உணர்வினை ஏற்டுத்த.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: பாரதி தமது கருத்துப்படங்கள் வழி அன்றைய அரசியல், சமூகச் சூழல்களையும் சுட்டிக்காட்டி விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பங்குபெற வேண்டும் என்கிற உணர்வினை ஏற்படுத்தினார். இவரே தமிழில் கருத்துப்படத்தை அறிமுகம் செய்தவர் ஆவார்.**

201) தினமணி இதழின் முதல் ஆசிரியராக இருந்த டி.எஸ்.சொக்கலிங்கம் மறைவுக்குப் பின்னர்த் தினமணியின் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் யார்?

**A) ஏ.என்.சிவராமன்**

B) ஜி.கஸ்தூரி

C) அறிஞர் அண்ணா

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: தினமணி நாளிதழின் முதல் ஆசிரியராக 1934இல் டி.எஸ்.சொக்கலிங்கம் பொறுப்பேற்றார். அவரின் மறைவுக்குப் பின்னர் தினமணியின் ஆசிரியாகப் பொறுப்பேற்ற சிவராமன் 1987 வரை பணியாற்றினார்.**

202) மெட்ராஸ் கூரியர் என்ற ஆங்கில வார இதழை சென்னையில் வெளியிட்டவர் யார்?

**A) ரிச்சர்டு ஜான்சன்**

B) பெர்சிவல் பாதிரியார்

C) ஜோஹன்னஸ் கூடன்பர்க்

D) ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

**விளக்கம்: சென்னையில் 1785ஆம் ஆண்டு அக்டோபர் 12இல் முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 'மெட்ராஸ் கூரியர்' என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.**

203) சி.பா.ஆதித்தனாரின் பத்திரிக்கை கையேட்டிலிருந்து சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதில் தவறான ஒன்றை தெரிவு செய்க?

A) கள்ள ரூபாய் நோட்டுச் செய்தியை எழுதும்போது 'கத்தை கத்தையாக நோட்டு அச்சடிப்பு' என்று எழுத வேண்டும்.

B) அரசாங்கம் நோட்டு அச்சடிக்கும்போது 'கோடிக்கணக்கில் ரூபாய்நோட்டு அச்சடிப்பு' என்று சொல்ல வேண்டும்

C) மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பெரிய ஆஸ்பத்திரியைத் 'தலைமை ஆஸ்பத்திரி' என்று எழுத வேண்டும்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: கள்ள ரூபாய் நோட்டுச் செய்தியை எழுதும்போது 'கத்தை கத்தையாக நோட்டு அச்சடிப்பு' என்று எழுத வேண்டும்.**

**அரசாங்கம் நோட்டு அச்சடிக்கும்போது 'கோடிக்கணக்கில் ரூபாய்நோட்டு அச்சடிப்பு' என்று சொல்ல வேண்டும்**

**மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை ஆஸ்பத்திரியைப் 'பெரிய ஆஸ்பத்திரி' என்று எழுத வேண்டும்**

204) இந்திர மோகனா என்னும் நாடகம் யாருடைய முதல் படைப்பு?

A) டி.சி.பட்டம்மாள்

**B) வை.மு.கோதைநாயகி**

C) பம்மல் சம்பந்தனார்

D) அறிஞர் அண்ணா

**விளக்கம்: வை.மு.கோதைநாயகி, நன்றாக கதை சொல்வதைக் கேட்டு அவரின் தோழியான டி.சி.பட்டம்மாள் அவரை கதை எழுதத் தூண்டினார். எழுதப் படிக்கத் தெரியாத வை.மு.கோதைநாயகி தன்னால் எப்படி எழுத முடியும்? என வருத்தமுற்றார். அவரின் முகக் குறிப்பை உணர்ந்த பட்டம்மாள், 'நீ சொல்லச் சொல்ல நான் எழுதுகிறேன்' என்று கூறி, அவருக்கு ஊக்கமூட்டினார். வை.மு.கோதைநாயகியின்**

**முதல் படைப்பு, 'இந்திர மோகனா' என்னும் நாடகமாகும். பின்னர், எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு படைப்புகளை வெளியிடத் தொடங்கினார்.**

205) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) சகோதரர் – சுவாமி விவேகானந்தர்

B) பொ.ஆ. 1450இல் ஜோஹன்னஸ் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினைக் கண்டுபிடித்தார்.

**C) 1782ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.**

D) 1785 அக்டோபர் 12இல் முதல் முதலாக ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 'மெட்ராஸ் கூரியர்' என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.

**விளக்கம்: 1780ஆம் ஆண்ட ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.**

206) செய்திகளை சேரிக்க மாவட்ட, மாநிலத் தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை நியமித்து புதுமையான முயற்சி மேற்கொண்டவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட, மாநில தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை நியமித்தது ஜி.கஸ்தூரியின் புதுமையான முயற்சியாகும். 1977இல் அவர் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய "OUTLOOK, SPECIAL REPORT OPEN PAGE" ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.**

207) தமிழ் இதழியல் வரலாற்றில் முன்முறையாக ஒரு பெண் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தி எந்த இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது?

A) தினசரி

B) தினமணி

C) நந்தவனம்

**D) ஜகன்மோகினி**

**விளக்கம்: தமிழ் இதழியல் வரலாற்றில் முன்முறையாக ஒரு பெண் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திய 'ஜகன்மோகினி' இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது ஒரு சாதனையாகும். இன்றைய மகளிர் இதழ்களின் தவிர்க்க முடியாத தன்மையாக விளங்கும் சமையல், கோலம், அழகுக்குறிப்பு, சோதிடம் போன்றவை அன்றைய ஜகன் மோகினியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

208) தமிழ் இதழியலில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை யாரைச்சாரும்?

A) அறிஞர் அண்ணா

B) தந்தை பெரியார்

**C) திரு.வி.க**

D) பாரதியார்

**விளக்கம்: தமிழ் இதழியலில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத்தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாக திகழ்ந்தது.**

209) டி.எஸ்.சொக்கலிங்கம் தினமணி ஆசிரியராக இருந்தபோது அதில் துணையாசிரியராகப் பொறுப்பேற்றவர் யார்?

**A) ஏ.என்.சிவராமன்**

B) ஜி.கஸ்தூரி

C) தந்தை பெரியார்.

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய இதழ் 'காந்தி' ஆகும். இதில் ஒரு பத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந்து விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். 1934ல் டி.எஸ்.சொக்கலிங்கம் தினமணி ஆசிரியராகப் பொறுப்பேற்றவுடன் சிவராமன் அதில் துணையாசிரியராகப் இணைந்தார்.**

210) கூற்று: இதழியலின் தந்தை என அழைக்கப்படுபவர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஆவார்.

காரணம்: செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**விளக்கம்: செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். அவர் இதழியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.**

211) கூற்றுகளை ஆராய்க.

1. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டுமே படிக்கும் இதழ்களைச் 'செவ்வியல் இதழ்கள்' என்று அழைப்பர்.

2. அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்களை 'மக்கள் இதழ்கள்' என்று அழைப்பர்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டுமே படிக்கும் இதழ்களைச் 'செவ்வியல் இதழ்கள்' என்று அழைப்பர்.**

**2. அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடியத இதழ்களை 'மக்கள் இதழ்கள்' என்று அழைப்பர்.**

212) எந்த ஆண்டு ஜி.கஸ்தூரி தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய "OUTLOOK, SPECIAL REPORT OPEN PAGE" ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன?

A) 1974

B) 1976

C) 1978

**D) 1977**

**விளக்கம்: செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட, மாநில தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை நியமித்தது ஜி.கஸ்தூரியின் புதுமையான முயற்சியாகும். 1977இல் அவர் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய "OUTLOOK, SPECIAL REPORT OPEN PAGE" ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.**

213) சி.பா.ஆதித்தனாரின் பத்திரிக்கை கையேட்டிலிருந்து சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

**A) காரால் மோதப்பட்டு கிழவி சாவு**

B) கார் மோதி கிழவி சாவு

C) மண்டையைப் பிளக்கும் வெயிலில் உணவு அமைச்சர் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: செய்வினையில் எழுத வேண்டும்.**

**'காரால் மோதப்பட்டு கிழவி சாவு' – தவறு.**

**'கார் மோதி கிழவி சாவு' – சரி.**

**'உணவு அமைச்சர் மண்டையைப் பிளக்கும் வெயிலில் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்' – தவறு.**

**'மண்டையைப் பிளக்கும் வெயிலில் உணவு அமைச்சர் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்' – சரி.**

214) கூற்றுகளை ஆராய்க.

1. நாடோடிகளாக வாழ்ந்த மனிதஇனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்று வாழ முற்பட்டது. அவர்களுக்குள்ளே செய்திப் பரிமாற்றங்கள் தேவைபட்டன.

2. சீனர்கள் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. நாடோடிகளாக வாழ்ந்த மனிதஇனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்று வாழ முற்பட்டது. அவர்களுக்குள்ளே செய்திப் பரிமாற்றங்கள் தேவைபட்டன. இதுவேமொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. தீப்பந்தங்களை எரிந்தும், பறை அறிவித்தும் ஓர் இடத்தில் நிகழும் செய்திகளை மற்றவர்களுக்கு அறிவித்தனர். மேலும், ஆட்களை அனுப்பியும் புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளைத் தெரிவித்தனர்.**

**2. சீனர்கள் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது.**

215) இந்தியாவில் யாருடைய கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்?

**A) அசோகர்**

B) கனிஷ்கர்

C) சமுத்திரகுப்தர்

D) அக்பர்

**விளக்கம்: செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். அவர் இதழியலின் தந்தை என அழைக்கப்படுகிறார். இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.**

216) எப்போது ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 'மெட்ராஸ் கூரியர்' என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்?

A) 1785 அக்டோபர் 2

B) 1785 அக்டோபர் 7

**C) 1785 அக்டோபர் 12**

D) 1785 அக்டோபர் 17

**விளக்கம்: சென்னையில் 1785ஆம் ஆண்டு அக்டோபர் 12இல் முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 'மெட்ராஸ் கூரியர்' என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.**

217) எழுத்துநடை குறித்துப் பத்திரிக்கை எழுத்தாளர் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டவர் யார்?

A) டி.எஸ்.சொக்கலிங்கம்

**B) சி.பா.ஆதித்தனார்**

C) தந்தை பெரியார்

D) ஜி.கஸ்தூரி

**விளக்கம்: எழுத்துநடை குறித்துப் பத்திரிகை எழுத்தாளர் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டிருக்கிறார் சி.பா.ஆதித்தனார். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி எழுது என்பதே இக்கையேட்டின் பொன்விதி.**

218) தினமணியின் ஆசிரியராகப் சிவராமன் எப்போது வரை இருந்தார்?

A) 1965

B) 1978

C) 1984

**D) 1987**

**விளக்கம்: தினமணி நாளிதழின் முதல் ஆசிரியராக 1934இல் டி.எஸ்.சொக்கலிங்கம் பொறுப்பேற்றார். அவரின் மறைவுக்குப் பின்னர் தினமணியின் ஆசிரியாகப் பொறுப்பேற்ற சிவராமன் 1987 வரை பணியாற்றினார்.**

219) தமிழன் என்ற இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) மறைமலை அடிகள்

**B) சி.பா.ஆதித்தனார்**

C) பாரதிதாசன்

D) பெருஞ்சித்தனார்

**விளக்கம்: தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவை,**

**1. மறைமலை அடிகள்– அறிவுக்கடல்**

**2. சி.பா.ஆதித்தனார்– தமிழன், தமிழ்க்கொடி**

**3. பாரதிதாசன்– குயில்**

**4. பெருஞ்சித்தனார்– தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

220) தினமணி நாளிதழின் ஆசிரியரான ஏ.என். சிவராமன் கீழ்க்காணும் எதைப் பற்றிய கட்டுரைகளுக்காக அறியப்படுகிறார்?

**A) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

B) கல்வி

C) வேலைவாயப்பு

D) உடல் நலம்

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான ஏ.என். சிவராமன் தமது அறிவியல் மற்றும் தொழிநுட்பக் கட்டுரைகளுக்காக அறியப்படுகிறார்.**

221) தமிழில் முதன் முதலில் வெளிவந்த நாளிதழ் எது?

A) தினவர்த்தனமானி

B) தினமணி

C) தி ஹிந்து

**D) தெரியவில்லை**

**விளக்கம்: தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிவில்லை. 1856–இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தனமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது.**

222) விண்வெளி, அறிவியல், அரசியல் தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் யார்?

**A) ஏ.என்.சிவராமன்**

B) ஜி.கஸ்தூரி

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: விண்வெளி, அறிவியல், அரசியல் தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் ஏ.என்.சிவராமன் ஆவார்.**

223) எந்த ஆண்டு கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது?

A) 1780

B) 1785

C) 1856

**D) 1870**

**விளக்கம்: 1870–ஆம் ஆண்டு கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.**

224) 'மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுவது எது?

A) அரசு நிர்வாகம்

B) பாராளுமன்றம், சட்டமன்றம்

C) நீதிமன்றம்

**D) ஊடகம்**

**விளக்கம்: 'ஊடகம் மக்களாட்சின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகிறது. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.**

225) டி.எஸ்.சொக்கலிங்கம் எப்போது தினமணி இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்?

A) 1935

**B) 1934**

C) 1938

D) 1937

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய இதழ் 'காந்தி' ஆகும். இதில் ஒருபத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந்து விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். 1934ல் டி.எஸ்.சொக்கலிங்கம் தினமணி ஆசிரியராகப் பொறுப்பேற்றவுடன் சிவராமன் அதில் துணையாசிரியராகப் இணைந்தார்.**

226) தி இந்து ஆங்கில நாளிதழில் திரு.ஜி.கஸ்தூரி என்பவர் எப்போது முதல் எப்போது வரை ஆசிரியராகப் பணியாற்றினார்?

**A) 1965 முதல் 1991 வரை**

B) 1960 முதல் 1994 வரை

C) 1969 முதல் 1997 வரை

D) 1963 முதல் 1994 வரை

**விளக்கம்: திரு.ஜி.எஸ்.கஸ்தூரி தி ஹிந்து ஆங்கில நாளிதழில் 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் செய்தித்தாள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிக்கை உலகில் போற்றப்படுகிறார்.**

227) இதழியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

A) அரிஸ்டாட்டில்

**B) ஜூலியஸ் சீசர்**

C) ஜோஹன்ஸ் கூடன்பர்க்

D) ஜேம்ஸ் அகஸ்டஸ்

**விளக்கம்: செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். அவர் இதழியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.**

228) பாரிடைத் துயில்வோர் கண்ணில்

பாய்ந்திடும் எழுச்சி நீதான் – இவ்வரியில் குறிப்பிடப்படுவது கீழ்க்காணும் எதனை?

A) வானொலி

B) தொலைக்காட்சி

**C) பத்திரிக்கை**

D) இணையம்

**விளக்கம்: காரிருள் அகத்தில் நல்ல**

**கதிரொளி நீதான் இந்தப்**

**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**

**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**

**ஊரினை நாட்டை இந்த**

**உலகினை ஒன்று சேர்க்கப்**

**பேரறி வாளர் நெஞ்சில்**

**பிறந்த பத்திரிகைப் பெண்ணே – பாரதிதாசன்**

**மேற்காணும் வரிகளில் குறிப்பிடப்படுவது பத்திரிக்கை ஆகும்.**

229) அறிவுக்கடல் என்ற இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

**A) மறைமலை அடிகள்**

B) சி.பா.ஆதித்தனார்

C) பாரதிதாசன்

D) பெருஞ்சித்தனார்

**விளக்கம்: தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவை,**

**1. மறைமலை அடிகள்– அறிவுக்கடல்**

**2. சி.பா.ஆதித்தனார்– தமிழன், தமிழ்க்கொடி**

**3. பாரதிதாசன்– குயில்**

**4. பெருஞ்சித்தனார்– தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

230) கூற்று: 'இந்தியா' என்ற இதழை அனைவரும் விரும்பி படித்தனர்.

காரணம்: பாரதியார் அவ்விதழில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

**விளக்கம்: கருத்துப்பட வடிவத்தினை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் காட்டியவர் பாரதியே. கருத்துப்படங்களுக்காகவே 'இந்தியா' இதழினை அனைவரும் விரும்பிப் படித்தனர்.**

231) சென்னைத் தலைமை அலுவலத்தில் வடிவமைக்கப்பட்ட பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை **ஆ**சியாவிலேயே முதலில் அறிமுகம் செய்தவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி ஜி.கஸ்தூரி ஆவார். சென்னைத் தலைமை அலுவலத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் இவரே. ஆசியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்ட இம்முறையினால் செய்தித்தாள் விநியோகத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தினார்.**

232) தமிழில் முதன் முதலில் வெளிவந்த வார இதழ் எது?

**A) தினவர்த்தனமானி**

B) தினமணி

C) தி ஹிந்து

D) சுதேசிமித்ரன்

**விளக்கம்: தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிவில்லை. 1856–இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தனமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது.**

233) ஏ.என்.சிவராமன் எந்த இதழுடன் தொடர்புடையவர் ஆவார்?

A) தினத்தந்தி

B) தினசரி

**C) தினமணி**

D) தி இந்து

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான ஏ.என். சிவராமன் தமது அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கட்டுரைகளுக்காக அறியப்படுகிறார்.**

234) இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாக கருதியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாகக் கருதியவர் ஜி.கஸ்தூரி ஆவார். செய்திதாள்கள் அதனை ஈடு செய்யும் வகையில் செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு ஆதாரங்களில் இருந்து வெவ்வேறு வடிவங்களில் செய்திகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் செயல்பட்டார்.**

235) எந்த ஆண்டு ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாக சுதேசமித்திரன் தொடங்கப்பட்டது?

A) 1870

**B) 1882**

C) 1889

D) 1904

**விளக்கம்: 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' 1889இல் நாளிதழாக மாறியது. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.**

236) ஜனவிநோதினி என்ற இதழின் நோக்கம் என்ன?

**A) கல்வி வளர்ச்சி**

B) மருத்துவம் சார்ந்த தகவல்கள்

C) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கட்டுரைகள்

D) கலை இலக்கியம் சார்ந்த கட்டுரைகள்

**விளக்கம்: 1870–ஆம் ஆண்டு கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.**

237) 'காந்தி' என்னும் இதழை நடத்தியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

B) ஜி.கஸ்தூரி

**C) டி.எஸ்.சொக்கலிங்கம்**

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய இதழ் 'காந்தி' ஆகும். இதில் ஒருபத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந் விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார்.**

238) செய்தித்தாள் விநியோகத்தில் புதுமையான முயற்சிகளை மேற்கொண்டவர், அச்சுத் தொழில்நுட்பத்தில் நவீன முறைகளை கையாண்டவர் என்ற வாசகத்துடன் தொடர்புடையவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: திரு.ஜி.எஸ்.கஸ்தூரி தி ஹிந்து ஆங்கில நாளிதழில் 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் செய்தித்தாள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிக்கை உலகில் போற்றப்படுகிறார்.**

239) பொருத்துக.

அ. தமிழ்க்கல்வி– 1. 1897

ஆ. கல்விக்கதிர்–2. 1969

இ. முதியோர்க்கல்வி– 3. 1951

A) 3, 2, 1

**B) 1, 2, 3**

C) 3, 1, 2

D) 1, 3, 2

**விளக்கம்: ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதி செய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர் கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டு வந்தன.**

240) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் எங்குள்ளது?

A) திருச்சி

B) சிவகங்கை

C) வேலூர்

**D) திருநெல்வேலி**

**விளக்கம்: இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – புனே.**

**டைம்ஸ் இதழியல் பள்ளி– புததில்லி.**

**திரைப்படக் கல்லூரி– அடையாறு, சென்னை.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி**

241) "தமிழ் ஒரு மாநில மொழி, அப்படியிருந்தும் இந்தியப் பத்திரிக்**கை**களைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகின்றன' இதற்குக் காரணம் என்ன?" என்ற கூற்றை கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) சி.பா.ஆதித்தனார்

**C) ஜவஹர்லால் நேரு**

D) இராஜேந்திரப் பிரசாத்

**விளக்கம்: 1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது. பத்திரிகைப் பதிவாளரின் அறிக்கையில் இந்த விவரங்களைப் படித்த நேரு வியப்படைந்து, தமிழ் ஒரு மாநில மொழி, அப்படியிருந்தும் இந்தியப் பத்திரிக்கைகளைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகின்றன' இதற்குக் காரணம் என்ன என்று அலுவலர்களிடம் விசாரித்தார்.**

242) கூற்று: செய்தித்தாள்கள் செய்திகளை வழங்குவதில் மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டும்

காரணம்: இந்தியாவில் தொலைகாட்சி அறிமுகமானது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாகக் கருதியவர் ஜி.கஸ்தூரி ஆவார். செய்திதாள்கள் அதனை ஈடு செய்யும் வகையில் செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு ஆதாரங்களில் இருந்து வெவ்வேறு வடிவங்களில் செய்திகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் செயல்பட்டார்.**

243) காலைக்கதிர் என்ற இதழ் எதற்கு புகழ்பெற்றது?

**A) அறிவியல்**

B) தொழில்நுட்பம்

C) கல்வி

D) மருத்துவம்

**விளக்கம்: தமிழில் புகழ்பெற்ற இதழான 'காலைக்கதிர்' 1948 முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் கட்டுரைகளை அவ்விதழ் வெளியிடுகிறது.**

244) 1934ஆம் ஆண்டு எந்த இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்று டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார்?

**A) தினமணி**

B) காந்தி

C) தினசரி

D) நவசக்தி

**விளக்கம்: 1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தினமணி இதழில், அவ்விதழின் முதல் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை (முன்ஜாமீன்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார்.**

245) மக்கள் செய்திகளின் உள்ளடக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பகத்தன்மையே ஒரு நாளிதழின் மிகப்பெரும் சொத்து என கருதியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: மக்கள் செய்திகளின் உள்ளடக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பகத்தன்மையே ஒரு நாளிதழின் மிகப்பெரும் சொத்து என ஜி.கஸ்தூரி கருதினார். தென்னகம் முழுமைக்கும் விரைவாக அதிகாலையிலேயே நாளிதழ்கள் கிடைக்கும்பொருட்டு, முதன்முதலில் விமானச்சேவையைப் பயன்படுத்தியது அவரது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.**

246) பேரரசர் அசோகர் எப்போது மக்களுக்கு செய்தி வெளியிட்டார்?

A) பொ.ஆ.மு.256

**B) பொ.ஆ.மு.262**

winmeen.com

C) பொ.ஆ.மு.267

D) பொ.ஆ.மு.269

**விளக்கம்: பேரரசர் அசோர் பொ.ஆ.மு.262இல் மக்களுக்கு வெளியிட்ட அரசு செய்தியில், 'பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.**

247) எந்த ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் நடைபெற்றது?

A) 1941

**B) 1942**

C) 1940

D) 1939

**விளக்கம்: 1942இல் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திற்குப் பின்னர், பெரும்பாலான இதழ்கள் தேசிய இயக்கத்தோடு ஒன்றிணைந்தன. இந்திய மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தன. இதன் விளைவாக, நாட்டு மக்கள் அந்நியர்களை நாட்டை விட்டு விரட்டும் முயற்சியில் பல போராட்டங்களை நடத்தி விடுதலை பெற்றனர்.**

248) பொருத்துக.

அ. பாலபாரதம், இந்தியா– 1. பண்பாட்டுப் பாதுகாப்பு, தமிழ் மறுமலர்ச்சி

ஆ. ஜெயபாரதம், சுந்திரச் சங்கு, லோகோபகாரி – 2. சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு

இ. மணிக்கொடி– 3. விடுதலை உணர்வு

**A) 3, 1, 2**

B) 1, 3, 2

C) 1, 2, 3

D) 3, 2, 1

**விளக்கம்: பாலபாரதம், இந்தியா – விடுதலை உணர்வு**

**ஜெயபாரதம், சுந்திரச் சங்கு, லோகோபகாரி – பண்பாட்டுப் பாதுகாப்பு, தமிழ் மறுமலர்ச்சி**

**மணிக்கொடி – சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு**

249) தமிழில் முதன் முதலில் கருத்துப்படத்தை வெளியிட்ட இதழ் எது?

**A) இந்தியா**

B) சுதேசமித்திரன்

C) தேசபக்தி

D) நவசக்தி

**விளக்கம்: தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.03.1909) "தமிழ்நாட்டுப் வர்த்தமானப் பத்திரிக்கைகளிலே நமது பத்திரிக்கையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார்.**

250) கீழ்க்காணும் எந்தப் பத்திரிக்கையாளர் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்திரயாகிரகத்தில் பங்கேற்றார்?

**A) ஏ.என்.சிவராமன்**

B) ஜி.கஸ்தூரி

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: தினமணி நாளிதழின் ஆசிரியரான டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய இதழ் 'காந்தி' ஆகும். இதில் ஒருபத்திரிக்கையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந்து விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார்.**

251) சுதேசமித்திரன் என்ற வாரஇதழைத் தொடங்கியவர் யார்?

A) பாரதியார்

**B) ஜி.சுப்பிரமணியம்**

C) திரு.வி.க

D) அரவிந்தர்

**விளக்கம்: 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' 1889இல் நாளிதழாக மாறியது. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.**

252) சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் விளங்குவது எது?

A) திரைப்படம்

B) இலக்கியம்

C) அற நூல்கள்

**D) இதழ்கள்**

**விளக்கம்: மக்கள் ஒன்றாய் கூடி வாழும் அமைப்பே சமூகம் ஆகும். அது மொழி, இன, அரசியல் தொடர்புகளினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அத்தகைய சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் இதழ்கள் விளங்குகின்றன.**

253) தவறான கூற்றை தெரிவு செய்க

A) 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார்.

B) 'வல்லரசு' என்ற புதிய அரசியல் பதத்தை முதன்முதலில் திரு.வி.க. உருவாக்கினார்

C) அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்றேதிரு.வி.க எழுதினார்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார்.**

**'வல்லரசு' என்ற புதிய அரசியல் பதத்தை முதன்முதலில் திரு.வி.க. உருவாக்கினார்**

**அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்றேதிரு.வி.க எழுதினார்.**

254) எந்த அறிவியல் இதழ் சிறுவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது?

A) கம்யூட்டர் உலகம்

B) தமிழ் கம்ப்யூட்டர்

**C) துளிர்**

D) காலைக்கதிர்

**விளக்கம்: 'துளிர்' என்னும் அறிவியல் இதழ் சிறுவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது. 'கம்ப்யூட்டர் உலகம்', 'தமிழ் கம்ப்யூட்டர்' போன்ற கணினி இதழ்கள் கணினி அறிவை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல புதிய தொழில்நுட்பச் செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றன.**

255) தமிழின் முதல் வார இதழ் எப்போது தொடங்கப்பட்டது?

A) 1780

B) 1785

C) 1848

**D) 1856**

**விளக்கம்: தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிவில்லை. 1856–இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தனமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது.**

256) வை.மு.கோதைநாயகியின் காலம் என்ன?

**A) 1901–1960**

B) 1924–2012

C) 1904–2001

D) 1905–1981

**விளக்கம்: 1901–1960 – வை.மு.கோதைநாயகி**

**1924–2012 – ஜி.கஸ்தூரி**

**1904–2001 – ஏ.என்.சிவராமன்**

**1905–1981 – சி.பா.ஆதித்தனார்**

257) பாலபாரதம் என்ற இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது. இந்த இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாரதியார்

**B) வ.வே.சு.ஐயர்**

C) ஜி.சுப்பிரமணிய ஐயர்

D) மறைமலை அடிகள்

**விளக்கம்: பண்பாட்டை உருவாக்குவதில் இதழ்கள் ஆற்றல் வாய்ந்தவையாக உள்ளன. வ.வே.சு–வின் பாலபாரதம் என்னும் இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது. பாரதியாரின் 'இந்தியா' இதழில் விடுதலை உணர்வு, சமூகச்சீர்த்திருத்தம், பண்பாடு ஆகியன வலியுறுத்தப்பட்டன.**

258) தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த இதழ் எது?

**A) விடுதலை**

B) தனித்தமிழ்

C) அறிவுக்கடல்

D) தமிழன்

**விளக்கம்: தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த பெரியாரின் 'விடுதலை', 'குடியரசு' ஆகிய இதழ்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின.**

259) நவஜீவன் என்ற இதழை நடத்தியவர் யார்?

A) திலகர்

B) அம்பேத்கர்

**C) காந்தியடிகள்**

D) சுவாமி விவேகானந்தர்

**விளக்கம்: அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல் நுழைவு, இதழ்களின் வளர்ச்சியின் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென்னாப்பிரிகாவில், 'இந்தியன் ஒபினியன்' என்ற இதழையும், நம் நாட்டில் 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.**

260) தென்னகம் முழுமைக்கும் விரைவாக அதிகாலையிலேயே நாளிதழ்கள் கிடைக்கும்பொருட்டு, முதன்முதலில் விமானச்சேவையைப் பயன்படுத்தியவர் யார்?

A) ஏ.என்.சிவராமன்

**B) ஜி.கஸ்தூரி**

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: மக்கள் செய்திகளின் உள்ளடக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பகத்தன்மையே ஒரு நாளிதழின் மிகப்பெரும் சொத்து என ஜி.கஸ்தூரி கருதினார். தென்னகம் முழுமைக்கும் விரைவாக அதிகாலையிலேயே நாளிதழ்கள் கிடைக்கும்பொருட்டு, முதன்முதலில் விமானச்சேவையைப் பயன்படுத்தியது அவரது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.**

261) தென்மொழி, தமிழ்ச்சிட்டு என்ற இதழ் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) மறைமலை அடிகள்

B) சி.பா.ஆதித்தனார்

C) பாரதிதாசன்

**D) பெருஞ்சித்தனார்**

**விளக்கம்: தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவை,**

**1. மறைமலை அடிகள்– அறிவுக்கடல்**

**2. சி.பா.ஆதித்தனார்– தமிழன், தமிழ்க்கொடி**

**3. பாரதிதாசன்– குயில்**

**4. பெருஞ்சித்தனார்– தென்மொழி, தமிழ்ச்சிட்டு.**

262) பெண்கள் உடன்கட்டை ஏறுவதை தடுக்க காரணமாக இருந்தவர் யார்?

A) தயானந்த சரஸ்வதி

B) விவேகானந்தர்

**C) இராஜாராம் மோகன் ராய்**

D) தந்தை பெரியார்

**விளக்கம்: இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்காக மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829–இல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டை. ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன.**

263) கூற்றுகளை ஆராய்க.

1. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டும் படிக்கும் இதழ்கள் – செவ்விதழ்கள்

2. அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்கள் – மக்கள் இதழ்கள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டும் படிக்கும் இதழ்கள் – செவ்விதழ்கள்.**

**2. அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்கள் – மக்கள் இதழ்கள்.**

264) கூற்றுகளை ஆராய்க.

1. மொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது செய்திப் பரிமாற்றம்.

2. செய்தித்தாள்கள் வருவதற்கு முன், தீப்பந்தங்களை எரித்தும், பறை அறிவித்தும், புறக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளை தெரிவித்தனர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. மொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது செய்திப் பரிமாற்றம்.**

**2. செய்தித்தாள்கள் வருவதற்கு முன், தீப்பந்தங்களை எரித்தும், பறை அறிவித்தும், புறக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளை தெரிவித்தனர்.**

265) தவறான கூற்றை தெரிவு செய்க

**A) செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.60இல் அறிமுகப்படுத்தினார்.**

B) அவர் தினசரி செய்தி என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார்.

C) 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பட்டது சுதேச மித்திரன்.

D)மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு.60இல் அறிமுகப்படுத்தினார்.**

266) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) இதழியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் – ஜூலியஸ் சீசர்

B) இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

C) திலகர் – கேசரி

**D) 1882இல் கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.**

**விளக்கம்: 1870இல் கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.**

267) தவறான கூற்றை ஆராய்க.

A) 1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பரால் **வார** இதழாகத் தொடங்கப்பெற்ற 'சுதேசமித்திரன்' 1889–இல் நாளிதழிலாக மாறியது.

B) சீனர்களால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது.

C) வந்தேமாதரம் – அரவிந்தர்

**D) 1886இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும்.**

**விளக்கம்: 1856இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய 'தினவர்த்தமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும்.**

268) ஒரு செய்தித்தாளின் பணியென்பது செய்திகளை ஆதாரப்பூர்வமாகவும் துல்லியமாகவும் வழங்குவது மட்டுமன்று, ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வதுமாகும் என்று கருதியவர் யார்?

**A) ஏ.என்.சிவராமன்**

B) ஜி.கஸ்தூரி

C) டி.எஸ்.சொக்கலிங்கம்

D) சி.பா.ஆதித்தனார்

**விளக்கம்: ஒரு செய்தித்தாளின் பணியென்பது செய்திகளை ஆதாரப்பூர்வமாகவும் துல்லியமாகவும் வழங்குவது மட்டுமன்று, ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வதுமாகும் என்று ஏ.என்.சிவராமன் கருதினார்.**

269) கூற்றுகளை ஆராய்க.

1. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார்.

2. மகாகவி பாரதியார் 1909இல் 'இந்தியா' என்ற தமிழ் மாத இதழையும், 'பாலபாரதம்' என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 1904இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார்.**

**2. மகாகவி பாரதியார் 1907இல் 'இந்தியா' என்ற தமிழ் மாத இதழையும், 'பாலபாரதம்' என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.**

270) காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் எந்த இதழை அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்?

**A) இந்தியன் ஒபினியன்**

B) யங் இந்தியா

C) ஹறிஜன்

D) நவ இந்தியா

**விளக்கம்: அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல்நுழைவு, இதழ்களின் வளர்ச்சியின் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென்னாப்பிரிகாவில், 'இந்தியன் ஒபினியன்' என்ற இதழையும், நம் நாட்டில் 'யங் இந்தியா', 'ஹறிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.**

271) காகிதத்தை கண்டுடிபிடித்த நாடு எது?

A) இத்தாலி

B) ரோம்

**C) சீனர்கள்**

D) இங்கிலாந்து

**விளக்கம்: சீனர்களால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது. இதழ்களின் வளர்ச்சிக்கு அச்சுக்கலை பெருந்துணை புரிந்தது.**

272) கூற்றுகளை ஆராய்க.

1. இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார்.

2. யங் இந்தியா, ஹறிஜன், நவஜீவன் முதலிய இதழ்கள் காந்தியடிகளால் நடத்தப்பட்டன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார்.**

**2. யங் இந்தியா, ஹறிஜன், நவஜீவன் முதலிய இதழ்கள் காந்தியடிகளால் நடத்தப்பட்டன.**

273) யாருடைய அறிவுரையின்படி இந்தியப் பத்திரிக்கைகள் சி.பா.ஆதித்தனாரின் மொழி நடையைப் பின்பற்ற ஆரம்பித்தன?

A) காந்தியடிகள்

**B) ஜவஹர்லால் நேரு**

C) இராதகிருஷ்ணன்

D) இராஜேந்திர பிரசாத்

**விளக்கம்: "தமிழ் பத்திரிக்கைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிக்கைகள் கடினமான இலக்கிய நடையில் எழுதப்படுவதால் குறைவாக விற்பனையாகின்றன. அவர்கள் (இந்தியப் பத்திரிக்கைகள்) எழுவதை என்னால்கூடப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் கடின நடையைக் கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுத வேண்டும்"**

**என்றார் ஜவஹர்லால் நேரு. இதன்பிறகு, இந்திய நாளிதழ்கள் சி.பா.ஆதித்தனாரின் மொழிநடையைப் பின்பற்ற ஆரம்பித்தன.**

274) 'சம்பத் கௌமுதி' என்ற இதழுடன் தொடர்புடையவர் யார்?

A) திலகர்

B) அம்பேத்கர்

C) காந்தியடிகள்

**D) இராஜராம் மோகன்ராய்**

**விளக்கம்: பெண்கல்வியும், கைம்பெண் மறுமணமும் மறுக்கப்பட்ட காலத்தில் பெண்களுக்காக இதழ்கள் பெரிதும் போராடின. இராஜராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்காக மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829–இல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டைஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன.**

275) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) தமிழ் உரைநடை வரலாற்றில் திரு.வி.க–வின் உரைநடை குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்ந்தது.

B) அறிவுக்கடல் – மறைமலை அடிகள்

C) தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த இதழ் – விடுதலை, குடியரசு

**D) கல்விக்கதிர் என்ற கல்வி இதழ் 1967 முதல் வெளிவந்தன.**

**விளக்கம்: ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதிசெய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காக கல்விக்கதிர் என்ற கல்வி இதழ் 1969 முதல் வெளிவந்தன.**

276) இந்திய அளவிலான இதழியல் படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களுள் பொருந்தாததை தேர்வு செய்க.

A) சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம்– புனே.

B) சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம்– மும்பை.

C) எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி– ஜமியா, புதுதில்லி

**D) மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி– சென்னை**

**விளக்கம்: சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

**சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம்– மும்பை.**

**எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி– ஜமியா, புதுதில்லி**

**மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி– கோட்டயம், கேரளா.**

**ஆசிய இதழியல் கல்லூரி– சென்னை**

**திரைப்படக் கல்லூரி– அடையாறு, சென்னை**

278) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) குயில் என்ற இதழுடன் தொடர்புடையவர் பாரதிதாசன் ஆவார்

B) வ.வே.சு–வின் பாலபாரதம் என்னும் இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது.

C) பாரதியாரின் 'இந்தியா' இதழில், விடுதலை உணர்வு, சமூகச்சீர்த்திருத்தம், பண்பாடு ஆகியன வலியுறுத்தப்பட்டன.

**D) எழுத்து இதழ் சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு ஆகியவற்றை வெளியிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது.**

**விளக்கம்: மணிக்கொடி இதழ் சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு ஆகியவற்றை வெளியிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது.**

279) எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி எங்குள்ளது?

A) புனே

B) மும்பை

**C) ஜாமியா**

D) கோட்டயம்

**விளக்கம்: சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம் – புனே.**

**சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம்– மும்பை.**

**எ.ஜெ.கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி– ஜமியா, புதுதில்லி**

**மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி– கோட்டயம், கேரளா.**

280) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) பாரதியார் கருத்துப்படத்தை 'விகடசித்திரம்'என்று அழைத்தார்

B) 1850ஆம் ஆண்டு முதல் தில்லியிலிருந்து வெளியான 'தில்லி ஸ்கெட்ச் புக்'என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும்.

C) பெரியார் தன் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க பயன்படுத்திய இரண்டு கருவிகள் – மேடைப்பேச்சு, எழுத்து

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: பாரதியார் கருத்துப்படத்தை 'விகடசித்திரம்'என்று அழைத்தார்**

**1850ஆம் ஆண்டு முதல் தில்லியிலிருந்து வெளியான 'தில்லி ஸ்கெட்ச் புக்'என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும்.**

**பெரியார் தன் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க பயன்படுத்திய இரண்டு கருவிகள் – மேடைப்பேச்சு, எழுத்து**

281) பெண்கள் உடன்கட்டை ஏறுவதை தடுக்க காரணமாக இருந்தவர் யார்?

**A) வில்லியம் பெண்டிங் பிரபு**

B) டல்ஹௌசி பிரவு

C) வாரன் ஹேஸ்டிங்ஸ்

D) காரன் வாலிஸ் பிரபு

**விளக்கம்: இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்காக மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829–இல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன.**

282) "பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார்" இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) சமுத்திர குப்தர்

B) சந்திர குப்தர்

**C) அசோகர்**

D) அக்பர்

**விளக்கம்: பேரரசர் அசோகர் பொ.ஆ.மு.262இல் மக்களுக்கு வெளியிட்ட அரசு செய்தியில், 'பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.**

283) பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் எந்த ஆண்டு நீக்கப்பட்டது?

A) 1823

B) 1856

**C) 1829**

D) 1833

**விளக்கம்: இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்காக மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829–இல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன்கட்டை. ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன.**

284) டைம்ஸ் இதழியல் பள்ளி எங்குள்ளது?

A) புனே

**B) புதுதில்லி**

C) அடையாறு

D) திருநெல்வேலி

**விளக்கம்: இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – புனே.**

**டைம்ஸ் இதழியல் பள்ளி– புதுதில்லி.**

**திரைப்படக் கல்லூரி– அடையாறு, சென்னை.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி.**

285) நாளிதழ்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: நாளிதழ்கள், நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன. அவை உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.**

286) கூற்றுகளை ஆராய்க.

1. மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துக்களை ஜெர்மனியில் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார்.

2. கருத்துப்படங்களுக்காகவும், கட்டுரைகளுக்காகவும் 'இந்தியா' இதழுக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்தது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துக்களை ஜெர்மனியில் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார்.**

**2. கருத்துப்படங்களுக்காகவும், கட்டுரைகளுக்காகவும் 'இந்தியா' இதழுக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்தது.**

287) "வந்தே மாதரம்" என்ற இதழைத் தொடங்கியவர் யார்?

A) திலகர்

**B) அரவிந்தர்**

C) சுவாமி விவேகானந்தர்

D) காந்தியடிகள்

**விளக்கம்: இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் 'கேசரி' அரவிந்தரின் 'வந்தே மாதரம்' சுவாமி விவேகானந்தரின் 'சகோதரர்' போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.**

288) கூற்றுகளை ஆராய்க.

1. ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றை வரைந்தவர் பாரதியார்.

2. சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம் புதுடெல்லியில் உள்ளது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றை வரைந்தவர் பாரதியார்.**

**2. சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம் புதுடெல்லியில் உள்ளது.**

289) வை.மு.கோதைநாயகி பற்றிய கூற்றுகளில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) இவர் 1925இல் 'ஜகன் மோகினி' என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தியவர்.

**B) முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" 1939இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது.**

C) பண்டிதத் தமிழில் ஏனைய பத்திரிக்கைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் எளிய நடையில் பாமரரும் படித்தறியும் வகையில் இவர் எழுதியதும் ஜகன்மோகினியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் ஆகும்.

D) இவரின் காலம் – 1901 முதல் 1960 வரை ஆகும்.

**விளக்கம்: முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜெகன்மோகினி" 1937–இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது**

290) "கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி" என்று கீழ்க்காணும் எந்த நாடுகளின் அரசியல் சூழ்ச்சிகளை பாரதியார் படம் பிடித்துக் காட்டினார்?

A) இலங்கை, இந்தோனேசியா

**B) அமெரிக்கா, ஜப்பான்**

C) இங்கிலாந்து, அமெரிக்கா

D) இரஷ்யா, சீனா

**விளக்கம்: "கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி" (23.03.1907) என்று அமெரிக்கா, ஜப்பான் நாடுகளின் அரசியல் சூழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டினார் பாரதியார்.**

291) கூற்றுகளை ஆராய்க.

1. "ஜகன்மோகினி" யின் துணைவெளியீடாக தயாநிதி என்னும் இதழை வெளியிட்டு, அதன்மூலம் 150–க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை வை.மு.கோதைநாயகி அறிமுகப்படுத்தினார்.

2. ஜி.கஸ்தூரி தி ஹிந்து ஆங்கில நாளிதழில் 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணியாற்றியவர் ஆவார்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: "ஜகன்மோகினி" யின் துணைவெளியீடாக நந்தவனம் என்னும் இதழையும் வெளியிட்டு, அதன்மூலம் 150–க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை வை.மு.கோதைநாயகி அறிமுகப்படுத்தினார்.**

292) யங் இந்தியா என்ற இதழை தொடங்கியவர் யார்??

A) ஜவஹர்லால் நேரு

B) திலகர்

**C) காந்தியடிகள்**

D) சுவாமி விவேகானந்தர்

**விளக்கம்: அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல் நுழைவு, இதழ்களின் வளர்ச்சியின் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென்னாப்பிரிகாவில், 'இந்தியன் ஒபினியன்' என்ற இதழையும், நம் நாட்டில் 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.**

293) கூற்றுகளை ஆராய்க.

1. இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றவர் டி.எஸ் சொக்கலிங்கம் ஆவார்.

2. விண்வெளி, அறிவியல், அரசியல், தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் ஏ.என்.சிவராமன் ஆவார்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றவர் ஏ.என்.சிவராமன் ஆவார்.**

**2. விண்வெளி, அறிவியல், அரசியல், தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் ஏ.என்.சிவராமன் ஆவார்**

294) கூற்றுகளை ஆராய்க.

**1. 40 ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர்.**

2. இவர் எழுதியுள்ள 115 நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.

3. வை.மு.கோதைநாயகியின் முதல் படைப்பு, 'இந்திர மோகனா' என்னும் நாடகமாகும்.

4. வண்ண அச்சுமுறை நடைமுறைக்கு வந்தபோது வண்ணப்படங்களுக்காகவே தி ஹிந்து நாளிதழும் அதன் குழும இதழ்களும் புகழ்பெற்றன.

**A) 1 மட்டும் தவறு**

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 35 ஆண்டுகள் பத்திரிக்கை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர்.**